திரு அருட்பா

7.00,

C.P.O.

சங்கத்தின் அலுவல்கள்

1 திருவருளால் இச்சங்கமானது 14-3-1930 பௌர்ணமி தினம் ஏற்பட்டு அதுமுதல் பிரதி குரு வாரந்தோறும் காலையில் ஏழைமக்கட்கு சங்கநிலையத்தில் ஆகாரமளித்தலும், அன்று காலையிலும் மாலையிலும் திருஅருட்பா பாராயணம் செய்தலும்,

2. பிரதி சுக்கிரவாரந்தோறும் திரு ஒற்றியூரில் இரவு 7-முதல் திருவருட்பா பாராயணம் செய்தலும்,

3. ஐயா அவர்கள் உத்திரவுபடிக்கு : (1) தைப்பூசந் தவருது, வடலூர் சரிசித்தலும், (2) சாலை சகாப்தமாகிய பிரதிவருட வைகாசிமீ 21உ ஆண்டுவிழா நடத்தலும், (3) சுவாமிகள் பிறந்த திருநாளான பிரதி வருட புரட்டாசிமீ சித்திரை நக்ஷத்திரத்தில் சென்னையில் சிறப்பாக விழாக்கொண்டாடுதலும்

4 ஜீவகாருண்ய அன்பர்கள் அழைத்தால் சென்று பாராயணஞ் செய்தலும், சன்மார்க்க உபந்நியாசங்கள் செய்தலும், பல சங்கங்கள் மூலமாக சன்மார்க்கத்தைப் பரவச்செய்தலும்,

5. திருவருட்பாக்களை அச்சிட்டு அடக்கமான விலையில் பரவச்செய்தலும் ஆகிய முதலியனவாம்.

சங்கத்தில் சேர விரும்பும் அன்பர் செலுத்த வேண்டிய மாதச்சந்தா ஆன்மநேயத்துடன், அணா 4.

ஓம்

அருட்பெருஞ்ஜோதி

திரு அருட்பா

திரு ஆயிரம்

பதினோராம் பதிப்பு

சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,
7-99, அம்மன் கோயில் தெரு,
கிருஷ்ணாங்குளம் சமீபம், G.P.O., சென்னை.
ரிஜிஸ்டர்ட்] 11-2-1941 [அணா 5



திரு அருட்பிரகாச வள்ளலார்

உ

அருட்பெருஞ்ஜோதி

திரு அருட்பிரகாச வள்ளலார் அருளிச்செய்த

விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக்கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய— சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார, சங்கற்ப விகற்பங்களும்—எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!

சிதம்பரம் இராமலிங்கம்

ஓம்

திரு அருட்பா

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லாம் செயல் கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் றனையே யேத்து.

இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்
றென்று வருமோ அறியேன் எம்கோவே—துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம்.

சற்குரு தோத்திரம்

பராபரம் கோதகலும் அநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமில்
நிராமயம் காரகம திலாதசஞ் சீவிதநல்
நிராசைகொண் டாருடைய நிகேதனம் சூதமுறல்
வாராதஇன் பாரவினை முனிவில்வந் தேயருளி
மகாபலம் சேரவருள் விராவுசெம் பாதநம
இராமலிங் தார்மனதின் இராதசந் தோடநம
இராமலிங் காயநம இராமலிங் காயநம.

சற்குரு நாதா சற்குரு நாதா
சன்மார்க்க சங்கம் தழைக்கவருள் நாதா.

பரவியோமம் பரம ஜோதிமயம் விபுலம்
பரம்பரம் அனந்தம் அசலம்
பரம லோகாதிக்க நித்திய சாம்பிராச்சியம்
பரபதம் பரம சூக்ஷமம்
பராபர மனாமயம் நிராதர மகோசரம்
பரம தந்திரம் விசித்திரம்
பராமுத நிராகரம் விகாசனம் விகோடணம்
பர சுகோதயம் அக்ஷயம் 12

பரிபவ விமோசனம் குணரகிதம் விசுவம்
பந்தித்துவ பரோ பரீணம்
பஞ்சகிர்த்திய சுத்த கர்த்தத்துவம் தற்
பரம் சிதம்பர விலாசம்
பகர்சுபா வம்பனித மதுலமது விதமம்
பராம்பர நிரா லம்பனம்
பரவு சாக்ஷாத்கார நிரவயவங் கற்
பனாதீத நிரு விகாரம் 16

பாதுரிய அநுபவம் குருதுரிய பதமம்
பகம் பகா தீதவிமலம்
பரம கருணாம்பரம் தற்பதம் கன சொற்
பதாதீதம் இன்ப வடிவம்
பரோக்ஷ ஞானாதீதம் அபரோக்ஷ ஞானானு
பவ விலாசப் பிரகாசம்

பாவனாதிதங் குணாதிதம் உபசாந்தப் 20
பத மகா மௌன ரூபம்
பரம போதம் போத ரகித சகிதம் சம்
பவாதீதம் அப்ர மேயம்
பகரனந் தானந்தம் அமலம் உசிதஞ் சிற்
பதம் சதானந்த சாரம்
பரையாதி கிரணங்க சாங்க சௌபாங்க விம்
பாகார நிருவி கற்பம்
பர சுகா ரம்பம் பரம் பிரம வித்தம் 24
பரானந்த புரண போகம்

பரிமிதா தீதம் பரோதயம் பரகிதம்
பரபரிணம் பராந்தம்
பரமார்ப் புதம் பரமசே தனம் பசுபாச
பாவனம் பரம மோட்சம்
பரமாணு குணாவாதீதம் சிதாகாச
பாஸ்கரம் பரம போகம்
பரிபாக வேதன வரோ தயானந்த 28
பதபாலனம் பரம யோகம்
பரம சாத்திய அதீதானந்த போக்கியம்
பரிகதம் பரிவேத்தியம்
பரகேவலாத் விதானந் தானுபவ சத்த
பாதாக்ர சுத்த பலிதம்

பரம சுத்தாத் விதானந்த அநுபூதிகம்
பரிபூத சிற் குணந்தம்
பரமசித்தாந்த நிகமாந்த சமரச சுத்த
பரமானுபவ விலாசம் ; $\frac{1}{4}$—32

தரமிகும் சர்வ சாதிட்டான சத்தியம்
சர்வ ஆனந்த போகம்
சார்ந்த சர்வாதார சர்வமங்கள சர்வ
சத்திதரம் என் றளவிலாச்
சகுண நிற்குணமுறு சலட்சண விலட்சணத்
தன்மை பலவாக நாடித்
தம்மைநிகர் மறையெலாம் இன்னும் அளவிட
நின்ற சங்கரன் அநாதி யாதி 36
சாமகீதப் பிரியன் மணிகண்ட சீகண்ட
சசிகண்ட சாம கண்ட
சயசய வெனும் தொண்டர் இதயமலர் மேவிய
சடாமகுடன் மதன தகனன்
சந்திர சேகரன் இடபவாகனன் கங்கா
தரன் சூலபாணி இறைவன்
தனிமுதல் உமாபதி புராந்தகன் பசுபதி
சயம்பு மாதேவன் அமலன் 40
தாண்டவன் தலைமாலை பூண்டவன்தொழுமன்பர்
தங்களுக்கு அருள் ஆண்டவன்

தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச்
சைலமெனும் ஒரு வில்லவன்
தக்ஷிண மூர்த்தி அருண்மூர்த்தி புண்ணியமூர்த்தி
தகும் அட்ட மூர்த்தி யானோன்
தலைமைபெறு கணநாயகன் குழகன் அழகன்
மெய்ச்சாமி நந்தேவ தேவன் 44

சம்பு வேதண்டன் பிறப்பிலான் முடிவிலான்
தாணு முக்கண்க ளுடையான்
சதுரன் கடாசல உரிப் போர்வையான் செந்
தழல் காத்தேந்தி நின்றோன்
சர்வ காரணன் விறற் காலகாலன் சர்வ
சம்பிரமன் சர்வேச் சுரன்
தகைகொள் பரமேச்சுரன் சிவபிரான் எம்பிரான்
தம்பிரான் செம்பொற் பதம் 48

தகவுபெறு நிட்பேத நிட்கம்பமாம் பரா
சத்திவடிவாம் பொற் பதம்
தக்கநிட் காடின்ய சம்வேத நாங்க சிற்
சத்திவடிவாம் பொற் பதம்
சாற்றரிய விச்சை ஞானங் கிரியை யென்னுமுச்
சத்திவடிவாம் பொற் பதம்
தடையிலா நிர்விடய சிற்குண சிவானந்த
சத்தி வடிவாம் பொற் பதம் 52

தருவிந்தை மோகினியை மானே அசைவிக்கும்
ஒரு சத்திவடிவாம் பொற்பதம்
தாழ்வில்ஈசானமுதன்மூர்த்திவரை ஐஞ்சத்திசஞ்
சத்தியாம் பொற் பதம்
சவிகற்ப நிருவிகற்பம் பெறும் அனந்தமா
சத்திசத்தாம் பொற் பதம்
தடநிருப வவிவர்த்த சாமர்த்தியத் திருவருட்
சத்தியுருவாம் பொற் பதம் 56

தவாத சாந்தப்பதம் துவாத சாந்தப்பதம்
தருமிணை மலர்ப்பூம் பதம்
சகலர் விஞ்ஞான கலர் பிரளயாகலர் இதய
சாக்ஷியாகிய பூம் பதம்
தணிவிலா அணுபக்ஷ சம்புபக்ஷங்களில்
சமரசமுறும் பூம் பதம்
தருபரம் சூக்குமம் தூலம் இவை நிலவிய
தமக்குள் உயிராம் பூம்பதம் 60

சரவசர அபரிமித விவித ஆன்மப் பகுதி
தாங்குந் திருப் பூம்பதம்
தண்டபிண்டாண்ட அகிலாண்ட பிரமாண்டந்
தடிக்க வருளும் பூம்மதம்
தத்வ தாத்விக சக சிருட்டி திதி சங்கார
சகல கர்த்துரு பூம்பதம்

சகசமல இருளகல நின்மல சுயம்பிரகா
சம்குலவும் நற்பூம் பதம்; ½-64

மரபுறு மதாதீத வெளி நடுவில்
ஆனந்த மாநடனமிடு பூம்பதம்
மன்னும்வினை ஒப்புமல பரிபாகம் வாய்க்க
மாமாயையை மிதிக்கும் பதம்
மலிபிறவி மறலியின் அழுந்தும் உயிர்தமை அரு
ளின்-மருவுற எடுக்கும் பதம்
வளர் ஊர்த்த வீரதாண்டவமுதல் பஞ்சகம்
மகிழ்ந்திட வியற்றும் பதம் 68
வல்லமுயலகன் மீதின் ஊன்றிய திருப் பதம்
வளந்தரத் தூக்கும் பசம்
வல்வினை யெலாம் தவிர்த்து அழியாத சுத்தநிலை
வாய்த்திட வழங்கும் பதம்
மறைதுதிக் கும்பதம் மறைச்சிலம் பொளிர்பதம்
மறைப் பாதுகைச் செம்பதம்
மறைமுடி மணிப்பதம் மறைக்கு மெட்டாப்பதம்
மறைப்பரி யுகைக்கும் பதம் 72
மறையவனுளங் கொண்டபதம் அமிதகோடியாம்
மறையவர் சிரஞ்சூழ் பதம்
மறையவன் சிரசிகாமணி யெனும்பதம் மலர்
கொள்-மமறையவன் வாழ்த்தும் பதம்

இரவுறும் பகலடியர் இருமருங்கினும் உறவ
வென வயங்கிய சீர்ப்பதம்
எம் பந்தமற எமது **சம்பந்தவள்ளல்** மொழி
இயன்மணம் மணக்கும்பதம்
ஈவரசர் எம்முடைய **நாவரசர்** சொற்பதிக
இசைபரி மளிக்கும் பதம்
ஏவலார் புகழ் எமது **நாவலாரூரர்** புகல்
இசை திருப்பாட்டுப் பதம் 100

ஏதவூர் தங்காத **வாதவூர்எங்கோவின்**
இன்சொன்மணி அணியும் பதம்
எல்லூரு மணிமாட நல்லூரின் அப்பர் முடி
யிடைவைகி அருண்மென் பதம்
எடுமேலெனத்தொண்டர்முடிமேன் மறுத்திடவும்
இடைவலிந்து ஏறும் பதம்
எழில்பரவையிசையஆரூர்மறுகி னருள்கொண்டு
இராமுழுதும் உலவும் பதம் 104

இன்றொண்டர்பசியறக் கச்சூரின் மனைதொறும்
இரக்கநடை கொள்ளும் பதம்
இளைப்புறலறிந்து அன்பர் பொதிசோறருந்தமு
னிருந்து பின்னடக்கும் பதம்
எரிவிறகு விற்கவளர் கூடற்றெருத்தொறும்
இயங்கிய விரக்கப்பதம்

இறு வைகையங்கரையின் மண்படப் பல்கால்
எழுந்து விளையாடும் பதம் 108
எங்கே மெய் அன்பருளர் அங்கே நலந்தர
எழுந்தருளும் வண்மைப் பதம்
எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம்
அன்றே இரங்கி ஈந்தருளும் பதம்
என்போன்ற வர்க்குமிகு பொன்போன்ற கருணை
தந்து-இதயத் திருக்கும் பதம்
என்னுயிரை யன்னபதம் என்னுயிர்க்குயிராய்
இலங்குசெம் பதுமப் பதம் 112

என்னறிவெனும் பதம் என்அறிவி னுக்கறிவாய்
இருந்தசெங் கமலப் பதம்
என் அன்பெனும் பதம் என் அன்பிற்கு வித்தாய்
இசைந்த கோகனகப் பதம்
என் தவமெனும் பதம் என் மெய்த் தவப்பயனாய்
இயைந்தசெஞ் சலசப் பதம்
என்னிருகண் மணியானபதம்என் கண்மணிகளுக்
கினிய நல் விருந்தாம் பதம் 116
என் செல்வமாம்பதம் என்மெய்ச் செல்வமுமா
யெனும் தாமரைப் பொற் பதம்
என் பெரிய வாழ்வான பதம் என் களிப்பாம்
இரும்பதம் என் நிதியாம் பதம்

என் தந்தை தாயெனும்இணைப்பதம்என்உறவாம்
இயற்பதம் என்நட்பாம் பதம்
என் குருவெனும் பதம்என் இட்டதெய்வப்பதம்
எனதுகுல தெய்வப் பதம் 120
என் பொறிகளுக்கெலாம் நல்விடயமாம் பதம் என்
எழுமையும் விடாப் பொற்பதம்
என் குறையெலாந் தவிர்த்து ஆட்கொண்ட பதம்
எனக்கு எய்ப்பில் வைப்பாகும் பதம்
எல்லார்க்கும் நல்லபதம் எல்லாஞ்செய்வல்லபதம்
இணையிலாத் துணையாம்பதம்
எழுமனம் உடைந்துடைந்து உருகிநெகிழ்
பத்தர்கட்கு இன்னமுத மாகும் பதம் 124
எண்ணுறிற் பாலில்நறு நெய்யொடு சருக்கரை
இசைந்தென இனிக்கும் பதம்
எற்றமுக் கனிபாகு கன்னல் கற்கண்டுதே
னென்னமது ரிக்கும் பதம்
எங்கள் பதம் எங்கள் பதம் என்று சமயத்தேவர்
இசைவழக்கிடு நற்பதம்
ஈறிலாப்பதம் **எலாம்தரு திருப்பதம் அறிவில்**
இன்புதவு கின்ற பதமே. 1—128

திருச்சிற்றம்பலம்

உ

அருட்பெருஞ்சோதி

திருஅருட்பா

மகாதேவமாலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கருணை நிறைந்து அகம்புறமும் துளும்பி வழிந்து
உயிர்க்கெலாம் களைக ணாகித்
தெருள் நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடை யோய்! சிதையா ஞானப்
பொருள் நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வா யோய்! பொய்ய னேன்றன்
மருள்நிறைந்த மனக்கருங்கற் பாறையும்உட்
கசிந்து உருக்கும் **வடிவத் தோயே!**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1. உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள
உயிராகி உயிர்க்குயிராம் ஒளி தானாகிக்
கலகநிலை அறியாத காட்சியாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ணதாகி

இலகுசிதா காசமதாய்ப் பரமா காச
இயல்பாகி இணையொன்றும் இல்லாதாகி
அலகில்அறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி அமர்ந்த தேவே.

2. **உலகமெலாம்** தனிநிறைந்த உண்மை யாகி
யோகியர்தம்அனுபவத்தின்உவப்பாய்என்றும்
கலகமுறு உபசாந்த நிலைய தாகிக்
களங்கமற்ற அருண்ஞானக் காட்சி யாகி
விலகலுறு நிபிட ஆனந்தமாகி
மீதானத்து ஒளிர்கின்ற விளக்க மாகி
இலகு பரா பரமாய்ச் சிற்பரமாய் அன்பர்
இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே.

3. **வித்தாகி** முளையாகி விளைவ தாகி
விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறை விலாத
சத்தாகிச் சித்தாகி இன்ப மாகிச்
சதாநிலையாய் எவ்வுயிர்க்குஞ் சாக்ஷியாகி
முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ
முழுவயிரத் தனி மணியாய்முளைத்த தேவே.

4. **வேதாந்த** நிலையாகிச் சித்தாந்தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கும் நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமய நெறிக்கு அமையா தென்றும்
மௌன வியோமத்தினிடை வயங்குந் தேவே.

5. **தோன்று** துவி தாத்துவித மாய் விசிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்ற சுத்தாத்துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்றும் இலதாய் என்றும்
உள்ளதாய் நிரதிசய உணர்வாய் எல்லாம்
ஈன்றருளுந் தாயாகித் தந்தையாகி
எழிற்குருவாய்த்தெய்வதமாய்இலங்குந்தேவே.

6. **பரமாகிச்** சூக்குமமாய்த் தூல மாகிப்
பரமார்த்த நிலையாகிப் பதத்தின் மேலாஞ்
சிரமாகித் திருவருளாம் வெளியாய் ஆன்ம
சிற்சத்தியாய்ப் பரையின் செம்மை யாகித்

திரமாகித் தற்போத நிவர்த்தி யாகிச்
சிவமாகிச் சிவானுபவச் செல்வ மாகி
அரமாகி ஆனந்த போத மாகி
ஆனந்தா தீதமதாய் அமர்ந்த தேவே.

7. **இந்தியமாய்க்** கரணாதி அனைத்து மாகி
இயல் புருடனாய்க் கால பரமு மாகிப்
பந்தமற்ற வியோமமாய்ப் பரமாய் அப்பாற்
பரம்பரமாய் விசுவமுண்ட பான்மை யாகி
வந்தஉப சாந்தமதாய் மௌன மாகி
மகாமௌன நிலையாகி வயங்கா நின்ற
அந்தமில் **தொம்பத**மாய்த் **தத்பத**மாய் ஒன்றும்
அசிபதமாய் அதீதமாய் அமர்ந்த தேவே.

8. **நின்மயமாய்** என்மயமாய் ஒன்றுங் காட்டா
நிராமயமாய் நிருவிகற்ப நிலையாய் மேலாந்
தன்மயமாய்த் தற்பரமாய் விமல மாகித்
தடத்தமாய்ச் சொரூபமாய்ச் சகசமாகிச்
சின்மயமாய்ச் சிற்பரமாய் அசல மாகிச
சிற்சொலிதமாய் அகண்ட சிவமாய் எங்கும்
மன்மயமாய் வாசகா தீத மாகி
மனாதீதமாய் அமர்ந்த மௌனத் தேவே.

9. **அளவிறந்த** நெடுங்காலம் சித்தர் யோகர்
அறிஞர் மலரயன்முதலோர் அனந்த வேதம்
களவிறந்துங் கரணாதி இறந்தும் செய்யும்
கடுந்தவத்துங் காண்பரிதாங் கடவு ளாகி
உளவிறந்த எம்போல்வார் உள்ளத் துள்ளே
ஊறுகின்ற தெள்ளமுத ஊறலாகிப்
பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந் தானாய்ப்
பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரியதேவே.

10. **வாயாகி** வாயிறந்த மௌன மாகி
மதமாகி மதங்கடந்த வாய்மை யாகிக்
காயாகிப் பழமாகித் தருவாய் மற்றைக்
கருவி கரணாதிகளின் கலப்பாய்ப் பெற்ற
தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித்
தானாகி நானாகிச் சகல மாகி
ஓயாத சத்தியெலாம் உடைய தாகி
ஒன்றாகிப் பலவாகி ஓங்குத் தேவே.

11. **அண்டங்கள்** பலவாகி அவற்றின் மேலும்
அளவாகி அளவாத அதீத மாகிப்
பிண்டங்கள் அனந்தவகை யாகிப் பிண்டம்
பிறங்குகின்ற பொருளாகிப் பேதந் தோற்றும்

பண்டங்கள் பலவாகி இவற்றைக் காக்கும்
பதியாகி ஆனந்தம் பழுத்துச் சாந்தங்
கொண்டெங்கும் நிழல்பரப்பித் தழைந்த ஞானக்
கொழுங்கடவுள் தருவாகிக் குலவுந் தேவே.

12. **பொன்னாகி** மணியாகிப் போக மாகிப்
புறமாகி அகமாகிப் புனிதமாகி
மன்னாகி மலையாகிக் கடலுமாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி யெங்கும்
மின்னாகிப் பரவி இன்ப வெள்ளந் தேக்க வியன்
கருணைப் பொழிமுகிலாய் விளங்குந்தேவே.

13. **அரிதாகி** அரியதினும் அரிய தாகி
அநாதியாய் ஆதியாய் அருள தாகிப்
பெரிதாகிப் பெரியதினும் பெரியதாகிப்
பேதமாய் அபேதமாய்ப் பிறங்கா நின்ற
கரிதாகி வெளிதாகிக் கலைக ளாகிக்
கலைகடந்த பொருளாகிக் கரணாதீதத்
தெரிதான வெளிநடுவில் அருளாம் வண்மைச்
செழுங்கிரணச் சுடராகித் திகழுந் தேவே.

14. **உருவாகி** உருவினில் உள்ளுருவ மாகி
உருவத்தில் உருவாகி உருவுள் ஒன்றாய்
அருவாகி அருவினில்உள் ளருவமாகி
அருவத்தில் அருவாகி அருவுள் ஒன்றாய்க்
குருவாகிச் சத்துவ சிற் குணத்த தாகிக்
குண ரகிதப் பொருளாகிக் குலவா நின்ற
மருவாகி மலராகி வல்லி யாகி
மகத்துவமாய் அணுத்துவமாய் வயங்குந்தேவே.

15. **சகலமாய்க்** கேவலமாய்ச் சுத்த மாகிச்
சராசரமாய் அல்லவாய்த் தானே தானாய்
அகலமாய்க் குறுக்கமாய் நெடுமையாகி
அவையனைத்தும் அணுகாத அசல மாகி
இகலுறாத் துணையாகித் தனிய தாகி [றும்
எண்குணமாய்எண்குணத்தெம்இறையாய்என்
உகலிலாத் தண்ணருள் கொண்டுஉயிரை யெல்லாம்
ஊட்டி வளர்த்திடுங் கருணை ஓவாத் தேவே.

16. **வாசகமாய்** வாச்சியமாய் நடுவாய் அந்த
வாசக வாச்சியங் கடந்த மௌன மாகித்
தேசகமாய் இருளகமாய் இரண்டுங் காட்டாச்
சித்தகமாய் வித்தகமாய்ச் சிறிதும் பந்த

பாசமுருப் பதியாகிப் பசுவு மாகிப்
பாச நிலையாகி ஒன்றும் பகரா தாகி
நாசமிலா வெளியாகி ஒளிதா னாகி
நாதாந்த முடிவில் நடம் நவிற்றுந் தேவே.

17. **சகமாகிச்** சிவனும் ஈச னாகிச்
சதுமுகனுந் திருமாலாய் அரன் தானாகி
மகமாயை முதலாய்க் கூடத்த னாகி
வான் பிரமமாகி அல்லாவழக்கு மாகி
இகமாகிப் பரமாகிச் சமய கோடி
எத்தனையுமாகி அவை எட்டா வான் கற்
பகமாகிப் பரமாகிப் பரம மாகிப்
பராபரமாய்ப் பரம்பரமாய்ப் பதியுந் தேவே.

18. **விதியாகி** அரியாகிக் கிரீசனாகி
விளங்கும் மகேச்சுரனாகி விமல மான
நிதியாகும் சதாசிவனும் விந்துவாகி
நிகழ் நாதமாய்ப் பரையாய் நிமலா னந்தப்
பதியாகும் பரசிவமாய்ப் பரமாய் மேலாய்ப்
பக்கம் இரண்டாய் இரண்டும் பகரா தாகிக்
கதியாகி அளவிறந்த கதிக ளெல்லாம்
கடந்துநின்றுநிறைந்த பெருங்கருணைத்தேவே.

தயவைப்பெறுவதற்கே தேவரும் மனிதராக விரும்புவர்

19. **மானாகி** மோகினியாய் விந்து வாகி
மற்றவையாற் காணாத வானமாகி
நானாகி நானல்ல னாகி நானே
நானாகும் பதமாகி நான்றான் கண்ட
தானாகித் தானல்ல னாகித் தானே
தானாகும் பதமாகிச் சகச ஞான
வானாகி வானடுவில் வயங்கு கின்ற
மௌன நிலையாகி எங்கும் வளருந் தேவே.

20. **மந்திரமாய்ப்** பதமாகி வன்ன மாகி
வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவனமாகிச்
சந்திரனாய் இந்திரனாய் இரவி யாகித்
தானவராய் வானவராய்த் தயங்கா நின்ற
தந்திரமாய் இவையொன்றும் அல்ல வாகித்
தானாகித் தனதாகித் தானன் காட்டா
அந்தரமாய் அப்பாலாய் அதற்கப் பாலாய்
அப்பாலுக் கப்பாலாய் அமர்ந்த தேவே.

21. **மலைமேலும் கடல்மேலும் மலரின்மேலும்**
வாழ்கின்ற மூவுருவின் வயங்கும் கோவே
நிலைமேலும் நெறிமேலும் நிறுத்து கின்ற
நெடுந்தவத்தோர்நிறைமேலும்நிகழ்த்தும் வேதக்

சாதிமதசமய பேதங்களே தயவுக்குந் தடை

கலைமேலும் எம்போல்வார் உளத்தின் மேலும்
கண்மேலும் தோள்மேலும் கருத்தின்மேலும்
தலைமேலும் உயிர்மேலும் உணர்வின் மேலும்
தகும்அன்பின்மேலும்வளர்தாண்மெய்த்தேவே.

22. **பொற்குன்றே** அகம்புறமும் பொலிந்து நின்ற
பூரணமே ஆரணத்துட் பொருளே என்றும்
கற்கின்றோர்க்கு இனியசுவைக் கரும்பே தான
கற்பகமே கற்பகத் தீங்கனியே வாய்மைச்
சொற்குன்ரு நாவகத்தண் மாரு இன்பம்
தோற்றுகின்ற திருவருட்சீர்ச்சோதியேவிண்
நிற்கின்ற சுடரே அச்சுடருள் ஓங்கும்
நீளொளியே அவ்வொளிக்குள் நிறைந்ததேவே.

23. **தேசுவிரிந்து** இருளகற்றி என்றும் ஓங்கித்
திகழ்கின்ற செழுங்கதிரேசெறிந்த வாழ்க்கை
மாசுவிரித்திடும் மனத்திற் பயிலாத் தெய்வ
மணிவிளக்கே ஆனந்த வாழ்வே எங்கும்
காசுவிரித்திடும் ஒளிபோல் கலந்து நின்ற
காரணமே சாந்தமெனக் கருதா நின்ற
தாசுவிரித்து உடுக்கின்றோர் தம்மை நீங்காச்
சுகமயமே அருட்கருணை துலங்குந் தேவே.

கண்மூடி வழக்கமேலாம் மண்மூடிப்போக

24. **கோவே** எண் குணக்குன்றே குன்ரு ஞானக்
கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்தமோனக்
காவே மெய்அறிவின்ப மயமே என்றன்
கண்ணே முக்கண் கொண்ட கரும்பேவானத்
தேவே அத்தேவுக்குந் தெளிய வொண்ணுத்
தெய்வமே வாடாமல் திகழ்சிற்போதப்
பூவே அப்பூவிலுறும் மணமே எங்கும்
பூரணமாய் நிறைந்தருளும் புனிதத்தேவே.

25. **வானே** அவ் வானுலவுங் காற்றே காற்றின்
வரு நெருப்பே நெரும்புறும் நீர்வடிவே நீரிற்
ருனேயும் புவியே அப் புவியிற் றங்கும்
தாபரமே சங்கமமே சாற்றுகின்ற
ஊனேநல்லுயிரே உள்ளொளியே உள்ளத்து
உணர்வே அவ் வுணர்வு கலந்து ஊறுகின்ற
தேனே முக்கனியே செங்கரும்பே பாகின்
தீஞ்சுவையேசுவை அனைத்துந் திரண்டதேவே.

26. **விண்ணே** விண்ணுருவேவிண் முதலேவிண்ணுள்
வெளியே அவ்வெளிவிளங்கு வெளியேஎன்றன்
கண்ணேகண்மணியே கண்ணொளியே கண்ணுட்
கலந்துநின்றகதிரோ அக்கதிரின் வித்தே

சைவநெறி நாடாதவரை நண்ணுதே

தண்ணே தண்மதியே அம்மதியிற் பூத்த
தண்ணமுதே தண்ணமுத சாரமே சொற்
பண்ணே பண்ணிசையே பண்மயமே பண்ணின்
பயனே மெய்த்தவர் வாழ்த்திப் பரவுந் தேவே.

27. மானையந்தவர் உளத்தே மலர்ந்த செந்தா
மரைமலரின் வயங்குகின்ற மணியே ஞானப்
பூணே மெய்ப் பொருளே அற்புதமே மோனப்
புத்தமுதே ஆனந்தம் பொலிந்த பொற்பே
ஆணே பெண்ணுருவமே அலியே ஒன்றும்
அல்லாத பேரொளியே அனைத்துந் தாங்குந்
தாணே சிற்சுகமே அச்சுகமேற் பொங்கும்
சொரூபானந்தக் கடலே சோதித் தேவே.

28. பூதமே அவை தோன்றிப் புகுந் தொடுங்கும்
புகலிடமே இடம்புரிந்த பொருளே போற்றும்
வேதமே வேதத்தின் விளைவே வேத
வியன்முடிவே அம் முடிவின்விளங்குங்கோவே
நாதமே நாதாந்த நடமே அந்த
நடத்தினையுள் நடத்துகின்ற நலமே ஞான
போதமே போதமெலாங் கடந்து நின்ற
பூரணமே யோகியருள் பொலிந்த தேவே.

29. ஞாலமே ஞாலமெலாம் விளங்க வைத்த
நாயகமே கற்பமுதல் நவிலா நின்ற
காலமே காலமெலாங் கடந்தஞானக்
கதியே மெய்க்கதியளிக்குங் கடவுளேசிற்
கோலமே குணமே உட்குறியே கோலங்
குணங்குறிகள் கடந்துநின்ற குருவே அன்பர்
சீலமே மாலறியா மனத்திற் கண்ட
செம்பொருளே உம்பர்பதஞ்செறிக்குந் தேவே.

30. தத்துவமே தத்துவா தீதமேசிற்
சயம்புவே எங்கும்நிறை சாட்சியே மெய்ச்
சத்துவமே சத்துவத்தின் பயனும் இன்பந்
தந்தருளும் பெறுவாழ்வாஞ் சாமியே என்
சித்தமிலே தெளிவிக்கும் ஒளியே சற்றுந்
தெவிட்டாத தெள்ளமுதே தேனே என்றுஞ்
சுத்தநெறி திறம்பாதார் அறிவிற் றோய்ந்த
சுகப்பொருளே மெய்ஞ்ஞானந்துலங்குந் தேவே.

31. யோகமே யோகத்தின் பயனே யோகத்
தொருமுதலே யோகத்தி னோங்குந் தூய
போகமே போகத்தின் பொலிவே போகம்
புரிந்தருளும் புண்ணியமே புனித ஞான

யாகமே யாகத்தின் விளைவே யாகத்(து)
இறையே அவ்விறை புரியும் இன்பே அன்பர்
மோகமே மோகமெலாம் அழித்து வீறும்
மோனமே மோனத்தின் முளைத்த தேவே.

32. **காட்சியே** காண்பதுவே ஞேயமே உட்
கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பேஒங்கும்
மாட்சியே உண்மை அறிவின்ப மென்ன
வயக்குகின்ற வாழ்வே மாமௌனக்காணி
ஆட்சியே ஆட்சி செயும் அரசே சுத்த
அறிவே மெய்யன்பே தெள்ளமுதே நல்ல
சூட்சியே சூட்சியெலாங் கடந்து நின்ற
துரியமே துரியமுடிச் சோதித் தேவே.

33. **மறைமுடிக்குப்** பொறுத்த முறும் மணியே ஞான
வாரிதியே அன்பர்கள் தம் மனத்தே நின்ற
குறைமுடிக்குங் குணக்குன்றே குன்று மோனக்
கோமளமேதூய சிவக்கொழுந்தே **வெள்ளைப்**
பிறைமுடிக்கும் பெருமானே **துளவமாலைப்**
பெம்மானே **செங்கமலப்** பிரானே இந்த
இறைமுடிக்கும் மூவர்கட்கும் மேலாய் நின்ற
இறையே இவ்வுருவும்இன்றி இருந்ததேவே.

34. **கோதகன்ற** யோகர்மனக் குகையில் வாழுங்
குருவே **சண்முகங்** கொண்ட கோவேவஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியி லூறும்
வானமுதே ஆனந்த மழையே மாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்கும் ஞான
வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சில்
தீதகன்ற மெய்யடியார் தமக்கு வாய்த்த
செல்வமே எல்லையிலாச் சீர்மைத் தேவே.

35. **அருளருவி** வழிந்து வழிந்து ஒழுக ஓங்கும்
ஆனந்தத் தனிமலையே அமலவேதப்
பொருளளவு நிறைந்து அவற்றின் மேலும் ஓங்கிப்
பொலிகின்ற பரம் பொருளே புரணமாகி
இருளறு சிற்பிரகாச மயமாம் சுத்த
ஏகாந்தப் பெருவெளிக்குள் இருந்த வாழ்வே
தெருளளவும் உளமுழுதுங் கலந்துகொண்டு
தித்திக்குஞ் செழுந்தேனே தேவதேவே.

36. **அளவையெலாங்** கடந்து மனங் கடந்து மற்றை
அறிவையெலாங் கடந்துகடந்து அமலயோகர்
உளவையெலாங் கடந்து பதங்கடந்து மேலே
ஒன்று கடந்து இரண்டுகடந்து உணரச்சூழ்ந்த

கலைகளையெலாங் கடந்து அண்ட பிண்டமெல்லாங்
கடந்து நிறைவான சுகக்கடலே அன்பர்
களைவையெலாம் இருளகற்றும் ஒளியே மோன
வாழ்வே என் உயிர்க்குயிராய் வதியுந் தேவே.

37. வன்புகலந்து அறியாத மனத்தோர் தங்கள்
மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற
என்புகலந்து ஊன்கலந்து புலன்க ளோடும்
இந்திரியம் அவைகலந்து உள் இயங்கு கின்ற
அன்புகலந்து அறிவுகலந்து உயிர் ஐம்பூதம்
ஆன்மாவுங் கலந்து கலந்து அண்ணித்து ஊறி
இன்புகலந்து அருள்கலந்துத் தளும்பிப் பொங்கி
எழுங்கருணைப் பெருக்காறே இன்பத் தேவே.

38. தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத்
தடம் பொழிற்பூ மணம் வீசத் தென்றல் வீச
எண்ணமுதப் பளிக்கு நிலா முற்றத்தே இன்
னிசை வீசத் தண்பனிநீர் எடுத்து வீசப்
பெண்ணமுதம் அனையவர் விண்ணமுதம் ஊட்டப்
பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட் டோடக்
கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்தும் இன்பங்
கலந்துகொளத் தருங்கருணைக் கடவுள்தேவே.

39. அண்டமெலாங்கண்ணுகக்கொளினும் காண்டற்கு
அணுத்துணையுங் கூடாவென் றனந்தவேதம்
விண்டலறி ஓலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்துவிளங்கும் ஒன்
றே, கண்டவடிவாய் அகண்டமயமாய் எங்கும்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவுளே எஞ்
சண்டவினைத்தொடக்கறச் சின்மயத்தைக் காட்டுஞ்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே.

40. உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க
உளங்கனிய மெய்யன்பர் உள்ளத் தூடே
கடலனைய பேரின்பந் தளும்ப நாளுங்
கருணைமலர்த் தேன்பொழியுங் கடவுட் காவே
விடலரிய எம்போல்வார் இதயந் தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதம்
தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித்து ஒளிர்கின்ற சோதித் தேவே.

41. பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப்பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்

தங்க நிழல்பரப்பி மயற்சோடை யெல்லாம்
தணிக்கின்ற தருவே பூந்தடமே ஞானச்
செங்குமுதம் மலரவரும் மதியே யெல்லாஞ்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே.

42. **பற்றறியா** முத்தர்தமை யெல்லாம் வாழைப்
பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்
பெருமானே ஆனந்தப் பேற்றின் வாழ்வே
உற்றறியாது இன்னுமின்னும் மறைக ளெல்லாம்
ஓலமிட்டுத் தேடநின்ற ஒன்றே ஒன்றுங்
கற்றறியாப் பேதையேன் றனக்கும் இன்பங்
கனிந்தளித்த அருட்கடலேகருணைத்தேவே.

43. **மெய்யுணர்ந்த** வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக்கலந்துகொண்ட வெளியேமுற்றும்
பொய்யுணர்ந்த எமைப்போல்வார்தமக்கும் இன்பம்
புரிந்தருளுங் கருணைவெள்ளப் பொற்பேஅன்
பர், கையுறைந்து வளர்நெல்லிக் கனியே உள்ளங்
கரைந்துகரைந்து உருக அவர்கருத்தினூடே
உய்யும்நெறி ஒளிகாட்டி வெளியும் உள்ளும்
ஓங்குகின்ற சுயஞ்சுடரே உண்மைத் தேவே.

---

44. **பேராய** அண்டங்கள் பலவும் பிண்ட
பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டத்தின்
வாராய பல பொருளும் கடலும் மண்ணும்
மலையுளவும் கடலுளவும் மணலும் வானும்
ஊராத வான்மீனும் அணுவும் மற்றை
உள்ளனவும் அளந்திடலாம் ஓகோ உன்னை
யாராலும் அளப்பரிது என்று அனந்த வேதம்
அறைந்து இளைக்க அதிதூர மாகுந் தேவே.

45. **கற்பங்கள்** பலகோடி செல்லத் தீய
கனலின்நடு ஊசியின்மேற் காலை ஊன்றிப்
பொற்பற மெய் உணவின்றி உறக்கமின்றிப்
புலர்த்து எலும்பு புலப்பட ஐம்பொறியை ஓம்பி
நிற்பவருக்கு ஒளித்து மறைக்கு ஒளித்துயோக
நீண்முனிவர்க்கு ஒளித்து அமரர்க்கு ஒளித்து
மேலாஞ், சிற்பதத்திற் சின்மயமாய் நிறைந்து ஞானத்
திருவாளர் உட்கலந்த தேவ தேவே.

46. **பாங்குளநாம்** தெரிதும் எனத் துணிந்துகோடிப்
பழமறைகள் தனித்தனியே பாடிப் பாடி
ஈங்குள தென்று ஆங்குளதென்று ஓடி யோடி
இளைத்துஇளைத்துத் தொடர்ந்துதொடர்ந்துஎட்டுங்

தோறும், வாங்குபர வெளிமுழுதும்நீண்டு நீண்டு
மறைந்து மறைந்து ஒளிக்கின்ற மணியேஎங்குந்
தேங்கு பரமானந்த வெள்ளமே சச்
சிதானந்த அருட்சிவமே தேவ தேவே.

47. உருத்திரர் நாரணர் பிரமர் விண்ணோர் வேந்தர்
உறுகருடர் காந்தருவர் இயக்கர் பூதர்
மருத்துவர் யோகியர் சித்தர் முனிவர் மற்றை
வானவர்கள் முதலோர்தம் மனத்தால் தேடிக்
கருத்தழிந்து தனித்தனியே சென்று வேதங்
களைவினவ மற்றவையுங் காணேம் என்று
வருத்தமுற்று ஆங்குஅவரோடு புலம்ப நின்ற
வஞ்சவெளியே இன்ப மயமாந் தேவே.

48. தோன்றுபர சாக்கிரமுங் கண்டோம் அந்தச்
சொப்பனமுங் கண்டோம் மேற்சுழுத்தி கண்டோம்
ஆன்றபர துரியநிலை கண்டோம் அப்பால்
அதுகண்டோம் அப்பாலாம் அதுவுங்கண்டோம்
என்றஉப சாந்தநிலை கண்டோம் அப்பால்
இருந்தநினைக் காண்கிலோம் என்னே என்று
சான்ற உபநிடங்களெல்லாம் வழுத்த நின்ற
தன்மயமே சின்மயமே சகசத் தேவே.

ஏழைகளின் பசி நீக்குவதே கடவுள் வழிபாடு

49. என்னுயிர்நீ என்னுயிர்க்கோர் உயிரும்நீ என்
இன்னுயிர்க்குத் துணைவன்நீ என்னை ஈன்ற
அன்னைநீ என்னுடைய அப்பன்நீ என்
அரும்பொருள்நீ என்இதயத்து அன்பும்நீ என்
நன்னெறிநீ எனக்குரிய உறவும்நீ என்
நற்குருநீ எனைக்கலந்த நட்பும்நீ என்
றன்னுடைய வாழ்வும்நீ என்னைக் காக்குந்
தலைவன்நீ கண்மூன்று தழைத்த தேவே.

50. ஆனேறும் பெருமானே அரசே என்றன்
ஆருயிருக் கொருதுணையே அமுதேகொன்றைத்
தேனேறும் மலர்ச்சடையெஞ் சிவனே தில்லைச்
செழுஞ்சுடரே ஆனந்தத் தெய்வமே என்
ஊனேறும் உயிர்க்குள்நிறை ஒளியே எல்லாம்
உடையானே நின்னடிச்சீர் உன்னி அன்பர்
வானேறு கின்றார் நான்ஒருவன் பாவி
மண்ணேறி மயக்கேறி வருந்துற் றேனே.

51. செஞ்சடையெம் பெருமானே சிறுமான்ஏற்ற
செழுங்கமலக் கரத்தவனே சிவனே சூழ்ந்து
மஞ்சடையும் மதிற்றில்லை மணியே ஒற்றி
வளர்மருந்தே என்னுடைய வாழ்வே வேட்கை

மனதை அடக்கினவனே மனிதன்

அஞ்சடைய வஞ்சியர் மாலடைய வஞ்ச
மடையநெடுந் துயரடைய அகன்ற பாவி
நெஞ்சடைய நினைதியோ நினைதி யேல்மெய்ந்
நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீத னன்றே.

52. **அன்னையினும்** பெரிதினிய கருணை ஊட்டும்
ஆரமுதே என்னுறவே அரசே இந்த
மன்னுலகில் அடியேனை என்னே துன்ப
வலையில் அகப்படஇயற்றி மறைந்தாய் அந்தோ
பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்தலாற்றேன்
என்னைஉளங் கொள்ளுதியோ கொள்கி லாயோ
என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேனே.

53. **மத்தேறி** அலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்தினோடு
பித்தேறி உழல்கின்ற மனத்தால் அந்தோ
பேயேறி நலிகின்ற பேதை யானேன்
வித்தேறி விளைவேறி மகிழ்கின் றோர்போல்
மேலேறி அன்பரெலாம் விளங்கு கின்றார்
ஒத்தேறி உயிர்க்குயிராய் நிறைந்த எங்கள்
உடையானே இதுதகுமோ உணர்கி லேனே.

அருந்தல் பொருந்தலில் ஜாக்கிரதை

54. **மதியணிந்த** முடிக்கனியே மணியே எல்லாம்
வல்ல அருட்குருவே நின்மலர்த்தாள் வாழ்த்திக்
கதியணிந்தார் அன்பரெலாம் அடியேன் ஒன்றுங்
கண்டறியேன் கருமத்தாற் கலங்கி அந்தோ
பொதியணிந்து திரிந்துஉழலும் எருது போலப்
பொய்யுலகிற் பொய்சுமந்து புலம்பா நின்றேன்
துதியணிந்த நின்னருள் என்றனக்கும் உண்டோ
இன்றெனில் இப்பாவியேன் சொல்வதென்னே.

55. **என்னரசே** என்னுயிரே என்னை ஈன்ற
என்தாயே என்குருவே எளியேன் இங்கே
தன்னரசே செலுத்தி எங்கும் உழலா நின்ற
சஞ்சல நெஞ்சகத்தாலே தயங்கி அந்தோ
மின்னரசே பெண்ணமுதே என்று மாதர்
வெய்ய சிறுநீர்க் குழிக்கண் விழவே எண்ணிக்
கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே
குப்புறுகின் றேன்மயலிற் கொடிய னேனே.

56. **அல்விலங்கு** செழுஞ்சுடராய் அடியா ருள்ளத்து
அமர்ந்தருளுஞ் சிவகுருவே அடியேன் இங்கே
இல்விலங்கு மடந்தை யென்றே எந்தாய் அந்த
இருப்பு விலங்கினை ஒழித்தும் என்னே பின்னும்

ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம்—அளவோடிரு

மல்விலங்கு பரத்தையர்தம் ஆசை என்னும்
வல்விலங்கு பூண்டந்தோ மயங்கி நின்றேன்
புல்விலங்கும் இதுசெய்யா ஓகோ இந்தப்
புலைநாயேன் பிழைபொறுக்கிற் புதிதே அன்றே

57. **வன்கொடுமை** மலம்நீக்கி அடியார் தம்மை
வாழ்விக்குங் குருவே நின் மலர்த்தாள் எண்ண
முன்கொடு சென்றிடும் அடியேன் றன்னை இந்த
மூடமனம் இவ்வுலக முயற்சி நாடிப்
பின்கொடுசென்று அலைத்துஇழுக்குது அந்தோநாயேன்
பேய்பிடித்த பித்தனைப்போல் பிதற்றா நின்றேன்
என்கொடுமை என்பாவம் எந்தாய் எந்தாய்
என்னுரைப்பேன்எங்குறுவேன்என்செய்வேனே.

58. **உய்குவித்து** மெய்யடியார் தம்மை எல்லாம்
உண்மைநிலைபெற அருளும் உடையாய் இங்கே
மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கில் ஆழ்ந்து
வருந்து கின்றேன் அல்லால்உன் மலர்த்தாள்எண்
ணிக், கைகுவித்துக் கண்களில் நீர்பொழிந்து நான்ஓர்
கணமேனுங் கருதிநினைக் கலந்த துண்டோ
செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கிலாயோ
திருவுளத்தை அறியேன் என் செய்கு வேனே.

59. **அருள் வெளியில்** ஆனந்த வடிவி னால்நின்
றாடுகின்ற பெருவாழ்வே அரசே இந்த
மருள்வலையில் அகப்பட்ட மனத்தால் அந்தோ
மதிகலங்கி மெய்ந்நிலைக்கோர் வழிகாணாதே
இருள்நெறியிற் கோலிழந்த குருட்டு ஊமன்போல்
எண்ணாதெல் லாம்எண்ணி ஏங்கி யேங்கி
உருள்சகடக் கால்போலுஞ் சுழலாநின்றேன்
உய்யும்வகை அறியேன் இவ் வொதிய னேனே.

60. **கற்றவனை** தனக்கும் உணவளிக்கும் உன்றன்
கருணைநிலைதனை அறியேன் கடையேன் இங்கே
எற்றவளை எறும்பேபோல் திரிந்து நாளும்
இளைத்துநினது அருள்காணாது எந்தாய் அந்தோ
பெற்றவளைக் காணாத பிள்ளை போலப்
பேதுறுகின்றேன் செய்யும் பிழையை நோக்கி
இற்றவளைக் கேள்விடல்போல் விடுதியேல் யான்
என்செய்வேன் எங்குறுவேன் என்சொல்வேனே.

61. **அடிமைசெயப்** புகுந்திடும் எம்போல்வார் குற்றம்
ஆயிரமும் பொறுத்தருளும் அரசே நாயேன்
கொடுமைசெயும் மனத்தாலே வருந்தி அந்தோ
குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன்

கடுமைசெயப் பிறர்துணிந்தால் அடிமைதன்னைக்
கண்டிருத்தல் அழகன்றே கருணைக் கெந்தாய்
செடிமையுளப் பாதகனேன் என்செய்வேன் நின்
திருவுளத்தை அறிந்திலேன் திகைக்கின்றேனே.

62. **கூம்பாத** மெய்ந்நெறியோர் உளத்தே என்றும்
குறையாத இன்பளிக்கும் குருவே ஆசைத்
தாம்பாலே ஆப்புண்டு வருந்தி நாயேன்
தையலார் மையலெனுஞ் சலதி ஆழ்ந்து
ஓம்பாமல் உவர்நீருண்டு உயங்கு கின்றேன்
உன்னடியர் அக்கரைமேல் உவந்து நின்றே
தீம்பாலும் சருக்கரையும் தேனும் நெய்யும்
தேக்குகின்றார் இது தகுமோ தேவதேவே.

63. **வெள்ளம்** அணி சடைக்கனியே மூவ ராகி
விரிந்தருளும் ஒருதனியே விமல னேனைக்
கள்ளமனக் குரங்காட்டும் ஆட்ட மெல்லாம்
கண்டிருந்தும் இரங்கிலையேற் கவலை யாலே
உள்ளம் மெலிந்து உழல்கின்ற சிறியேன் பின்னர்
உய்யும்வகை எவ்வகை ஈது உன்னுந் தோறும்
பொன்னென மெய்வியர்க்க உளம்பதைக்கச் சோபம்
பொங்கி வழிகின்றது நான் பொறுக்கிலேனே.

மந்தனே ! அக்கிலத்தை அக்கிரமத்தில் விடாதே

64. **எனையறியாப்** பருவத்தே ஆண்டு கொண்ட
என்னரசே என்குருவே இறையே இன்று
மனையறியாப் பிழைகருதும் மகிழ்நன்போல
மதியறியேன் செய்பிழையை மனத்துட்கொண்டே
தனையறியா முகத்தவர்போல் இருந்தாய் எந்தாய்
தடங்கருணைப்பெருக்கடற்குத்தகுமோகண்டாய்
அனையறியாச் சிறு குழவியாகி இங்கே
அடிநாயேன் அரற்றுகின்றேன் அந்தோஅந்தோ.

65. **தீவினை** நல்வினை எனும்வன் கயிற்றால் இந்தச்
சீவர்களை ஆட்டுகின்ற தேவே நாயேன்
ஏவினைநேர் கண்மடவார் மையற் பேயால்
இடருழந்தும் சலிப்பின்றி என்னே இன்னும்
நாவினை என்பால் வருந்திக் கறண்டு கின்ற
நாய்க்கு நகைதோன்ற நின்றுநயக்கின்றேன்நான்
ஆவினைவிட்டு எருது கறந்திடுவான் செல்லும்
அறிவிலிக்கும் அறிவிலியேன் ஆன வாறே.

66. **எம்பெருமான்**நின்விளையாட்டுஎன்சொல்கேன்நான்
ஏதும் அறியாச்சிறியேன் எனைத்தான் இங்கே
செம்புனலால் குழைத்த புலால்சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டில் இருட்டறையில்சிறைசெய்து அந்தோ

தீவிரதரனே! எவ்வகையிலும் சுக்கிலம் வெளிவிடாதே

கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த அந்தக்
கரணமுதற் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பு இயற்றக் காமாதி அரட்ட ரெல்லாம்
மடிபிடித்துவருத்தவென்றோவளர்த்தாய் எந்தாய்

67. **அம்பரத்தே** ஆனந்த வடிவால் என்றும்
ஆடுகின்ற மாமணியே அரசே நாயேன்
இம்பரத்தம் எனும் உலக நடையில் அந்தோ
இடருழந்தேன் பன்னெறியில் எனை இழுத்தே
பம்பரத்தின் ஆடிஅலைப் படுத்தும் இந்தப்
பாவிமனம் எனக்கு வயப் புடுவதில்லை
கொம்பரற்ற இளங்கொடி போல்தளர்ந்தேன் என்னைக்
குறிக்கொள்ளக் கருத்திலையோ குறித்திடாயோ.

68. **கண்ணுடைய** நுதற்கரும்பே மன்றி லாடுங்
காரண காரியங்கடந்த கடவுளே நின்
தண்ணுடைய மலரடிக்கோர் சிறிதும் அன்பு
சார்ந்தேனேசெம்மரம்போல் தணிந்தநெஞ்சேன்
பெண்ணுடைய மயலாலே சுழல்கின்றேன் என்
பேதைமையை என்புகல்வேன் பேயனேனைப்
புண்ணுடைய புழுவிரும்பும் புள்ளென் கேனே
புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலையனேனே.

இடைவிடாது, கோசத்தைக் கவசத்தால் மறைத்திரு

69. **பொன்னுடையா** ரிடம்புகவோ அவர்கட்கு எற்கப்
பொய்மொழிகள் புகன்றிடவோபொதிபோல் இந்
தக், கொன்னுடையா உடல்பருக்கப் பசிக்குச் சோறு
கொடுக்கவோ குளிர்க்கு ஆடைகொளவோ வஞ்ச
மின்னிடையார் முடைச் சிறுநீர்க் குழிக்கண் அந்தோ
வீழ்ந்திடவோ தாழ்ந்து இளைத்துவிழிக்கவோ தான்
என்னுடையாய் என்னுடையாய் என்னை இங்கே
எடுத்துவளர்த்தனை அறியேன் என்சொல்வேனே.

70. **வருகணத்து** வாழ்ந்திடுமோ விழுமோ இந்த
மலக்கூடு என்று அறிஞரெலாம் வருந்தக்கேட்டும்
அருகணைத்துக் கொளப்பெண்பேய் எங்கே மேட்டுக்கு
அடைத்திட வெண்சோறெங்கே ஆடை எங்கே
இருகணுக்கு வியப்பெங்கே வசதியான
இடமெங்கேஎன்று திரிந்து இளைத்தேன் அல்லால்
ஒருகணத்தும் உனை நினைந்த துண்டோ என்னை
உடையானே எவ்வகை நான் உய்யு மாறே.

71. **பொன்மலையோ** சிறிதெனப் பேராசை பொங்கிப்
புவிநடையில் பற்பலகால் போந்து போந்து
தென்மலையோ நிதிமலையோ என்று தேடி
நிலைகுலைந்த தன்றி உனை நினைந்துநேடி

உச்சி, மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்திரு

மன்மலேயோ மாமணியோ மருந்தோ என்று
வழுத்தியதே இல்லைஇந்த வஞ்ச நெஞ்சம்
கன்மலேயோ இரும்போசெம் மரமோ பாறைக்
கருங்கல்லோ பராய்முருட்டுக் கட்டை யேயோ.

72. தம்மைமறந்து அருளமுதம் உண்டுதேக்கும்
தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து நாயேன்
வெம்மையெலாம் தவிர்ந்து மனங் குளிரக் கேள்வி
விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டில் என்றும்
செம்மையெலாம் தரும் மௌன அணைமேற் கொண்டு
செறிஇரவு பகலொன்றுந் தெரியா வண்ணம்
இம்மையிலே எம்மையினும் காணுச் சுத்த
இன்பநிலை அடைவேனே ஏழை யேனே.

73. அடியனேன் பிழையனைத்தும்பொறுத்து ஆட்கொ
ண்ட, அருட்கடலே மன்றோங்கும்அரசே இந்நாள்
கொடியனேன் செய்பிழையைத் திருவுள்ளத்தே
கொள்ளுதியோ கொண்டுகுலங் குறிப்ப துண்டோ
நெடியனே முதற்கடவுள் சமுகத் தோர்தம்
நெடும்பிழைகள் ஆயிரமும் பொறுத்து மாயை
ஒடியநேர் நின்றபெருங் கருணை வள்ளல்
எனமறைகள்ஓதுவதுஇங்குஉனைத்தான் அன்றே.

74. கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதில்
கருத்தறியாச் சிறுவனை ஓர் கடுங்கானத்தே
உண்மயக்கங்கொள விடுத்தே ஒருவன் பின்போம்
ஒருதாய்போல் மாயையிருள் ஓங்கும் போதில்
மண்மயக்கம் பெறும்விடயக் காட்டில் அந்தோ
மதியிலேன் மாழாந்து மயங்க நீதான்
வண்மையுற்ற நியதியின்பின் என்னைவிட்டே
மறைந்தனையே பரமே நின் வண்மை என்னே.

75. நற்ருயும் பிழை குறிக்கக் கண்டோம் இந்த
நானிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே
பற்ருயும் அவர்தமைநாம் பற்ருேம் பற்றில்
பற்ருத பற்றுடையார் பற்றி உள்ளே
உற்ருயுஞ் சிவபெருமான் கருணை ஒன்றே
உறுபிழைகள் எத்தனையும் பொறுப்பது என்று
உன் பொற்ருளை விரும்பியதும் மன்று ளாடும்
பொருளேஎன்பிழையனைத்தும்பொறுக்கவன்றே.

76. எண்ணியநம் எண்ணமெலாம்முடிப்பான்மன்றுள்
எம்பெருமான் என்றுமகிழ்ந்து இறுமாந்துஇங்கே
நண்ணிய மற்றையர்தம்மை உருமை பேசி
நன்கு மதியாதிருந்த நாயி னேனைத்

தண்ணிய நல்அருட் கடலே மன்றில் இன்பத்
தாண்டவஞ் செய்கின்ற பெருந்தகையே எங்கள்
புண்ணியனே பிழைகுறித்து **விடுத்தி** யாயில்
பொய்யனேன் எங்குற்று என்புரிவேன் அந்தோ.

77. **அன்பர்** திருவுளம் கோயிலாகக் கொண்டே
அற்புதச் சிற்சபைஒங்கும் அரசே இங்கு
வன்பரிடைச் சிறியேனை மயங்க வைத்து
மறைந்தனையே ஆனந்த வடிவோய் நின்னைத்
துன்ப வடிவுடைப் பிறரிற் பிரித்து மேலோர்
துரிய வடிவினன் என்று சொன்ன வெல்லாம்
இன்ப வடிவடைந்தன்றே எந்தாய் அந்தோ
என்னளவென் சொல்கேன் இவ்வேழை யேனே.

78. **புற்றேங்கும்** அரவமெல்லாம் பணியாக் கொண்டு
பொன்மேனிதனில் அணிந்த பொருளே மாயை
உற்றேங்கும் வஞ்சமனக் கள்வனேனை
உளங்கொண்டு பணிகொள்வது உனக்கே ஒக்கும்
மற்றேங்கும் அவரெல்லாம் பெருமை வேண்டும்
வன்மனத்தர் எனைவேண்டார் வள்ளலே நான்
கற்றேங்கும் அறிவறியேன் பலவாச் சொல்லும்
கருத்தறியேன் எனக்கருளக் கருதுவாயே.

ஏதமகன்றவர் ஏகநாதர்

79. **அருளுடைய** பரம்பொருளே மன்றி லாடும்
ஆனந்தப் பெருவாழ்வே அன்பு ளோர்தம்
தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட
சிவமே மெய்யறிவுருவாந் தெய்வமே இம்
மருளுடைய மனப்பேதை நாயினேன் செய்
வன்பிழையைச் சிறிதேனும் மதித்தி யாயில்
இருளுடைய பவக்கடல் விட்டேறேன் என்னை
எற்றுவதற்கு எண்ணுக என் இன்பத் தேவே.

திருச்சிற்றம்பலம்

திருக்கதவந் திறத்தல்

திருக்கதவந் திறவாயோ திரைகளெலாந் தவிர்த்தே
திருவருளாம்பெருஞ்ஜோதித்திருவுருக்காட்டாயோ
உருக்கியமு தூற்றெடுத்தென் உடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே யாக்குறமெய் உணர்ச்சியரு ளாயோ
கருக்கருதாத்தனிவடிவோய்நின்னையென்னுட்கலந்தே
கங்குல்பகலின்றியென்றுங் களித்திடச் செய்பாயே.
செருக்கருதா தவர்க்கருளுஞ் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 1

மனதைப் புருவமத்தியின் கண்ணே நிறுத்து

மணிக்கதவந் திறவாயோ மறப்பையெலாந் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின்வடிவதுகாட் டாயோ
கணிக்கறியாப் பெருநிலையி லென்னொடுநீ கலந்தே
கரைகடந்த பெரும்போகங் கண்டிடச் செய்யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தாசே
தாங்கமுடி யாதினியென் றனித்தலைமைப் பதியே
திணிக்கலையா தியவெல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 2

உன்புடைநான் பிறர்போலே உடுக்கவிழைந் தேனோ
உண்ணவிழைந்தேனோவேறுடைமைவிழைந்தேனோ
அன்புடையாய் என்றனைநீயணைந்திடவேவிழைந்தேன்
அந்தோ என் ஆசைவெள்ளம் அணைகடந்த தாசே
என்புடைவந் தணைகவென இயம்புகின்றேன் உலகோர்
என்சொலினுஞ் சொல்லுகவென் இலச்சையெலாம்
விடுத்தேன், தென்புடையோர் முகநோக்கித் திருப்
பொதுநிற்கின்றோய், சித்தசிகா மணியேயென் திரு
நடநா யகனே. 3

இறந்திறந்தே யிளைத்தவெலாம் போதுமிந்த வுடம்பே
இயற்கையுடம் பாகவருளின்னமுத மளித்தென்
புறந்தழுவி யகம்புணர்ந்தேகலந்துகொண் டெந்நாளும்
பூரணமாஞ் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்

மனதைத் துர்விஷயத்தில் பற்ற திருக்கச்செய்

பிறந்திறந்து பொய்க்கதியைப் பெறநினைத் தேமாந்த
பேதையர்போலெனைநினையேல் பெரியதிருக்கதவந்
திறந்தருளி யணைந்திடுவாய் சிற்சபைவா ழரசே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 4

கூறுகின்ற சமயமெலாம் மதங்களெலாம் பிடித்துக்
கூவுகின்றார் பலனொன்றுங் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல்
நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ நிலைமேல்
ஏறுகின்ற திறம் விழைந்தேன் ஏற்றுவித்தா யாங்கே
இலங்குதிருக் கதவுதிறந் தின்னமுதம் அளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்தியுறப் புரிவாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 5

கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கமொன்றே நிலைபெற எவ்வுலகும்
வாழ்ந்தோங்கக்கருதியருள் வழங்கினையென் றனக்கே
உலைவறுமிப் பொழுதேநற் றருணமென நீயே
உணர்த்தினைவந் தணைந்தருள்வா யுண்மையுரைத்த
வனே, சிலைநிகர்வன் மனக்கரைத்துத் திருவமுதமளித்
தோய், சித்தசிகாமணியேயென்திருநடநாயகனே. 6

சுகத்தையும் துன்பத்தையும் சமமாக என்

திருத்தருமோர் தருணமிதில் திருக்கதவந் திறந்தே
திருவருட்பே ரொளிகாட்டித் திருவமுத மூட்டிக்
கருத்துமகிழ்ந் தென்னுடம்பிற் கலந்துளத்திற் கலந்து
கனிந்துயிரிற் கலந்தறிவிற் கலந்துலக மனைத்தும்
உருத்தகவே யடங்குகின்ற வூழிதொறும் பிரியா
தொன்றாகிக் காலவரை உரைப்பவெலாங் கடந்தே
திருத்தியொடு விளங்கியரு ளாடல்செய வேண்டுஞ்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 7

திருப்பள்ளி யெழுச்சி

பொழுது விடிந்ததென் உள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்குந்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாஞ்
சொல்லுதல் வேண்டுமென் வல்ல சற்குருவே
முழுதுமா னென்ன வாகம வேதம்
முறைகளெ லாமொழி கின்றமுன் னவனே
எழுதுத லரியசீர் அருட்பெருஞ் ஜோதி
என்தந்தையே பள்ளி யெழுந்தருள் வாயே. 1

குண மாயைபோய்த் தொலைந்தது ஞானம்
தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான்

சாதி, மதம், சமயம், உயர்வு, தாழ்வு என்ற பேதமற்றிரு

சிற்குண வரைமிசை உதயஞ்செய் ததுமா
சித்திகள் அடிப்பணிச் செய்திடச் சூழ்ந்த
நற்குண சன்மார்க்க சங்கத்தா ரெல்லாம்
நண்ணினர் தோத்திரம் பண்ணி நிற்கின்றார்
எற்குண வளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்னம்மையே பள்ளி யெழுந்தருள்வாயே. 2

கல்லாய மனங்களுங் கரையப்பொன் னொளிதான்
கண்டது கங்குலும் விண்டது தொண்டர்
பல்லாரு மெய்தினர் பாடிநின் றாடிப்
பரவுகின் றாரன்பு விரவுகின் றாராய்
நல்லார்மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும்
நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே
எல்லாஞ் செய் வல்லவென் அருட்பெருஞ் ஜோதி
என்தெய்வ மேபள்ளி யெழுந்தருள் வாயே. 3

சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தன ரடியார்
சிவசிவ போற்றியென் றுவகைகொள் கின்றார்
நினைப்பள்ளி யுண்ணத்தெள் ளாரமு தளிக்கும்
நேரமிந் நேரமென் றரியர் புகன்றார்
முனைப்பள்ளி பயிற்றுதென் றனைக்கல்வி பயிற்றி
முழுதுணர் வித்துடற் பழுதெலாந் தவிர்த்தே

உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்யாதே

எனைப்பள்ளி யெழுப்பிய அருட்பெருஞ் ஜோதி
என்னப்ப னேபள்ளி யெழுந்தருள் வாயே. 4

மதம்பிடித் தவரெல்லாம் வாய்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவரெல்லாங் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தன ருலம்புறு கின்றார்
பதம்பிடித் தவரெல்லாம் அம்பலப் பாட்டே
பாடின ராடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ்ஜோதி
என்னைய னேபள்ளி யெழுந்தருள் வாயே. 5

அலங்கரிக் கின்றோமோர் திருச்சபை யதிலே
அமர்ந்தருட் ஜோதிகொண் டடிச்சிறி யோமை
வலம்பெறும் இறவாத வாழ்வில்வைத் திடவே
வாழ்த்து கின்றோ முன்னர் வணங்கி நிற்கின்றோம்
விலங்கிய திருளெலாம் விடிந்தது பொழுது
விரைந்தெமக் கருளுதல் வேண்டுமித் தருணம்
இலங்குநற் றருணமெம் அருட்பெருஞ்ஜோதி
என்தந்தை யேபள்ளி யெழுந்தருள் வாயே. 6

"பசித்திரு" "தனித்திரு" "விழித்திரு"

'சகலசரீரங்களின் ஜீவான்மாவே திருச்சபை' என்பார்

திரு வுந்தியார்

இரவு விடிந்த திணையடி வாய்த்தன
பாவி மகிழ்ந்தேனென் றுந்தீ பற
பாலமு துண்டேனென் றுந்தீ பற. 1

பொழுது விடிந்தது பொற்பதம் வாய்த்தன
தொழுது மகிழ்ந்தேனென் றுந்தீ பற
தூயவ னானேனென் றுந்தீ பற. 2

தூக்கந் தொலைந்தது சூரியன் தோன்றினன்
ஏக்கந் தவிர்ந்தேனென் றுந்தீ பற
இன்னமு துண்டேனென் றுந்தீ பற. 3

துன்பந் தவிர்ந்தது தூக்கந் தொலைந்தது
இன்பங் கிடைத்ததென் றுந்தீ பற
எண்ணம் பலித்ததென் றுந்தீ பற. 4

ஞான முதித்தது நாத மொலித்தது
தீனந் தவிர்ந்ததென் றுந்தீ பற
சிற்சபை கண்டேனென் றுந்தீ பற. 5

திரையற்று விட்டது செஞ்சுடர் தோன்றிற்றுப்
பரையொளி யோங்கிற்றென் றுந்தீ பற
பலித்தது பூசையென் றுந்தீ பற. 6

தயவுவேண்டுமானால் "மனுமுறைகண்டவாசகம்" படி

உள்விருள் நீங்கிற்றென்னுள்ளொளி யோங்கிற்
றுத்,தெள்ளமு துண்டேனென் றுந்தீ பற
தித்திக்க வுண்டேனென் றுந்தீ பற. 7

எந்தையைக் கண்டே னிடரெலா நீங்கினேன்
சிந்தை மகிழ்ந்தேனென் றுந்தீ பற
சித்திகள் பெற்றேனென் றுந்தீ பற. 8

தந்தையைக் கண்டேனான் சாகாவரம்பெற்றேன்
சிந்தை களித்தேனென் றுந்தீ பற
சித்தெலாம் வல்லேனென் றுந்தீ பற. 9

முத்தியைப் பெற்றேனம் முத்தியினால் ஞான
சித்தியை யுற்றேனென் றுந்தீ பற
சித்தனு மானேனென் றுந்தீ பற. 10

சண்முகர் காலைப்பாட்டு

வாரும்வா ரும் தெய்வ வடிவேல் முருகரே
வள்ளி மணாளரே வாரும்
புள்ளி மயிலோரே வாரும். 1

சங்க மொலித்தது தாழ்கடல் விம்மிற்றுச்
சண்முக நாதரே வாரும்
உண்மை வினோதரே வாரும். 2

பொழுது விடிந்தது பொற்கோழி கூவிற்றுப்
பொன்னான வேலரே வாரும்
மின்னார்முந் நூலரே வாரும். 3

காகங் கரைந்தது காலையு மாயிற்றுக்
கண்ணுதல் சேயரே வாரும்
ஒண்ணுதல் நேயரே வாரும். 4

செங்கதிர் தோன்றிற்றுத் தேவர்கள் சூழ்ந்தனர்
செங்கல்வ ராயரே வாரும்
எங்குரு நாதரே வாரும். 5

அருண னுதித்தனன் அன்பர்கள் சூழ்ந்தனர்
ஆறுமுகத் தோரே வாரும்
மாறிலகத் தோரே வாரும். 6

சூரியன் தோன்றினன் தொண்டர்கள் சூழ்ந்தனர்
சூரசங் காரரே வாரும்
வீரசிங் காரரே வாரும். 7

வீணை முரன்றது வேதியர் சூழ்ந்தனர்
வேலாயுதத் தோரே வாரும்
காலாயுதத் தோரே வாரும். 8

சேவ லொலித்தது சின்னம் பிடித்தனர்
தேவர்கள் தேவரே வாரும்
மூவர் முதல்வரே வாரும். 9

பத்தர்கள் சூழ்ந்தனர் பாடல் பயின்றனர்
பன்னிரு தோளரே வாரும்
பொன்மலர்த் தாளரே வாரும். 10

மாலை கொணர்ந்தனர் மஞ்சனம் போந்தது
மாமயில் வீரரே வாரும்
தீமையில் தீரரே வாரும். 11

தொண்டர்கள் நாடினர் தோத்திரம் பாடினர்
சுப்பிர மணியரே வாரும்
வைப்பி னணியரே வாரும். 12

கணபதி தோத்திரம்

திருமா லறியாச் சேவடியர்லென்
கருமா லறுக்குங் கணபதி சரணம்

வெண்பா

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின் தாள்சரண். 1

நாதமுங் கடந்து நிறைந்து நின்மயமே நானென
அறிந்துநான் றுனும், பேதமுங் கடந்த மௌன ராச்
சியத்தைப் பேதையேன் பிடிப்பதெந் நாளோ, வேத
முஞ் சமய வாதமும் விடுத்தோர் இதயமும் ஏழை
யேன் சிரமும், வேதமுந் தாங்கும் பாதனே சித்தி விநா
யக விக்கினேச் சுரனே. 2

சத்தசத் தியன்மற்றறிந்துமெய்ப் போதத்தத்துவ
நிலைபெற விழைவோர், சித்தமுற் றகலா தொளித்த
நின் கமலச் சேவடி தொழவெனக் கருள்வாய், சுத்த
சற்குணத்தெள் ளமுதெழு கடலே சுகபரி பூரணப்
பொருளே, வித்தக முக்க ணத்தனே சித்தி விநாயக
விக்கினேச் சுரனே. 3

கானல்நீர் விழைந்த மானென வுலகக் கட்டினை
நட்டுழன் றலையும், ஈனவஞ்சக நெஞ்சகப்புலை யேனை
என்றுகொண் டருளும் நாளுளதோ, ஊனமொன்
றில்லாவுத்தமருளத்தே ஓங்குசீர்ப் பிரணவ வொளியே,
வேனவில் கரத்தோர்க் கினியவா சித்திவிநாயக விக்கி
னேச்சுரனே. 4

தடக்கைமா முகமு முக்கணும் பவளச் சடிலமுஞ்
சதுர்ப்புயங் களுங்கை, இடக்கை அங்குசமும்பாசமும்

பதமும் இறைப்பொழுதேனும்யான் மறவேன்,விடக்
கள முடைய வித்தகப் பெருமான் மிகமகிழ்ந்திட
அருட்பேறே, மடக்கொடிநக்கை மங்கைநாயகி யெம்
வல்லபைக் கணேசமா மணியே. 5

திருவுங் கல்வியும் சீருஞ் சிறப்புமுன் திருவடிப்
புகழ் பாடுந்திறமும்நல், உருவுஞ் சீலமும் ஊக்கமுந்
தாழ்வுறு உணர்வுந் தந்தென துள்ளத் தமர்ந்தவா
குருவுந் தெய்வமு மாகி அன்பாளர்தங் குறை தவிர்க்
கும் குணப்பெருங்குன்றமே, வெருவுஞ் சிந்தை வில
கக் கஜானனம் விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 6

நீண்ட மாலா வாகிக் கிடந்துநின் நேயத்தால் கவி
நீங்கிய வாறுகேட்டு, ஆண்ட வாநின்னடைக்கல மாயி
னேன் அடிய னேன்பிழை யாயிர மும்பொறுத்து,
ஈண்டவாவின்படி கொடுத்தென்னைநீ என்று கொள்
வதற் கெண்ணுதி யாவரும், வேண்டு வாழ்வு தரும்
பெருந்தெய்வமேவிளங்குஞ்சித்திவிநாயக வள்ளலே. 7

நஞ்ச மென்றுனைச் சார்ந்தன னெந்தை நீ தானு
மிந்தச் சகத்தவர் போலவே, வஞ்ச மெண்ணி யிருந்
திடி லென்செய்வேன் வஞ்சமற்ற மனத்துறை யண்ண
லே, பஞ்ச பாதகந் தீர்த்தனை யென்றுநின் பாத பங்க

மாதா பிதாக்களது மனக்குறிப்பு அறிந்து நட

யம் பற்றினன் பாவியேன், விஞ்ச நல்லருள் வேண்
டித் தருதியோ விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 8

கள்ள நெஞ்சகனாயினு மையநான் கள்ள மின்றிக்
கழறுகின் றேனெனது, உள்ளம் நின்றிரு வுள்ள மறி
யுமே ஓதுகின்றதென் போது கழித்திடேல், வள்ள
மாமலர்ப் பாதப் பெரும்புகழ் வாழ்த்தி நாத்தழும்
பேற வழங்குவாய் வெள்ளவேணிப் பெருந்தகை யே
யருள் விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 9

ஆணி லேயன்றி ஆருயிர்ப் பெண்ணிலே அலியி
லேயிவ் வடியனைப் போலவே, காணிலே னொரு பாவி
யை யிப்பெருங் கள்ள நெஞ்சக் கடையனை யாளையா,
ஏணி லேயிட ரெய்த விடுத்தியேல் என்செய் கேனினி
யில்வுல கத்திலே, வீணிலே யுழைப்பே னருளையனே
விளங்குஞ் சித்திவிநாயக வள்ளலே. 10

நாவினாலுனை நாடொறும் பாடுவார் நாடுவார்தமை
நண்ணிப் புகழவும், ஓவிலாதுனைப் பாடவுந் துன்பெ
லாம் ஓடவும்மகி ழோங்கவுஞ் செய்குவாய், காவி நேர்
களத் தான்மகிழைங்கரக் கடவுளே நற் **கருங்குழி**
யென்னுமூர், மேவி யன்பர்க் கருள்கணநாதனே விளங்
குஞ் சித்தி விநாயக வள்ளலே. 11

ஏழைகளை—கன்றைக்கண்ட பசுப்போலப் பார்

தனித் திருமாலை

திங்களங் கொழுந்து வேய்ந்த செஞ்சடைக் கொழுந்தே போற்றி, மங்கை வல்லபைக்கு வாய்த்த மகிண நின் மலர்த்தாள் போற்றி, ஐங்கரம் நால்வாய் முக்கண் அருட் சிவ களிறே போற்றி, கங்கையாய் மகிழுஞ் செல்வக் கணேச நின் கழல்கள் போற்றி. 12

வண்ண எண்சீர் விருத்தம்

கலைநிறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம்.
தலைவநின் இணையடி சரணஞ் சரணம்
சரவண பவகுக சரணஞ் சரணம்.
சிலைமலை யுடையவ சரணஞ் சரணம்
சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம்.
உலைவறு மொருபரை சரணஞ் சரணம்
உமைசிவை யம்பிகை சரணஞ் சரணம்.

முருகன் தோத்திரம்

வீறுடையாய் வேலுடையாய் வெற்புடையாய் விண்ணுடையாய், நீறுடையாய் நேயர்கள்தம் நெஞ்சுடையாய்—கூறும், முதல்வா ஓராறு முகவா முக்கண்ணன், புதல்வா நின்னருள் எம்புகல். 1

ஏழையின் அழுதகண்ணீர் கூரிய வாளே யாகும்

பிரார்த்தனை மாலை

சீர்கொண்ட தெய்வ வதனங் களாறுந் திகழ்கடப்பந், தார்கொண்ட பன்னிரு தோள்களுந் தாமரைத்தாள்களுமோர், கூர்கொண்ட வேலும்மயிலும் நற்கோழிக் கொடியுமருட், கார்கொண்ட வண்மைத் தணிகாசலமுமென் கண்ணுற்றதே. 1

கண்மூன் றுறுசெங் கரும்பின்முத்தே பதங் கண்டிடுவான், மண்மூன் றுலகும் வழுத்தும் பவள மணிக் குன்றமே, திண்மூன்று நான்கு புயங்கொண் டொளிர் வச்சிர மணியே, மண்மூன்றலர் மலைவாழ் மயிலேறிய மாணிக்கமே. 2

மாணிந்த ஞான மருந்தேயென் கண்ணினுண் மாமணியே, ஆணிப்பொன்னே யென தாருயிரே தணிகாசலனே, தாள்நிற்கிலே னினைத் தாழாத வஞ்சர் தமதிடம்போய், பேணித் திரிந்தனன் அந்தோ என் செய்வனிப் பேதையனே. 3

அன்னே யெனைத்தந்த அப்பா என்றேங்கி யலறுகின்றேன், என்னேயிவ் வேழைக் கிரங்காது நீட்டித் திருத்த லெந்தாய், பொன்னே சுகுணப்

இன்சொல்லும், குளிர்ந்த பார்வையும்—கோள்

பொருப்பே தணிகைப் பொருப்பமர்ந்த, மன்னே கலப மயின்மே லழகிய மாமணியே. 4

மணியே தினைப்புன வல்லியை வேண்டி வளர் மறைவான், கணியே யெனநின்ற கண்ணே யென் னுள்ளக் களிநறவே, பணியே னெனினும் எனை வலிந்தாண்டு உன் பதந்தரவே, நணியே தணிகைக்கு வாவெனவோர் மொழி நல்குவையே. 5

நல்காத ஈனர்தம் பாற்சென் றிரந்து நவைப்படுதன்
மல்காத வண்ணமருள்செய்கண் டாய் மயில்வாகனனே
பல்காதல் நீக்கிய நல்லோர்க் கருளும் பரஞ்சுடரே
அல்காத வண்மைத் தணிகா சலத்தி லமர்ந்தவனே. 6

அமரா வதியிறைக் காருயிரீந்த அருட்குன்றமே, சமரா புரிக்கரசே தணி காசலத் தற்பரனே, குமரா பரம குருவே குகாவெனக் கூவிநிற்பேன், எமராஜன் வந்திடுங் காலைய னேயெனை யேன்று கொள்ளே. 7

கொள்ளுண்ட வஞ்சர்தங் கூட்டுண்டு வாழ்க்கை யில் குட்டுண்டு மேல், துள்ளுண்ட நோயினிற் சுடுண்டு மங்கையர் தோய் வெனுமோர், கள்ளுண்ட நாய்க்குன் கருணையுண் டோநற் கடலமுதத், தெள்ளுண்டதேவர் புகழ்தணி காசலச் சிற்பரனே. 8

சிற்பகன் மேவுமித் தேகத்தை யோம்பித் திரு வினையார், தற்பகமே விழைந் தாழ்ந்தேன் தணிகை தனிலமர்ந்த, கற்பகமேநின் கழல்கரு தேனிக் கடைப் படுமென், பொற்பக மேவிய நின்னரு ளென்னென்று போற்றுவதே. 9

போற்றே னெனினும் பொறுத்திடல் வேண்டும் புவிநடையாஞ், சேற்றே விழுந்து தியங்குகின்றேனைச் சிறிதுமினி, ஆற்றே னெனதரசே யமுதே யென் னருட்செல்வமே, மேற்றேன் பெருகு பொழிற்றணி காசல வேலவனே. 10

வேல்கொண்ட கையும் விறல்கொண்டதோளும் விளங்குமயில், மேல்கொண்ட வீறும் மலர்முக மாறும் விரைக்கமலக், கால்கொண்ட வீரக் கழலுங் கண்டா லன்றிக் காமனெய்யுங், கோல்கொண்ட வன்மை யறுமோ தணிகைக் குருபரனே. 11

குறை யிரந்த பத்து

சீர்பூத்த அருட்கடலே கரும்பே தேனே
செம்பாகே யெனதுகுல தெய்வ மேநங்
கூர்பூத்த வேன்மலர்க்கை யரசே சாந்த
குணக்குன்றே தணிகைமலைக் கோவே ஞானப்

பேர்பூத்த நின்புகழைக் கருதி யேழை
 பிழைக்கவருள் செய்வாயோ பிழையைநோக்கிப்
பார்பூத்த பவத்திலுற விடுவனென் செய்கேன்
 பாவியே னந்தோவென் பயந்தீ ரேனே. 1

தீராத துயர்க்கடலி லழுந்தி நாளும்
 தியங்கியழு தேங்குமிந்தச் சேய்க்கு நீகண்
பாராத செயலென்னே யெந்தா யெந்தாய்
 பாவியென விட்டனையோ பன்றாளாக
ஏராய அருள்தருவா யென்றே யேமாந்
 திருந்தேனே யென்செய்கேன் யாரு மில்லேன்
சீராருந் தணிகைவரை யமுதே யாதி
 தெய்வமே நின்கருத்தைத் தெளிந்தி லேனே. 2

அண்ணாவே நின்னடியை யன்றி வேறோர்
 ஆதரவிங் கறியேன் நெஞ் சழிந்து துன்பாற்
புண்ணாவேன் றன்னையின்னும் வஞ்சர் பாற்போய்ப்
 புலந்துமுக வாட்டமுடன் புலம்பி நிற்கப்
பண்ணாதே யாவனிவன் பாவிக் குள்ளும்
 படுபாவி யென்றென்னைப் பரிந்து தள்ள
எண்ணாதே யான்மிகவு மேழை கண்டாய்
 இசைக்கரிய தணிகையில்வீற் றிருக்குங் கோவே. 3

தாகங் கொண்டோருக்குத் தண்ணீர் கொடு

பண்ணேறு மொழியடியர் பரவி வாழ்த்தும்
 பாதமல ரழகினையிப் பாவி பார்க்கிற்
கண்ணேறு படுமென்றோ கனவிலேனுங்
 காட்டென்றாற் காட்டுகிலாய கருணை யீதோ
விண்ணேறும் அரிமுதலோர்க் கரிய ஞான
 விளக்கேயென் கண்ணே மெய் வீட்டின் வித்தே
தண்ணேறு பொழிற்றணிகை மணியே ஜீவ
 சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 1

அன்னைமுத லாம் பந்தத் தழுங்கி நாளும்
 அலைந்துவயி றோம்பிமன மயர்ந்து நாயேன்
முன்னைவினை யாற்படும்பா டெல்லாஞ் சொல்லி
 முடியேன்செய் பிழைகருதி முனியே லையா
பொன்னைநிக ரருட்குன்றே யொன்றே முக்கட்
 பூமணமே நறவேநற் புலவர் போற்றத்
தன்னைநிகர் தருந்தணிகை மணியே ஜீவ
 சாக்ஷியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 2

பன்னரும்வன் றுயரால்நெஞ் சழிந்து நாளும்
 பதைத்துருகி நின்னருட்பால் பருகக் கிட்டா (து)
உன்னரும்பொய் வாழ்க்கையெனுங் கானத் திந்த
 ஊர்நகைக்கப் பாவியழ லுணர்ந்திலாயோ

பசி கொண்டு தவிப்போர்க்கு அன்னங்கொடு

என்னருமை யப்பாஎன் ஐயா என்றன்
இன்னுயிர்க்குத் தலைவாஇங் கெவர்க்குந் தேவா
தன்னியற்சீர் வளர்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 3

ஓயாது வருமிடியால் வஞ்சர் பாற்சென்று
உளங்கலங்கி நாணியிரந் துழன்றென் னாளும்
மாயாத துயரடைந்து வருந்தித் தெய்வ
மருந்தாய நின்னடியை மறந்திட் டேனே
தாயாகித் தந்தையாய்த் தமராய் ஞான
சற்குருவாய்த் தேவாகித் தழைத்த வொன்றே
சாயாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 4

மின்னாளு மிடைமடவா ரல்குலாய
வெங்குழியில் வீழ்ந்தாழ்ந்து மெலிந்தே னல்லால்
என்னாளு முனைப்போற்றி யறியே னென்னே
ஏழைமதி கொண்டேனிங் கென்செய்கேனே
அன்னாயென் னப்பாவென் றரற்று மன்பர்க்
காரமுதே யருட்கடலே யமரர்கோவே
தன்னார்வத் தமர்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 5

மண்ணினால் மங்கையரால் பொருளால் அந்தோ
வருந்திமன மயக்கிமிக வாடி நின்றேன்
புண்ணியா நின்னருளை யின்னுங் காணேன்
பொறுத்துமுடி யேன்றுயரம் புகல்வ தென்னே
எண்ணினா லளப்பரிய பெரிய மோன
இன்பமே அன்பர்தம திதயத் தோங்குந்
தண்ணினாற் பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 6

வாழாத வண்ணமெனைக் கெடுக்கும் பொல்லா
வஞ்சகநெஞ் சாலுலகில் மாழாந் தந்தோ
பாழான மடந்தையர்பாற் சிந்தை வைக்கும்
பாவியேன் முகம்பார்க்கப் படுவ தேயோ
ஏழாய வன்பவத்தை நீக்கு ஞான
இன்பமே பொன்னரசே யிறையே சற்றுந்
தாழாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 7

கல்லாத வஞ்சகர்பாற் சென்று கீனாள்
கழித்துநிற்குங் கடையனிவன் கருணையில்லாப்
பொல்லாத பாவியென எண்ணி யென்னைப்
புறம்போக்கி லையா யான்புரிவ தென்னே

எல்லாஞ்செய் வல்லவனே தேவர் யார்க்கும்
இறைவனே மயிலேறு மெம்பி ரானே
சல்லாப வளத்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 8

பாவவினைக் கோரிடமா மடவார் தங்கள்
பாழ்ங்குழிக்கண் வீழமனம் பற்றி யந்தோ
மாவல்வினை யுடன்மெலிந்திங் குழல்கின் றேனின்
மலரடியைப் போற்றேனென் மதிதா னென்னே
தேவர்தொழும் பொருளேயென் குலத்துக் கெல்லாந்
தெய்வமே அடியருளஞ் செழிக்குந் தேனே
தாவகன்றோர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 9

உள்ளமனக் குரங்காட்டித் திரியு மென்றன்
உளவறிந்தோ வையாநீ யுன்னைப் போற்றார்
கள்ளமனக் குரங்குகளை யாட்ட வைத்தாய்
கடையனேன் பொறுத்துமுடி கில்லேன்கண்டாய்
தெள்ளமுதப் பெருங்கடலே தேனே ஞானத்
தெளிவேயென் றெய்வமே தேவர் கோவே
தள்ளரிய புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 10

குருதரிசனமே—சிவதரிசனமாகும்

வந்தாள்வா யையாவோ வஞ்சர் தம்பால்
வருந்துகின்றே னென்றலறு மாற்றங் கேட்டும்
எந்தாய்நீ யிரங்காம லிருக்கின் றாயால்
என்மனம்போல் நின்மனமும் இருந்த தேயோ
கந்தாவென் றுரைப்பவர்தங் கருத்துள் ளூறுங்
கனிரசமே கரும்பேகற் கண்டே நற்சீர்
தந்தாளுந் திருத்தணிகை மணியே ஜீவ 11
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே.

ஊராதி யிகழ்மாயக் கயிற்றாற் கட்டுண்டு
ஓய்ந்தலறி மனங்குழைந்திங் குழலு கின்றேன்
பாராதி யண்டமெலாங் கணத்திற் காண்போய்
பாவியேன் முகவாட்டம் பார்த்திலாயோ
சீராதி பகவனருட் செல்வமே யென்
சிந்தைமலர்ந் திடவூறுந் தேனே இன்பஞ்
சாராதி மலைத்தணிகை மணியே ஜீவ 12
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே.

வாவென்பா ரின்றியுன தன்ப ரென்னை
வஞ்சகனென் றேமறுத்து வன்க ணாநீ
போவென்பா ராகிலெங்கு போவே னந்தோ
பொய்யனேன் றுணையின்றிப் புலம்பு வேனே

தீப்புண் ஆறும்! வாயினாற் சுட்ட புண் ஆறாதே

கோ ளென்பார்க் கருள் தருமக் குன்றே யொன்றே
குணங்குறியற் றிடவருளுங் குருவே வாழ்க்கைத்
தாவென்பார் புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 13

மின்னைநிகர்ந் தழிவாழ்க்கைத் துயரால் நெஞ்சம்
மெலிந்துநின தருள்பருக வேட்டு நின்றேன்
என்னையிவன் பெரும்பாவி யென்றே தள்ளில்
என்செய்கேன்றான் பெறுஞ்சேய் இயற்றுங்குற்றம்
அன்னைபொறுத் திடல்நீதி யல்லவோஎன்
ஐயாவே நீபொறுக்க லாகாதோதான்
தன்னைநிகர் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 14

முந்தைவினை யால்நினது வழியிற்செல்லா
மூடனேன் றனையன்பர் முனிந்து பெற்ற
தந்தைவழி நில்லாத பாவியென்றே
தள்ளிவிடிற் றலைசாய்த்துத் தயங்குவேனே
எந்தைநின தருள்சற்றே யளித்தால் வேறோர்
எண்ணமிலே னேகாந்தத் திருந்து வாழ்வேன்
சந்தனவான் பொழிற் றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 15

எண்ணம் பொய்யாகும் எமன் ஓலை மெய்யாகும்

தணிகை மலையைச் சாரேனோ சாமி யழகைப் பாரேனோ, பிணிகை யறையைப் பேரேனோ போரா அன்புகூறேனோ, அணிசெய் அருள்நீ ராரேனோ ஆறாத் தாகந் தீரேனோ, பணிசெய் தொழும்பிற் சேரேனோ பார்மீ திரங்கு நீரேனே. 1

தணிகா சலம்போய்த் தழையேனோ சாமி திருத் தாள் விழையேனோ, பணிகா தலித்துப் பிழையேனோ பாடி மனது குழையேனோ, திணிகாணுலகை யழையேனோ சேர்ந்தவ் வீட்டுள் நுழையேனோ, பிணிகா ணுலகிற் பிறந்துழன்றே பேதுற்றலையும் பழையேனே. 2

விடுமாட்டிற் றிரிந்துமட மாதரார்தம்
வெய்யநீர்க் குழிவீழ்ந்து மீளா நெஞ்சத்
தடுமாற்றத் தொடும்புலைய வுடலை யோம்பிச்
சார்ந்தவர்க்கோ ரணுவளவுந் தானீயாது
படுகாட்டிற் பலனுதவாப் பனைபோல் நின்றேன்
பாவியே னுடற்சுமையைப் பலருங் கூடி
இடுகாட்டில் வைக்குங்கா லென்செய் வேனோ
என்குறையையெவர்க்கெடுத்திங் கியம்புகேனே. 3

வினை விதைத்தவன் வினை தானே அறுப்பான்

ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே யரசே முக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்
வீறுமுகப் பெருங்குணத்தோர் இதயத் தோங்கும்
விளக்கமே ஆனந்த வெள்ளமே முன்
தேறுமுகப் பெரிய அருட் குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்டதேவ தேவே. 4

கல்வியெலாங் கற்பித்தாய் நின்பால் நேயங்
காணவைத்தாய் இவ்வுலகங் கானலென்றே
ஒல்லும்வகை யறிவித்தாய் உள்ளே நின்றென்
உடையானே நின்னருளு முதவு கின்றாய்
இல்லையெனப் பிறர்பாற்சென் றிரவா வண்ணம்
ஏற்றமளித் தாயிரக்க மென்னே யென்னே
செல்வஅருட் குருவாகி நாயி னேனைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 5

எந்தைபிரா னென்னிறைவ னிருக்க இங்கே
என்ன குறை நமக்கென்றே யிறுமாப் புற்றே
மந்தவுலகினிற்பிறரை யொருகா சுக்கும்
மதியாமல் நின்னடியே மதிக்கின் றேன்யான்

எய்தவன் இருக்க அம்பை நோவானேன்

இந்தஅடியேனிடத்துன் திருவு ளந்தான்
எவ்வாறோ அறிகிலேன் ஏழை யேனுன்
சிந்தைமகிழ்ந் தருட்குருவா யென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 6

ஞாலமெலாம் படைத்தவனைப் படைத்த முக்கண்
நாயகனே வடிவேற்கை நாதனே நான்
கோலமெலாங் கொடியேன்நற் குணமொன் றில்லேன்
குற்றமே விழைந்தேனிக் கோது ளோனைச்
சாலமெலாம் செயுமடவார் மயக்கில் நீக்கிச்
சன்மார்க்க மடையவருள் தருவாய் ஞானச்
சீலமெலா முடையவ்வருட் குருவாய் வந்து
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 7

பன்னிருகண் மலர்மலர்ந்த கடலே ஞானப்
பரஞ்சுடரே ஆறுமுகம் படைத்த கோவே
என்னிருகண் மணியேயென் தாயே யென்னை
ஈன்றோனே யென்னரசே யென்றன் வாழ்வே
மின்னிருவர் புடைவிளங்க மயின் மீதேறி
விரும்பும்அடி யார்காண மேவுந் தேவே
சென்னியில்நின் னடிமலர்வைத் தென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 8

எல்லா உயிர்களையும் சமமாக எண்ணி நட

நின்இருதாள் துணைபிடித்தே வாழ்கின் றேனுன்
நின்னையலாற் பின்னையொரு நேயங் காணேன்
என்னையினித் திருவுளத்தில் நினைதி யோநான்
ஏழையினு மேழைகண்டா யெந்தா யெந்தாய்
பொன்னையன்றி விரும்பாத புல்லர் தம்பால்
போகவொழிந் துன்பதமே போற்றும்வண்ணஞ்
சின்னமளித் தருட் குருவா யென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 9

வெம்பு முயிருக் கோருறவாய் வேளை நமனும்
வருவானேல், தம்பி தமையன் துணையாமோ தனையர்
மனைவி வருவாரோ, உம்பர் பரவுந் திருத்தணிகை
உயர்மா மலைமேல் இருப்பவர்க்குத், தும்பக் குடலை
யெடுக்காமல் தூக்கவுடலை யெடுத்தேனே. 10

தொல்லைக் குடும்பத் துயரதனில் தொலைத்தே
னந்தோ காலமெலாம், அல்ல லகற்றிப் பெரியோரை
யடுத்து மறியேன் அரும்பாவி, செல்வத்தணிகைத்
திருமலைவாழ் தேவா உன்றன் சந்நிதிக்கு, வில்வக்
குடலை, யெடுக்காமல் வீணுக் குடலை யெடுத்தேனே. 11

அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும்
அதில் நினைவாய்க், கவலைப் படுவ தன்றிசிவ கனியைச்

உயிர்களெல்லாம் சிற் சக்தியின் உருவமே

சேரக் கருதுகிலேன், திவலை யொழிக்குந் திருத்தணி
கைத் திருமால் மருகன் திருத்தாட்குக், குவளைக்குடலை
யெடுக்காமல் கொழுத்த வுடலை யெடுத்தேனே. 12

ஆறுமுகங்கொண்ட வையா என்றுன்ப மனைத்து
மின்னும், ஏறு முகங்கொண்ட தல்லால் இறங்கு முக
மிலையால், வீறு முகங்கொண்ட கைவேலின் வீரம்
விளங்க வென்னைச், சீறு முகங்கொண்ட அத்துன்ப
மோடச் செலுத்துகவே. 13

கூழுக் கழுவேனோ கோத்தணிகைக் கோவேயென்
னூழுக் கழுவேனோ ஓயாத் துயர்ப்பிறவி
ஏழுக் கழுவேனோ வென்செய்கே னென்செய்கேன்
பாழுக் கிறைத்தேனீ துன்செயலோ பார்க்குமிடம். 14

கறிபிடித்த ஊன்கடையிற் கண்டவர்தங்கால்
பிடித்துக் கவ்வும் பொல்லா, வெறிபிடித்த நாய்க்
கேனும் வித்தைபயிற் றிடவாகும் வேண்டி வேண்டி,
மறி பிடித்த சிறுவனைப்போல் வாத்தியார் மனமறுகி
வருந்தத் தங்கள், குறிபிடித்துக் காட்டுவோர்க்கு
யாவர் படிப்பிக்க வல்லார் குமர வேளே. 15

எல்லா உயிர்க்கும் ஒளியாக இருப்பவன் இறைவனே !

ஆறெழுத்துண்மை

பெருமை நிதியே மால்விடைகொள் பெம்மான் வருந்திப் பெறும்பேறே, அருமை மணியே தணிகை மலை அமுதே உன்றன் ஆறெழுத்தை, ஒருமை மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண்ணீறிட்டால், இருமை வளனு மெய்துமிடரென்ப தொன்று மெய்தாதே. 1

எய்தற் கரிய வருட்சுடரே யெல்லாம் வல்ல விறையோனே, செய்தற் கரிய வளத்தணிகைத் தேவே யுன்றன் ஆறெழுத்தை, உய்தற் பொருட்டிங் குச்சரித்தே உயர்ந்த திருவெண் ணீறிட்டால், வைதற் கில்லாப் புகழ்ச்சிவரும் வன்க ணொன்றும் வாராதே. 2

வாரா விருந்த வடியவர்தம் மனத்தி லொளிரும் மாமணியே, ஆரா வமுதே தணிகைமலை யரசே யுன்றன் ஆறெழுத்தை, ஓரா மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திரு வெண் ணீறிட்டால், ஏரார் செல்வப் பெருக்கிகவா விடும்பை யொன்று மிகழ்ந்திடுமே. 3

இகவா வடியர் மனத்தூறு மின்பச் சுவையே யெம்மானே, அகவா மயிலூர் திருத்தணிகை யரசே யுன்ற னாறெழுத்தை, உகவா மனத்தி னுச்சரித்திங்

குயர்ந்த திருவெண் ணீறிட்டால், சுகவாழ் வின்ப மது துன்னுந் துன்ப மொன்றுந் துன்னாதே. 4

துன்னு மறையின் முடிவிலொளிர் தூய விளக்கே சுகப்பெருக்கே, அன்னையனையாய் தணிகைமலை அண்ண வுன்ற னாறெழுத்தை, உன்னி மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டாற், சென்னி யணியா யடி சேருந் தீமையொன்றுஞ் சேராதே. 5

சேரு முக்கட் கனிகனிந்த தேனே ஞானச் செழு மணியே, யாரும் புகழுந் தணிகையெம தன்பே யுன்ற னாறெழுத்தை, ஒரு மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திரு வெண் ணீறிட்டாற், பாரும் விசும்பும் பதஞ்சாரும் பழங்க ணொன்றுஞ் சாராதே. 6

சார்ந்த வடியார்க் கருளளிக்குந் தருமக்கடலே தற் பரமே, வார்ந்த பொழில்சூழ் திருத்தணிகை மணியே யுன்ற னாறெழுத்தை, ஓர்ந்து மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால், ஆர்ந்த ஞான முழு மழியா வலக்க ணொன்று மழிந்திடுமே. 7

அழியாப் பொருளே யென்னுயிரே அயில்செங் கரங்கொளையாவே, கழியாப் புகழ்சேர் தணிகையமர் கந்தர வுன்ற னாறெழுத்தை, ஒழியா மனத்தி னுச்சரித்திங்

குயர்ந்த திருவெண் ணீறிட்டாற், பழியா வின்ப மது 8
பதியும் பணிமை யொன்றும் பதியாதே.

பதியே யெங்கு நிறைந்தருளும் பரம சுகமே பரஞ் சுடரே, கதியே யளிக்குந் தணிகையமர் கடம்பா வுன்ற னாறெழுத்தை, உதியோ மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டாற், துதியோர் நினது பதந்தோன் 9
றுந் துன்ப மொன்றுந் தோன்றாதே.

தோன்றா ஞானச் சின்மயமே தூய சுகமே சுயஞ் சுடரே, ஆன்றோர் புகழுந் தணிகை மலை அரசே யுன்ற னாறெழுத்தை யூன்றும னத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண்ணீறிட்டால், ஈன்றாள் நிகரும் அருளடையு 10
மிடுக்க னொன்றும் அடையாதே.

பணித்திறம் வேட்டல்

நண்ணேனோ மகிழ்வினொடுந் திருத்தணிகை மலை யதனை நண்ணி யென்றன், கண்ணே நீயமர்ந்தவெழில் கண்குளிரக் காணேனோ கண்டு வாரி, உண்ணேனோ ஆனந்தக் கண்ணீர் கொண்டாடியுனக் குகப்பாத் தொண்டு, பண்ணேனோ நின்புகழைப் பாடேனோ 1
வாயாரப் பாவி யேனே.

தேடேனோ யென்னாதன் எங்குற்றா னென வோடித் தேடிச் சென்றே, நாடேனோ தணிகை தனில் நாயகனே நின்னழகை நாடி நாடிக், கூடேனோ அடியருடன் கோவேயெங் குகனேயெங் குருவே யென்று, பாடேனோ ஆனந்தப் பரவசமுற் றுன்கமலப் பதம் நண்ணேனோ. 2

மக்கட்பிறவி யெடுத்துமுனை வழுத்தாக்கொடிய மாமனையேன், துக்கக் கடலில் வீழ்ந்துமனஞ் சோர்கின்றேனோர் துணைகாணேன், செக்கர்ப் பொருவு வடிவேற்கைத் தேவே தெவிட்டாத் தெள் ளமுதே, முக்கட் கரும்பின் முழுமுத்தே முறையோ முறையோ முறையேயோ. 3

காச மேகங் கடும்பிணி சூலைமோ
காதி யாற்றந்து கண்கலக் கஞ்செய்யும்
மோச மேநிச மென்றுபெண் பேய்களை
முன்னி னேனினை முன்னில னாயினேன்
பாச நீக்கிடு மன்பர்கள் போலெனைப்
பாது காக்கும் பராமுனக் கையனே
தேசம் யாவும் புகழ்தணி காசலச்
செல்வ மேயருட் சிற்சுக வாரியே. 4

ஏழைமையி னிரங்கல்

தேனே யுளங்கொள் தெளிவே யகண்ட சிதமேவி நின்ற சிவமே, கோனே கனிந்த சிவபோத ஞான குருவே விளங்கு குகனே, தானே தனக்கு நிகராய் விளங்கு தணிகாச லத்தெம் மரசே, நானேழை யிங்கு மனநொந்து நொந்து நலிகின்ற செய்கைநலமோ.

நலமேவு தொண்ட ரயனாதி தேவர் நவையேக நல்கு தணிகா, சலமேவி யுன்ற னிருதாள் புகழ்ந்து தரிசிப்ப தென்று புகலாய், நிலமேவுகின்ற சிவயோக ருள்ள நிகழ்கின்ற ஞான நிறைவே, வலமேவு வேல்கை யொளிசேர் கலாப மயிலேறி நின்ற மணியே. 2

மணியே கலாப மலைமே லமர்ந்த மதியே நினைச்சொன் மலரால், அணியேனலன்பு மமையேன் மனத்தி லடியா ரடிக்கண் மகிழ்வாய்ப், பணியே னினைந்து பதையே னிருந்து பருகே னுவந்த படியே, யெணியே நினைக்கி லவமாமிவ் வேழை யெதுபற்றி யுய்வ தரசே 3

உய்வண்ண மின்றி யுலகாதரத்தி லுழல்கின்ற மாய மடவார், பொய்வண்ண மொன்றின் மனமாழ்கி யன்மை புரிதந்து நின்ற புலையேன், மெய்வண்ண மொன்று தணிகாச லத்து மிளிர்கின்ற தேவ விறல்

கோபத்தால் நாய்போல் குரையாதே

வேற், கைவண்ண வுன்ற னருள்வண்ணமான கழல் வண்ண நண்ண லுளதோ. 4

நண்ணாத வஞ்ச ரிடநாடி நெஞ்சு நனிநொந்து நைந்து நவையாம், புண்ணாகி நின்ற வெளியேனை யஞ்சல் புரியாது நம்பொ னடியை, எண்ணாத பாவி யிவனென்று தள்ளி னென்செய்வ துய்வ தறியேன், தண்ணார் பொழிற்கண் மதிவந் துலாவு தணிகா சலத்தி றைவனே. 5

இறையேனு முன்ற னடியெண்ணி யங்கி யிழுதென்ன நெஞ்ச மிளகேன், மறையோது முன்றனருள் பெற்ற தொண்டர் வழிபட் டலங்க லணியேன், குறையோடு மிங்கு மயல்கொண்டு நின்ற கொடியேனை யாள லுளதோ, நிறையோர் வணங்கு தணிகாச லத்தில் நிலைபெற்றிருக்கு மவனே. 6

அவநாள் கழிக்க அறிவே னலாது னடிபேணி நிற்க வறியேன், தவநாடு மன்ப ரொடுசேர வந்து தணிகாசலத்தை யடையேன், எவனோ வெனக்கு மவணியிருக்கு மிடமீயி லுன்ற னடியார், இவனோ ரிவன்ற னியல் பென்ன வென்னி லெவனென் றுரைப்பை யெனையே. 7

சிந்தை ஒன்று—வாக்கொன்று—செய்கை ஒன்று ?

எனையா னறிந்து னடிசேர வுன்னை யிறையேனு நெஞ்சி னிதமாய், நினையே னயர்ந்து நிலையற்ற தேக நிசமென் றுழன்று துயர்வேன், தனையே னினன்பன் எனவோதி வியாவர் தருமென் றுரைப்பரரசே, வினையோர் கொளுஞ்செய் தணிகாச லத்து மகிழ்வோ டமர்ந்த
வமுதே. 8

முதுவோர் வணங்கு தணிகாசலத்து முதலேயிவ் வேழை முறியேன், மதவான் மயங்கு மளிபோன் மயங்கி மதியாது நின்ற பிழையால், விதுவாகி யன்ப ருளமேவு நீகை விடிலேழை யெங்கு மெலிவேன், இதுநீதி யல்ல வெனவுன் றனக்கு மெவர் சொல்ல வல்ல ரரசே

நன்றறியேன் தீங்கனைத்தும் பறியேன் பொல்லா
நங்கையர்தங் கண்மாய நவையைச் சற்றும்
வென்றறியேன் கொன்றறிவார் தம்மைக் கூடும்
வேடனேன் திருத்தணிகை வெற்பில் நின்பாற்
சென்றறியேன் இலையென்ப தறிவேன் ஒன்றுஞ்
செய்தறியேன் சிவதருமஞ் செய்வோர் நல்லோர்
என்றறியேன் வெறியேனிங் கந்தோ வந்தோ
என்பிறந்தேன் புவிச்சுமையா விருக்கின்றேனே.

பேராசை பிடித்து அலையாதே

பண்ணேனின் புகழ் சொல்வோர் தமக்குப் பூசை
பாடேனின் றிருச்சீரைப் பரமனின்ற
கண்ணேநின் றணிகைதனைக் கண்டு போற்றேன்
கைகுவியேன் மெய்குளிரேன் கண்ணீர் பாயேன்
உண்ணேன்நல் லானந்த வமுதை யன்பர்
உடனுகே னேகாந்தத் துறவோ ரெண்ணம்
எண்ணேன்வன் றுயரமண்ணேன் மனஞ்செம்புண்ணே
ன்,என்பிறந்தேன்புவிச்சுமையா விருக்கின்றேனே.

ஞாலவாழ் வெனும்புன் மலமிசைத் துழலும்
நாயினுங் கடையவிந் நாய்க்குன்
சீலவாழ் வளிக்குந் திருவடிக் கமலத்
தேன்தரு நாளு மொன்றுண்டோ
ஆலவா யுகந்த வொருசிவ தருவில்
அருள்பழுத் தளிந்தசெங் கனியே
கோலவா னவர்கள் புகழ்திருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே.

உலகம் பரவும் ஒருமுதல்வா தெய்வத்
திலகந் திகழிடத்துத் தேவே—இலகுதிருப்
புள்ளிருக்கு வேளூர்ப் புனிதா அடியேன்றன்
உள்ளிருக் குந் துன்பை யொழி.

எவ்வுயிரையும் பொதுவாக நோக்க வேண்டும்

ஆற்றாப் புலம்பல்

அன்னாவோ என்னருமை ஐயாவோ பன்னிரண்டு
கண்ணாவோ வேல் பிடித்த கையாவோ செம்பவள
வண்ணாவோ நற்றணிகை மன்னாவோ என்றென்றே
எண்ணாவோ துன்பத் திருங்கடற்குண் மன்னினனே.

திருவருள் விழைதல்

தேவ ரேமுத லுலகங்கள் யாவையுஞ் சிருட்டி யாதிய செய்யும், மூவரே யெதிர் வருகினு மதித்திடேன் முருகனின் பெயர்சொல்வோர், யாவ ரேனுமென் குடி முழு தாண்டெனை யளித்தவர் அவரேகாண், தாவ நாடொணாத் தணிகையம் பதியில்வாழ் சண்முகப் பெருமானே.

புண்ணியநீற்று மான்மியம்

திவசங்கடோ றங்கொண்டிடு தீமைப்பிணி தீரும்
பவசங்கட மறும் இவ்விக பரமும்புகழ் பரவுங்
கவசங்களெ னச்சூழ்ந்துறு கண்ணேறது தவிருஞ்
சிவசண்முக வெனவே யருட்டிரு நீறணிந் திடிலே. 1

மாலேந்திய குழலார் தரு மயல்போமிட ரயல்போங்
கோலேந்திய வரசாட்சியுங் கூடும்புகழ் நீடும்

யாதொன்றும் கொல்லார்க்கே இன்பம் கிடைக்கும்

மேலேந்திய வானாடர்கண் மெலியாவித மொருசெவ்
வேலேந்திய முருகாவென வெண்ணீறணிந் திடிலே. 2

தவமுண்மையொ டறம்வஞ்சகர் தஞ்சார்வது தவறும்
நவமண்மிய வடியாரிட நல்குந்திறன் மல்கும்
பவனன்புனல் கனன்மண்வெளி பலவாகிய பொருளாஞ்
சிவசண்முக வெனவேயருட் டிருநீறணிந் திடிலே. 3

துயிலேறிய சோர்வுங்கெடுந் தயரங்கெடு நடுவன்
கையிலேறிய பாசந்தணி கண்டேமுறித் திடுமால்
குயிலேறிய பொழில் சூழ்திருக் குன்றேறி நடக்கும்
மயிலேறிய மணியேயென வளர்நீறணிந் திடிலே 4

தேறாப்பெரு மனமானது தேறுந்துயர் மாறும்
மாறாப்பிணி மாயுந்திரு மருவுங்கரு வொருவும்
வீறாப்பொடு வருசூர்முடி வேறாக்கிட வருமோர்
ஆறாக்கரப் பொருளேயென வருள்நீறணிந் திடிலே. 5

உறுதி யுணர்த்தல்

மஞ்சேர் பிணிமிடியாதியை நோக்கி வருந்துறு மென், நெஞ்சே தணிகையன் ஆறெழுத்துண்டு வெண் ணீறுண்டு நீ, எஞ்சே லிரவும் பகலுந் துதிசெய் திடுதி கண்டாய், அஞ்சே லிதுசத் தியமாமென் சொல்லை யறிந்துகொண்டே. 1

‘‘காம வெப்பிவிடை அழுந்தாதே’’

அறியாத நம்பிணி யாதியை நீக்கு மருண்மருந்தின் நெறியாந் தணிகைய னாறெழுத் தண்டுவெண்ணீ றண்டு நீ, எறியா திரவும் பகலும் துதிசெய் திடுதிகண்டாய் குறியா திருக்கலை யென்னாணை யென்றன் குணநெஞ் சமே. 2

என்றே பிணிக ளொழியுமென் றேதுய ரெய்தி யிடேல், நின்றே தணிகைய னாறெழுத் தண்டுவெண் ணீறண்டு நீ, இன்றே 'யிரவும் பகலுந் துதிசெய் திடுதி கண்டாய், நன்றேயெக் காலமும் வாழிய வாழிய நன் னெஞ்சமே. 3

கூடல் விழைதல்

சகமா றுடையா ரடையார் நெறியார்
சடையார் விடையார் தனியானார்
உகமா ருடையா ருமையோர் புடையார்
உதவும் உரிமைத் திருமகனார்
முகமா றுடையார் முகமா றுடையார்
எனவே யெனது முன்வந்தார்
அகமா றுடையேன் பதியா தென்றேன்
அலைவா யென்றா ரஃதென்னே. 1

"காமம்—நண்ணிந் தலைக்கேறும்! நஞ்சங்காண்"

பட்டி மாடெனத் திரிதரு மடவார்
பாழ்ங்குழிக்குள்வீழ்ந் தாழ்ந்திளைக்கின்றேன்
சட்டி லார்புகழ் தணிகையை யடையேன்
சம்பு வென்னுமோர் தருவொளிர் கனியே
ஒட்டி லேனினை யுளத்திடை நினையேன்
உதவு றாதுநச் சுறுமர மானேன்
எட்டி யென்முன மினிப்புறு மந்தோ
என்செய் வான்பிறந் தேனெளியேனே. 2

முருகா வெனநின் றேத்தாத மூட ரிடம்போய் மதிமயங்கி முன்னு மடவார் முலைமுகட்டின் முயங்கி யலைந்தே நினைமறந்தேன், உருகா வஞ்ச மனத்தேனை யுருத்தீர்த் தியம னொருபாசத்-துடலம் நடுங்க இசிக்கி லவர்க் குறைப்ப தறியேன் உத்தமனே, பருகா துள்ளத் தினித்திருக்கும் பாலே தேனே பகரருட்செம்-பாகே தோகைமயில் நடத்தும்பரமே யாவும் படைத்தோனே, தருகா தலித்தோன் முடிகொடுத்த தருமதுரையே தற்பரனே-தணிகாசலமாங் தலத்தமர்ந்த சைவமணியே சண்முகனே. 3

பித்தப் பெருமான் சிவபெருமான் பெரிய பெருமான் றனக்கருமைப்-பிள்ளைப் பெருமானெனப்புலவர்

"காமம்—மெய்ந்நெறிக்கு முள்ளடைக்கும் முரண்"

பேசிக் களிக்கும் பெருவாழ்வே; மத்தப் பெருமா னிக்குமொரு மருந்தே யெல்லாம் வல்லோனே-வஞ்சச் சமண வல்லிருளை மாய்க்கு ஞான மணிச்சுடரே ; அத்தக் கமலத் தயிற்படைகொ ளரசே மூவர்க்கருள்செய்தே-ஆக்க லளித்த லழித்தலெனும் அம்முத் தொழிலுந் தருவோனே; சத்த வுலக சராசரமுந் தாளி லொடுக்குந் தனிப்பொருளே - தணிகாசலமாந் தலத்தமர்ந்த சைவமணியே சண்முகனே. 4

தாருகப் பதகன் றன்னைத் தடிந்தருள்செய்தோய் போற்றி, வேருகச் சூரமாவை வீட்டிய வேலோய் போற்றி, ஆருகச் சமயக் காட்டை யழித்தவெங் கனலே போற்றி, போருகத் தகரை யூர்ந்த புண்ணிய மூர்த்தி போற்றி. 5

சிங்கமா முகனைக் கொன்ற திறலுடைச் சிம்புள் போற்றி, துங்கவா ரணத்தோன் கொண்ட துயர் தவிர்த் தளித்தோய் போற்றி, செங்கண் மான் மருக போற்றி சிவபிரான் செல்வபோற்றி, எங்களாரமுதே போற்றி யாவர்க்கு மிறைவ போற்றி. 6

வேதமுங் கலைகள் யாவும் விளம்பிய புலவ போற்றி நாதமுங் கடந்து நின்ற நாதநின் கருணை போற்றி

போதமும் பொருளு மாகும் புனிதநின் பாதம்போற்றி ஆதர மாகி யென்னுள் அமர்ந்த வென்னரசே போற்றி. 7

என்னிரு கண்ணின் மேவு மிலங்கொளி மணியே போற்றி, பன்னிரு படைகொண் டோங்கும் பன்னிரு கரத்தோய் போற்றி, மின்னிரு நங்கை மாருண் மேவிய மணாள போற்றி, நின்னிரு பாதம் போற்றி நீள்வடி வேல போற்றி. 8

கந்தர் சரணப் பத்து

அருளா ரமுதே சரணஞ் சரணம்
அழகா அமலா சரணஞ் சரணம்
பொருளா வெனையாள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணஞ் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணஞ் சரணம்
மயில்வாகனனே சரணஞ் சரணம்
கருணை லயனே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 1

முடியா முதலே சரணஞ் சரணம்
முருகா குமரா சரணஞ் சரணம்
வடிவே லரசே சரணஞ் சரணம்
மயிலூர் மணியே சரணஞ் சரணம்

அடியார்க் கெளியாய் சரணஞ் சரணம்
அரியாய் பெரியாய் சரணஞ் சரணம்
கடியாக் கதியே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 2

பூவே மணமே சரணஞ் சரணம்
பொருளே யருளே சரணஞ் சரணம்
கோவே குகனே சரணஞ் சரணம்
குருவே திருவே சரணஞ் சரணம்
தேவே தெளிவே சரணஞ் சரணம்
சிவசண் முகனே சரணஞ் சரணம்
காவேர் தருவே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 3

கோலக் குறமான் கணவா சரணம்
குலமா மணியே சரணஞ் சரணம்
சீலத்தவருக் கருள்வோய் சரணம்
சிவனார் புதல்வா சரணஞ் சரணம்
ஞாலத் துயர்தீர் நலனே சரணம்
நடுவாகிய நல்லொளியே சரணம்
காலற் றெறுவோய் சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 4

வேதப் பொருளே சரணஞ் சரணம்
விண்ணோர் பெருமான் சரணஞ் சரணம்
போதத் திறனே சரணஞ் சரணம்
புனை மா மயிலோய் சரணஞ் சரணம்
நாதத் தொலியே சரணஞ் சரணம்
நவையில்லவனே சரணஞ் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 5

தெய்வமணி மாலை

திருவோங்கு புண்ணியச் செயலோங்கி யன்பருள்
திறலோங்கு செல்வ மோங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பந்
திகழ்ந் தோங்க அருள் கொடுத்து
மருவோங்கு செங்கமல மலரோங்கு வணமோங்க
வளர்கருணை மயமோங்கி யோர்
வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி ஆனந்த
வடிவாகி யோங்கி ஞான
உருவோங்கும்உணர்வினிறை யொளியோங்கியோங்
குமயில், ஊர்ந்தோங்கி யெவ்வுயிர்க்கும்

உறவோங்குநின்பதமென் உளமோங்கிவளமோங்க
உய்கின்ற நாளெந்த நாள்
தருவோங்கு சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 1

பரமேது வினைசெயும் பயனேது பதியேது
பசுவேது பாச மேது
பத்தியேது அடைகின்ற முத்தியேது அருளேது
பாவபுண் ணியங்களேது
வரமேது தவமேது விரதமேது ஒன்றுமிலை
மனம்விரும் புணவுண்டு நல்
வத்திரம ணிந்துமட மாதர்தமை நாடிநறு
மலர்சூடி விளையாடி மேற்
கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரோடு
கலந்துமகிழ் கின்ற சுகமே
கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனெனுங்
கயவரைக் கூடா தருள்
தரமேவு சென்னையிற் கந்த கோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே

தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 2

வள்ளலுனை உள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ தன்றி மற்றை
வானவரை மதியென்னில் நானவரை யொரு
கனவின், மாட்டினும் மறந்தும் மதியேன்
கள்ளமறும் உள்ளமுறும் நின்பதம லால்வேறு
கடவுளர் பதத்தை யவமொன்
கண்ணெதிரடுத்தைய நண்ணென அளிப்பினுங்
கடுவென வெறுத்து நிற்பேன்
எள்ளளவும் இம்மொழி யிலேசுமொழி யன்றுண்மை
என்னையாண் டருள் புரிகுவாய்
என்றந்தை யேயெனது தாயேயென் இன்பமே
என்றனறி வேயென் அன்பே
தள்ளரிய சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 3

காமவுட் பகைவனுங் **கோப**வெங் கொடியனுங்
கன**லோப** முழுமூ டனும்

கடுமோக வீணனுங் கொடுமதமெ னுந்துட்ட
கண்கெட்ட ஆங்கா ரியும்
எமமறு மாச்சர்ய விழலனுங் கோலையென்
றியம்பு பாதகனு மாமிவ்
ஏழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல் அருள்வாய்
சேமமிகு மாமறையின் ஓமெனும் அருட்பதத்
திறனருளி மலய முனிவன்
சிந்தனையின் வந்தனை யுவந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகா ரத்னமே
தாமமொளிர் சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 4

நிலையுறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடும்
நிகழ் சாந்தமாம் புதல்வனும்
நெறிபெறும் உதாரகுண மென்னுநற் பொருளும்
மருள், நீக்கும் அறிவாந் துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனுஞ் சுத்தமுறும்
மன மென்னும் நல் ஏவலும்

பண்ணீர்மை கொண்ட தமிழ்ப் பாமாலையால் துதி

வருசகல கேவலமிலாத இடரும் பெற்று
வாழ்கின்ற வாழ்வ ருளுவாய்
அலையிலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுத மலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடியிரு புறம்
படர்ந்து, அழகுபெற வருபொன் மலையே
தலைவர்புகழ் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 5

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்றுபேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமை பெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய், பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்

தாயார், மனையார், தனயரார் தம்மவரார், நீயார்?

New Delhi
7.4.95

அருட் பெருஞ்ஜோதி
தனிப் பெருங்கருணை.

அன்பர் திரு சுந்தரம் அவர்களுக்கு
இத்துடன் வள்ளலார் நூலை
தங்களுக்கு அனுப்பிவைத்ததில்
மிக்க மகிழ்ச்சி. இரண்டு
தலைமுறைகளாக என்தகப்ப-
னாரும் பிறகு நானும் அனுப-
வித்த ஒரு இன்பம், கடல்
கடந்து சென்று உங்களையும்
மகிழ வைக்கும் என்று
நம்புகிறேன். திரு. கிருபா-
னந்த வாரியாரின் சொற்
பொழிவுகளின் திரட்டும்
திருப்பாவை திருவெம்பாவை
மூலமும், ஸ்ரீ ரமண மகரிஷியின்
நூல்களும் அனுப்பியுள்ளோம்-

rt. Tel. 535431

தாங்கள் அடுத்த முறை
தாய்நாடு வருங்கால்
நாம் நம்முடைய எண்ணங்
களை பரிமாறிக்கொள்வதற்கு
வாய்ப்பு ஏற்படும் என
நம்புகிறேன்.

சமயம் வரும்போது
கடிதத் தொடர்பு வைத்துக்
கொள்ள விரும்புகிறேன்.

இங்ஙனம்
ம. சுப்ரமணியன்.

மதிவேண்டும்நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 6

ஈயென்று நானொருவ ரிடம்நின்று கேளாத
இயல்பும் என் னிடம் ஒருவர் ஈது
இடுவென்றபோ தவர்க்கிலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமும் இறையாம்
நீயென்றும் எனைவிடா நிலையும் நானென்றும் உள்
நினைவிடா நெறியும் அயலார்
நிதியொன்றும் நயவாத மனமும்மெய்ந்நிலையென்
றும், நெகிழாத திடமும் உலகில்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்குசொல்லாத தெளியும்
திறமொன்று வாய்மையுந் தூய்மையுந்தந்து நின்
திருவடிக் காளாக் குவாய்
தாயொன்று சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 7

நீயாரென வறியாய் நின்னெதிரில் நின்றவரை —

பார்கொண்ட நடையில்வன் பசிகொண்டு வந்திரப்
பார்முகம் பார்த்தி ரங்கும்
பண்பும்நின் திருவடிக் கன்பும்நிறை ஆயுளும்
பதியும்நன் னிதியும் உணர்வும்
சீர்கொண்ட நிறையும் உட்பொறையும் மெய்ப்புக
ழும் நோய்த், தீமையொரு சற்றும் அணுகாத்
திறமும் மெய்த் திடமும்நல் இடமும்நின் அடியர்
புகழ், செப்புகின் றோர்அடைவர் காண் !
கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலும் மயிலுமொரு
கோழியங் கொடியும் விண்ணோர்
கோமான்றன் மகளும்ஒருமா மான்றன்மகளும்
மால்கொண்டநின் கோலம் மறவேன்
தார்கொண்ட சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 8

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
எக்கற்றி ருக்கும் வெறுவாய்
எங்கள்பெருமானுனை வணங்காத மூடர்தலை
இகழ்விற கெடுக்குந் தலை

நீயாரென வினவி நீண்டனையே !

கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் சொரிந்த அழுகண்
கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழவு கேட்குஞ் செவி
பந்தமற நினை எணாப் பாவிகள்தம் நெஞ்சம்
பகீரென நடுங்கும் நெஞ்சம்
பரம நின் திருமுன்னர் குவியாத வஞ்சர் கை
பலியேற்க நீள்கொ டுங்கை
சந்தமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 9

ஐய நின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்
ளமுதுண்டு உவந்த திருவாய்
அப்ப நின் திருவடி வணங்கினோர் தலை முடி
அணிந்தோங்கி வாழுந் தலை
மெய்ய நின் திருமேனி கண்டபுண் ணியர்கண்கள்
மிக்கஒளி மேவு கண்கள்
வேல நின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபங் கேட்குஞ் செவி

துய்ய நின் பதமெண்ணும் மேலோர்கள் நெஞ்சம்
மெய்ச்சுகரூப மான நெஞ்சம்
தோன்றல் உன் திருமுன் குவித்த பெரியோர்
கைகள் சுவர்ன்னமிடு கின்ற கைகள்
சையமுயர் சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 10

உழலுற்ற உழவுமுத லுறுதொழி லியற்றிமல
மொத்தபல பொருளீட்டி வீண்
உறுவயிறு நிறையவெண் சோறடைத் திவ்வுடலை
ஒதிபோல் வளர்த்து நாளும்
விழலுற்ற வாழ்க்கையை விரும்பினேன் ஐய இவ்
வெய்யவுடல் பொய்யென் கிலேன்
வெளிமயக்கோ மாய விடமயக்கோ எனது
விதிமயக் கோ அறிகிலேன்
கழலுற்ற நின்றணைக் கான்மலர் வணங்கிநின்
கருணையை விழைந்து கொண்டு எங்
களைகணே ஈராறு கண்கொண்ட என்றன் இரு
கண்ணே எனப் புகழ் கிலேன்

தழைவுற்ற சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 11

நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையு முண்டு
ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடையு முண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறும்
உளமுண்டு வளமு முண்டு
தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவு முண்டு
தேனுண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயி லரசே
தாருண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 12

உளமெனது வசநின்ற தில்லையென் றெல்லவினை
ஒல்லைவிட் டிடவு மில்லை
உன்பதத் தன்பில்லை யென்றனுக் குற்றதுணை
உனையன்றி வேறு மில்லை
இளையன் அவனுக்கருள வேண்டுமென்று உன்பால்
இசைக்கின்ற பேரு மில்லை
ஏழை அவனுக்கருள்வ தேன் என்று உன்எதிர்
நின்று, இயம்புகின் றோரும் இல்லை
வளமருவும் உனதுதிரு வருள்குறைவ தில்லை மேல்
மற்றொரு வழக்கு மில்லை
வந்திரப் போர்களுக்கு இலையென்ப தில்லை நீ
வன்மனத் தவனு மல்லை
தளர்விலாச் சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 13

எத்திக்கு மென்னுளந் தித்திக்கு மின்பமே
என்னுயிர்க் குயிரா குமோர்
ஏகமே ஆனந்த போகமே யோகமே
என்பெருஞ் செல்வமே நன்

முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவி லாத
முருகனே நெடியமால் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமை மகனே
பத்திக்கு உவந்து அருள் பரிந்தருளும் நின்னடிப்
பற்றருளி யென்னை யிந்தப்
படியிலே யுழல்கின்ற குடியிலே ஒருவனைப்
பண்ணும லாண்ட ருளுவாய்
சத்திக்கு நீர்ச்சென்னை கந்த கோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 14

நான்கொண்ட விரதம் நின் அடியலாற் பிறர்தம்மை
நாடாமை யாகும் இந்த
நல்விரத மாங்கனியையின்மையெனுமொரு திட்ட
நாய்வந்து கவ்வி யந்தோ
தான்கொண்டுபோவதினியென்செய்வேனென்செய்
வேன், தளராமை யென்னு மொருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தரு ளுவாய்

வான்கொண்ட தெள்ளமுத வாரியே மிகுகருணை
மழையே மழைக்கொண்டலே
வள்ளலேயென்னிருகண்மணியேயென் இன்பமே
மயிலேறும் மாணிக் கமே
தான்கொண்ட சென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 15

சிவநேச வெண்பா

சீர்சான்ற வேதச் செழும்பொருளே சிற்சொருபப்
பேர்சான்ற உண்மைப் பிரமமே—நேர்சான்றோர்
நாடும் பரசிவமே நாயேனுக் கன்புநின்பால்
நீடும் படிநீ நிகழ்த்து. 1
இன்றோ பகலோ இரவோ வருநாளில்
என்றோ அறியே னெளியேனே—மன்றோங்கும்
தாயனையாய் நின்னருளாந் தண்ணமுதமுண்டு(உ)வந்து
நாயனையேன் வாழ்கின்ற நாள். 2
உப்பிருந்த ஓடோ ஒதியோ உலாப்பிணமோ
வெப்பிருந்த காடோ வினைச்சுமையோ-செப்பறியேன்
கண்ணப்ப ருக்குக் கனியனையாய் நிற்பணியா
துண்ணப் பருக்கும் உடம்பு. 3

தோற்றமிலாக் கண்ணுஞ் சுவையுணரா நாவும்நிகழ்
நாற்ற மறியாத நாசியுமோர்—மாற்றமுந்தான்
கேளாச் செவியுங்கொள் கீழ்முகமே நீற்றணிதான்
மூளாது பாழ்த்த **முகம்.** 4

மான்று முலக வழக்கின் படி மதித்து
மூன்று வகிர்ந்தே முடைநாற—வூன்று
மலக்கூடை யேற்றகினு மாணுதே தென்பால்
தலக்கூடற் றுழாத் **தலை.** 5

கல்லென்கோ நீரடைக்குங்கல்லென்கோ கான்கொள்
கருங், கல்லென்கோ கான்வயிரக் கல்லென்கோ-சொல்
லென்கோ, வின்று லெனிலோ வெடுத்தாளெம் ஈன்
றுள்நேர், நின்தாள் நினையாத **நெஞ்சு.** 6

சொல்லுகின்ற உள்ளுயிரைச்சோர்வுற்றிடக் குளிர்ந்து
கொல்லுகின்ற நஞ்சிற் கொடிதன்றே—ஒல்லுமன்றத்
தெம்மானின் றுட்கமல மெண்ணுது பாழ்வயிற்றிற்
சும்மா அடைக்கின்ற **சோறு.** 7

பொன்னின் றொளிரும் புரிசடையோய் நின்னையன்றிப்
பின்னொன் றறியேன் பிழைநோக்கி—யென்னை
அடித்தாலும் நீயே அணைத்தாலும் நீயே
பிடித்தேனுன் பொற்பாதப் பேறு. 8

இப்பாரி லென்பிழைக ளெல்லாம் பொறுத்தருளென்
அப்பாநின் றுட்கே அடைக்கலங்காண்—இப்பாரில்
நான் நினது தாள்நீழல் நண்ணுமட்டும் நின்னடியார்
பால்நினது சீர்கேட்கப் பண். 9

திருவருண் முறையீடு

நான்படும் பாடு சிவனே உலகர் நவிலும்பஞ்சு தான்படு
மோசொல்லத் தான்படு மோஎண்ணத் தான்படுமோ
கான்படுகண்ணியில் மான்படுமாறு கலங்கி நின்றேன்என்
படு கின்றனையென் றிரங்கா யென்னிலென் செய்வனே.

மின்போலும் செஞ்சடை வித்தகனே ஒளிமே
வியசெம், பொன்போலும் மேனியெம் புண்ணியனே
யெனைப் போற்றிப்பெற்ற, தன்போலுந் **தாய் தந்தை**
ஆயிரம் பேர்இருந் தாலுமந்தோ நின்போலும் அன்புடை
யார் எனக்கார் ? இந்த நீணிலத்தே. 2

என்போன் மனிதரை யேனடுப் பேன் எனக்கெய்
ப்பில்வைப்பாம், பொன்போல் விளங்கும் புரிசடை
யான்றனைப் போயடுத்தேன், துன்போ ரணுவும் பொ
றேனினி யானென்று சொல்லிவந்தேன், முன்போற்
பராமுகஞ் செய்யே லருளுக முக்கணனே. 3

வாளேய் நெடுங்கண்ணி யெம்பெரு மாட்டிவரு
டுமலர்த், தாளே வருந்த மணிக்கூடற் பாணன் றனக்
கடிமை, ஆளே யெனவிற கேற்றுவிற் றேய் நின்னருள்
கிடைக்கும், நாளேநன் னாள்அந்த நாட்காயிரந்தெண்ட
னென்செய்வனே. 4
தாயாகி னுஞ்சற்று நேரந் தரிப்பள் நந்தந்தையைநாம்
வாயார வாழ்த்தினும் வையினுந் தன்னிடைவந்திதுநீ
ஈயாயெனிலருள் வாயென்றனையடுத்தேன் உமையாள்
நேயா மனமிரங்காயாளென் னெண்ணம் நெறிப்படவே.
ஏட்டாலுங் கேளய லென்பாரை நான்சிறித் தெ
ன்னை வெட்டிப் போட்டாலும் வேறிடங்கேளேனென்
னனைப் புறம்விடுத்துக்,கேட்டாலு மென்னை யுடையா
னிடஞ்சென்று கேட்பனென்றே, நீட்டாலும் வாயு
ரைப் பாட்டாலுஞ் சொல்லி நிறுத்துவனே. 6
உருவந்தி லேசிறி யேனுகி யூகத்தி லொன்றுமின்றித்
தெருவத்திலேசிறு கால்விசி யாடிடச் சென்ற அந்தப்
பருவத்திலே நல்லறிவளித்தேஉனைப் பாடச்செய்தாய்
அருவத்திலேயுருவானோய்நின் றண்ணளி யார்க்குளதே.
மானெழுந் தாடுங்கரத்தோய்நின் சாந்தமனத்திற்
சினந், தானெழுந்தாலும் எழுகவென்றே யென்தளர்
வையெல்லாம், ஊனெழுந்தார்க்க நின்பாலுரைப்பன

ன்றி ஊர்க்குரைக்க, நானெழுந்தாலும் என் நா எழுமோ
மொழி நல்கிடவே. 8
வனமெழுந் தாடுஞ்சடையோய்நின் சித்தம்மகிழ்த
லன்றிச், சினமெழுந்தாலும் எழுகவென்றே என்சிறு
மையைநின், முனமெழுந்தாற்றுவ தல்லாற் பிறர்க்கு
மொழிந்திடவென், மனமெழுந்தாலும் என்வா யெழுமோ
உள்ளவாறிதுவே. 9
வான்மாறினு மொழி மாறுத மாறன் மனங்களிக்கக்
கான்மாறி யாடிய கற்பக மேநின் கருணையென் மேற்,
றான்மா றினும்விட்டு நான்மாறி டேன்பெற்ற தாய்க்கு
முலைப், பால்மாறி னும்பிள்ளைபான் மாறுமோ அதிற்
பல்விடுமே. 10
ஊர்தரு வர்நல்ல ஆண்தரு வார்உடை யுந்தருவார்
பார்தரு வார்உழற் கேர்தரு வார்பொன் பணந்தருவார்
சோர்தரு வாருள் ளறிவுகெடாமற் சுகிப்பதற் கிங்கு
ஆர்தருவாரம்மை யார்தரு பாகனை யன்றிநெஞ்சே. 11
பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந் தாயென்பர்
பித்தனென்ற, திட்டுக்கும் சீருள்செய்தளித்தாயென்
பர் தீவிறகுக், கட்டுக்கும் பொன்முடி காட்டிநின்று
யென்பர் கண்டிடவென், மட்டுக்கும் வஞ்சகத் தெய்வ
மென்கோ முக்கண் மாணிக்கமே. 12

ஒண்ணுத லேழைமடவார்தம் வாழ்க்கையி லுற்
றிடினும், பண்ணுதலேர் மறை யாயிரஞ் சூழுநின்
பாதத்தையான், எண்ணுத லேதொழிலாகச் செய்வித்
தென்னையேன்று கொள்வாய், கண்ணுதலே கருணைக்
கடலே யென்கருத் திதுவே. 13

தியாகப் பெருமான் தோத்திரம்

பாடற்கினிய வாக்களிக்கும் பாலுஞ்சோறும் பரிந்
தளிக்கும், கூடற்கினிய அடியவர்தங் கூட்டமளிக்கும்
குணமளிக்கும், ஆடற்கினியநெஞ்சேநீ அஞ்சேலென்
மேலாணை கண்டாய், தேடற்கினிய சீரளிக்குஞ்
சிவாயநம வென்றிடும் நீறே. 1

தோடுடையார்புலித்தோலுடையார் கடற்றூங்குமொரு
மாடுடையார்மழு மானுடை யார்பிர மன்றலையாம்
ஓடுடை யார்ஒற்றி யூருடை யார்புகழோங்கியவெண்
காடுடை- யார்நெற்றிக் கண்ணுடையாரெங் கடவுளரே.

வண்ணப்பன் மாமலர் மாற்றம் படிக்கு மகிழ்ந்
தெமது, திண்ணப்பர் சாத்துஞ் செருப்படி மேற்
கொண்டு தீஞ் சுவைத்தாய், உண்ணப்பரிந்துநல்
லூன்றர வுண்டு கண் ஒத்தக்கண்டே, கண்ணப்ப நிற்க
வெனக்கைதொட்டாரெங் கடவளரே. 3

கருதாயோ நெஞ்சே கதிகிடைக்க எங்கள்
மருதா எழிற்றில்லை மன்னு—எருதேறும்
என்னருமைத் தெய்வதமே யென்னருமைச் சற்குருவே
என்னருமை அப்பாவே யென்று. 4

தவராயி னுந்தேவர் தாமா யினுமற்
றெவரா யினும்நமக்கிங் கென்னும்—கவராத
நிந்தை யகன்றிடவென் னெஞ்சமே யொற்றியில்வாழ்
எந்தையடி வணங்காரேல். 5

மூவரை யளித்த முதல்வனை முக்கண் மூர்த்தியைத்
தீர்த்தனைப் பெரிய, தேவரைக் காத்த செல்வனை ஒற்
றித் தியாகனை நினைந்துநின் றேத்தாப், பாவரை வரை
யாப் படிற்றரை வாதப் பதடரைச் சிதடரைப் பகை
சேர், கோவரைக் கொடிய குணத்தரைக் கண்டாற்
கூசுவ கூசுவ விழியே. 6

நம்பனை அழியா நலத்தனை யெங்கள் நாதனைநீத
னைக் கர்சிக், கம்பனை ஒற்றிக் கங்கைவே ணியனைக்
கருத்தனைக் கருதிநின் றேத்தா, வம்பரை பூத்தைவாய
ரைக் கபட மாயரைப் பேயரை யெட்டிக், கொம்பரைப்
பொல்லாக் கோளரைக் கண்டாற் கூசுவகூசுவ விழியே.

நித்தனைத் தூய நிமலனைப் புலியூர்நிருத்தனை
யொருத்தனை வாய்மைச், சுத்தனை யொற்றித் தலம்

வளர்ஞான சுகத்தனைச் சூழ்ந்துநின் றேத்தா, மத்தரைச் சமணவாதரைத் தேர வறியரை முறியரை வைண, சுத்தரைச் சுணங்க நாவரைக் கண்டால் நடுங்குவ நடுங் குவ மனமே. 3

எழுத்தறி பெருமான் மாலை

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை, முந்தை வினை தொலைத்துன் மொய்கழற்கா ளாக்காதே, நிந்தை யுறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ, எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே. 1

மத்தனைவன் நெஞ்சகனை வஞ்சகனை வன்பிணி கொள், பித்தவனைவீ ணாட்போக்கும் பேயேனை, நாயேனை முத்தனையாய் உன்றன் முளரித்தாட் காளாக்க, எத்தனைநாட் செல்லும் எழுத்தறியும் பெருமானே. 2

நன்னறிசே ரன்பர்தமை நாடிடவும்நின்புகழின், சென்னெறியைச் சேர்ந்திடவும் செய்தா யெனக்குனக் கும், முன்னறியேன்பின்னறியேன் மூடனேன் கைம்மா றிங், கென்னறிவே னையா எழுத்தறியும் பெருமானே. 3

மைப்படியுங் கண்ணார் மயலுழக்கச் செய்வாயோ, கைப்படிய வுன்றன் கழல்கருதச் செய்வாயோ, இப்படி

பரமன்—வன்பர் மனத்தை மதியாதவர்

யென் றப்படியென் றென்னறிவேனுன்சித்தம், எப் படியோ ஐயா எழுத்தறியும் பெருமானே. 4

நில்லா வுடம்பை நிலையென்றே நேசிக்கும், பொல் லாத நெஞ்சப் புலையனேன் இவ்வுலகில் சொல்லா மன நோயால் சோர்வுற் றலையுமல்லல், எல்லா மறிவாய் எழுத் தறியும் பெருமானே. 5

நீதறிவே னன்கணுவுஞ் செய்யேன்வீ ணாட்போக் கும், வாதறிவேன் வஞ்சகனேன் வல்வினையேன் வாய் மையிலேன், சூதறிவேன் மாலயனுஞ் சொல்லரிய நின் பெருமை, யாதறிவேனையா எழுத்தறியும் பெருமானே. 6

மாருத வன்பிணியால் மாழாந்து நெஞ்சயர்ந்தே, கூறாத துன்பக் கொடுங்கடற்குள் வீழ்ந்தடியேன், ஆறா தாற்றி அழுகின்றேன் நின்செவியில், ஏறாதோ ஐயா எழுத்தறியும் பெருமானே. 7

உண்ணாடும் வல்வினையால் ஓயாப் பிணியுழந்து புண்ணாக நெஞ்சம் புழுங்குகின்றேன் புண்ணியனே கண்ணாளா உன்றன் கருணை யெனக்களிக்க, எண் ணாயோ ஐயா எழுத்தறியும் பெருமானே. 8

புன்செய்கை மாறாப் புலையமட மங்கையர்தம் வன் செய்கை யாலே மயங்குகின்ற வஞ்சகனேன்

பெருமான்—கோதகன்ற மனக் குகையில் வாழ்பவன்

கொன்செய்கை மாறாத கூற்றன் வருவானேல்என் செய்வேனையா எழுத்தறியும் பெருமானே. 9

சங்குடையான் தாமரையான் தாள்முடியுங் காண்பரிதாங், கொங்குடைய கொன்றைக் குளிர்சடையாய்க் கோதையொரு, பங்குடையாய் ஏழைமுகம் பாராது தள்ளிவிட்டால், எங்கடைவேனையா எழுத்தறியும் பெருமானே. 10

மின்போல்வா ரிச்சையினால் வெம்புகின்றேனானும், தன்போல்வாய் என்னீன்ற தாய்போல்வாய் சார்ந்திரையாப் பொன்போல்வாய் நின்னருளிப் போதடியேன் பெற்றேனேல், என்போல்வா ரில்லை எழுத்தறியும் பெருமானே. 11

பூமாந்தும் வண்டென நின் பொன்னருளைப் புண்ணியர்கள், தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்துநின்றாரையோ நான், காமாந்த காரமெனுங் கள்ளுண்டு கண்மூடி, எமாந்தேனொற்றி எழுத்தறியும் பெருமானே. 12

விட்டுக் கடங்கா விளையாட்டுப் பிள்ளையெனத் தேட்டுக் கடங்காத தீமனத்தா லாந்துயரம் பாட்டுக் கடங்காநின் பத்த ரடிப்புகழ்போல் ஏட்டுக் கடங்காது எழுத்தறியும் பெருமானே. 13

ஆவதும் நெஞ்சால்! அழிவதும் நெஞ்சால்!!

பொன்னைமதித் தையாநின்பொன்னடியைப் போற்றாத, கல்நிகரும் நெஞ்சாற் கலங்குகின்ற கைதவனேன் இன்னல் உழக்கின்ற ஏழைகட்கும் ஏழைகண்டாய் என்னை விடாதே எழுத்தறியும் பெருமானே. 14

ஊழை யகற்ற வளவறியாப் பொய்யனிவன், பீழை மனம் நம்மைப் பெறாதம் மனங்கொடிய, தாழையென எண்ணியென்னைத் தள்ளிவிட்டாலென்செய்வேன், ஏழை நானொற்றி எழுத்தறியும் பெருமானே. 15

ஊர்மதிக்க வினில் உளறுகின்ற தல்லதுநின்
சீர்மதிக்க நின்னடியைத் தேர்ந்தேத்தேன் ஆயிடினுங்
கார்மதிக்கு நஞ்சமுண்ட கண்டநினைந் துள்குகின்றேன்
ஏர்மதிக்கும் ஒற்றியூ ரெந்தையளி யெய்தாயோ. 16

தாய்க்குமினி தாகுமுன்றன் றாண்மலரை யேத்தாது
நாய்க்குங் கடையாய் நலிகின்றே னாயிடினும் [றேன்
வாய்க்குமுன்றன் சந்நிதிக்கண் வந்துவந்து வாடுகின்
றாய்க்குமரன் றந்தாயென் சோர்வறிந்து தீராயோ. 17

நறைமணக்குங் கொன்றை நதிச்சடில நாயகனே
கறைமணக்குந் திருநீல கண்டப் பெருமானே [டைய
உறைமணக்கும் பூம்பொழில்சூ ழொற்றியப்பா வுன்னு
மறைமணக்குந் திருவடியைவாய்நிரம்ப வாழ்த்தேனோ. 18

'ஈனம் அந்தோ இவ்வுலகம்' என அருளை நாடு

ஆறடுத்துச் சென்றவெங்கள் அப்பருக்கா அன்றுகட்டுச்
சோறெடுத்துச் சென்ற துணையே சயஞ்சுடரே
ஊறெடுத்தோர் காணரிய வொற்றியப்பா வுன்னுடைய
நீறடுத்த வெண்டோள் நிலைமைதனைப் பாரேனோ. 19

பாடுகின்றோர் பாடப் பரிசளிக்கும் புண்ணியனே
தேடுகின்றோர் தேடநிற்குந் தியாகப் பெருமானே
ஊடுகின்றோ ரில்லாத வொற்றியப்பா அம்பலத்துள்
ஆடுகின்ற சேவடிகண் டல்லலெலாந் தீரேனோ. 20

பெண்மணியேயென்றுலகிற்பேதையரைப்பேசாதென்
கண்மணியே கற்பகமே கண்ணுதலிற் கொள்கரும்பே
ஒண்மணியேதேனேயென் றொற்றியப்பாவுன்றனை நான்
பண்மணஞ்செய் பாட்டிற் பரவித் துதியேனோ. 21

கல்லார்க் கிதங்கூறிக் கற்பழிந்து நில்லாமல்
எல்லார்க்கு நல்லவனே யென்னரசே நற்றருமம்
ஒல்லார் புரமெரித்த ஒற்றியப்பா வுன்னடிக்கே
சொல்லான் மலர்தொடுத்துச்சூழ்ந்தணிந்து வாழேனோ22

தந்தைதாய் மக்கண்மனை தாரமெனுஞ் சங்கடத்திற்
சிந்தைதான் சென்று தியங்கி மயங்காமே
உந்தையென்போரில்லாத வொற்றியப்பா உன்னடிக்கீழ்
முந்தையோர் போன்று முயங்கி மகிழேனோ. 23

வாயாடுயோர் பால் மருவி நில்லேல்

தூக்கமுமுன் தூங்கியபின் சோறிலையே யென்னுமந்த
ஏக்கமுமே யன்றி மற்றோ ரேக்கமிலா வேழையனேன்
ஊக்கமுளோர் போற்றுகின்றவொற்றியப்பா உன்னடிக்
கீழ், நீக்கமிலா ஆனந்த நித்திரைதான் கொள்ளேனோ.24

பொன்னாசை யோடும் புலைச்சியர்தம் பேராசை
மன்னாசை மன்னுகின்ற மண்ணாசைப்பற்றறுத்தே, உன்
னாசைகொண்டேயென்னொற்றிப்பாநான் மகிழ்ந்துன்
மின்னாரும் பொன்மேனி வெண்ணீற்றைப் பாரேனோ.25

கள்ளுண்ட நாய்போல் கடுங்காம வெள்ளமுண்டு
துள்ளுண்ட நெஞ்சத் துடுக்கடக்கி யன்பர்கள் தம்
உள்ளுண்ட தெள்ளமுதே ஒற்றியப்பா வுன்றனைநான்
வெள்ளுண்ட நந்தி விடைமீதிற் காணேனோ. 26

கூட்டுவிக்குள் மேலெழவே கூற்றுவன்வந் தாவிதனை
வாட்டுவிக்குங் காலம் வருமுன்னே யெவ்வுயிர்க்கும்
ஊட்டுவிக்குந் தாயாகும் ஒற்றியப்பா நீபுலகை
ஆட்டுவிக்கும் அம்பலத்துன் ஆட்டமதைப் பாரேனோ. 27

கண்ணப்பா வென்றருளுங் காளத்தி யப்பாமுன்
வண்ணப்பால் வேண்டும் மதலையைப்பால் வாரிதியை
உண்ணப்பா என்றுரைத்த ஒற்றியப்பா வந்தருள
எண்ணப்பா வென்றழுமிவ் ஏழைமுகம் பாராயோ. 28

தெய்வமெங்கே? என்பவரைச் சேர்ந்துறையேல்

கண்ணா ரமுதே கரும்பே யென் கண்ணேயென்
அண்ணாவுன் பொன்னருள்தா னார்ந்திடுமோ அல்ல
தென்றும், நண்ணாதோ யாது நணுகுமோ என்றுருகி
எண்ணாது மெண்ணுமிந்த ஏழைமுகம் பாராயோ. 29

மண்ணேயும் வாழ்க்கையிடைமாழாந்து வன்பிணியாற்
புண்ணேயு நெஞ்சம் புழுங்குகின்ற பொய்யவனேன்
பண்ணேயு மின்பப் பரஞ்சுடரே யென்னிரண்டு
கண்ணேயுன்பொன்முகத்தைக்காணக்கிடைத்திலனே 30

ஒப்பாரு மில்லாத வுத்தமனே ஒற்றியிலென்
அப்பாவுன் பொன்னடிக்கே அன்பிலே னானும்
தப்பா தகமெலியச் சஞ்சலத்தா லேக்குகின்ற
இப்பாத கத்தேற்கு இரங்கினா லாகாதோ. 31

எந்தையே யென்பவர்தம் இன்னமுதேயென் னுரிமைத்
தந்தையே தாயே தமரேயென் சற்குருவே
சிந்தையே யோங்குந் திருவொற்றி யையாவென்
நிந்தையே நீங்க நிழலளித்தா லாகாதோ. 32

கோடாமே பன்றிதருங் குட்டிகட்குத் தாயாகி
வாடா முலைகொடுத்த வள்ளலென நானடுத்தேன்
வாடாவென் றன்னருளில் வாழ்வா னருளிலையேல்
ஈடாரு மில்லா யெனக்கா ரிரங்குவரே. 33

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலுங்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 1

உம்பர் வான்துயர் ஒழித்தருள் சிவத்தை
உலகெ லாம்புகழ் உத்தமப் பொருளைத்
தம்ப மாயகி லாண்டமுந் தாங்கும்
சம்பு வைச்சிவ தருமத்தின் பயனைப்
பம்பு சீரருள் பொழி தரு முகிலைப்
பரம ஞானத்தைப் பரமசிற் சுகத்தை
நம்பி னோர்களை வாழ்விக்கும் நலத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 2

திக்கு மாறினும் எழுகடல் புவிமேல்
சென்று மாறினும் சேண்விளங் கொளிகள்
உக்கு மாறினும் பெயலின்றி உலகில்
உணவு மாறினும் புவிகளோ ரேழும்

வாடுகின் றனை அஞ்சலை நெஞ்சே
மார்க்கண் டேயர்தம் மாண்பறிந் திலையோ
நாடு கின்றவர் நாதன்றன் னாமம்
நமச்சி வாயங்கா ணும்பெறுந் துணையே. 8

மாலுந் துஞ்சுவான் மலரவ னிறப்பான்
மற்றை வானவர் முற்றிலும் அழிவார்
ஏலும் நற்றுணை யார்நமக் கென்றே
எண்ணி நிற்றியோ ஏழைநீ நெஞ்சே
கோலு மாயிரங் கோடியண் டங்கள்
குலைய நீக்கியு மாக்கியும் அளிக்கும்
நாலு மாமறைப் பரம்பொருள் நாமம்
நமச்சி வாயங்கா ணும்பெறுந் துணையே. 9

அழுத பிள்ளைக்கே பாலுண வளிப்பாள்
அன்னை யென்பர்கள் அழவலி யில்லாக்
கொழுது நேர்சிறு குழவிக்குங் கொடுப்பாள்
குற்ற மன்றது மற்றவள் செயலே
தொழுது நின்னடி துதிக்கின்றோர்க் கெனவே
துட்ட னேனுக்குஞ் சூழ்ந்தருள் செயலாஞ்
செழுத மாதவி மலர்திசை மணக்கத்
திகழு மொற்றியூர்த் தியாகமாமணியே. 10

துச்சிலை விரும்பித் துயர்கொளுங் கொடியேன்
துட்டனேன் றூய்மை யொன் றில்லா
எச்சிலை யனையேன் பாவியே னென்னை
என்செய்தாற் றீருமோ அறியேன்
பச்சிலை யிடுவார் பக்கமே மருவும்
பரமனே யெம்பசு பதியே
அச்சிலை விரும்பும் அவருளத் தமுதே
ஐயனே ஒற்றியூ ரரசே. 11

இல்லையென் பதனுக் கஞ்சிடேன் நாய்க்கும்
இணையிலேன் இழிவினேன் துயர்க்கோர்
எல்லைமற் றறியேன் ஒதியனேன் என்னை
என் செய்தாற் றீருமோ அறியேன்
கல்லைவில் லாக்குங் கருணைவா ரிதியே
கண்ணுத லுடைய செங்கனியே
தில்லைவா ழரசே தெய்வமா மணியே
திரு வொற்றியூர் வருந்தேவே. 12

கருதென வடியார் காட்டியுந் தேறுக்
கன்மனக் குரங்கனே னுதவா
எருதென நின்றேன் பாவியே னென்னை
என் செய்தாற் றீருமோ வறியேன்

மருதிடை நின்ற மாணிக்க மணியே
வன்பவந் தீர்த்திடு மருந்தே
ஒருதிற முடையோ ருள்ளத்துள் ஒளியே
ஒற்றியூர் மேவுமென் னுறவே. 13

தேனென வினிக்குந் திருவருட் கடலே
தெள்ளிய வமுதமே சிவமே
வானென நிற்குந் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
ஊனென நின்ற வுணர்விலே னெனினும்
உன்றிருக் கோயில்வந் தடைந்தால்
ஏனெனக் கேளா திருந்தனை யையா
ஈதுநின் றிருவருட் கியல்போ. 14

நாயின் மேவிய தற்பர மேமுல்லை
வாயின் மேவிய மாமணி யேயுன்றன்
கோயின்மேவிநின் கோம லர்த்தாள் தொழா
தேயின் மேவி யிருந்தன னென்னையே. 1

தேசு லாவிய சீர்முல்லை வாயில்வாழ்
மாசிலாமணி யேமருந் தேசற்றுங்
கூசி லாமல்நின் கோயில்வந் துன்புகழ்
பேசி டாத பிழைபொறுத் தாள்வையே. 2

திரைப டாத செழுங்கட லேசற்றும்
உரைப டாம லொளிசெய் பொன் னேபுகழ்
வரைப டாது வளர்வல்லி கேசநீ
கரைப டாக்கந்தை சாத்திய தென்கொலோ. 3

திரப்ப டுந்திரு மாலயன் வாழ்த்தத்
தியாக ரென்னுமோர் திருப்பெய ரடைந்தீர்
வரப்ப டுந்திறத் தீருமை யடைந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
இரப்ப வர்க்கொன் றும் ஈகிலீ ரானல்
யாதுக் கையநீ ரிப்பெய ரெடுத்தீர்
உரப்ப டுந்தவத் தோர்துதித் தோங்க
ஓங்கு சீரொற்றி யூருடை யீரே. 1

தாயி லாரென் னெஞ்சகந் தளர்ந்தேன்
தந்தை யுந்திருச் சந்நிதி யடைந்தேன்
வாயிலாரென இருக்கின்றீ ரல்லால்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
கோயி லாகவென் னெஞ்சகத் தமர்ந்த
குணத்தி னீரென்றன் குறையறி யீரோ
ஓயி லாதுநற் றொண்டருக் கருள்வான்
ஓங்கு சீரொற்றி யூருடை யீரே. 2

அஞ்செழுந் தோதி யுய்ந்திடாப் பிழையை ஐய நின்றிருவுளத் தெண்ணி, வெஞ்சனென் றையோகை விடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே, கஞ்சன் மான்முதலோ ருயிர்பெற விடத்தைக் களத்திருத் திய வருட்கடலே, சஞ்சித மறுக்குஞ் சண்முக முடையோன் றந்தையே யொற்றியெந் தவமே. 3

நம்பினே னின்றன் றிருவடி மலரை நாயினேன் பிழைதனைக் குறியேல, வெம்பினே னையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய்வேனே, தும்பிமா முகனை வேலனை யீன்றதோன்றலே வச்சிரத் தாணே, அம்பிகா பதியே யண்ணலே முக்கண் அத்தனே யொற்றி யூரமுதே. 4

துங்க வெண்பொடி யணிந்துநின் கோயிற்
றொழும்பு செய்துநின் றுணைப்பத மேத்திச்
செங்கண் மாலயன் றேடியும் காணுச்
செல்வ நின்னருள் சேர்குவ தென்றோ
எங்க ளுள்ளுவந் தூறிய வமுதே
இன்ப மேயிமை யான்மகட் கரசே
திங்கள் தங்கிய சடையுடை மருந்தே
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 5

தாய்போல் உரைப்பர் சன்மார்க்க சங்கத்தவர்

கண்ணா னேடயன் காண்பருஞ் சுடரே
கந்த னென்னுமோர் கனிதருந் தருவே
எண்ண மேதகு மன்பர்தந் துணையே
இலங்குந் திவ்விய எண்குணப் பொருப்பே
அண்ண லேதிரு ஆலங்காட் டுறையும்
அம்மை யப்பனே அடியனேன் றன்னைத்
திண்ண மேயடித் தொழும்பனுய்ச் செய்வாய்த்
திகழு மொற்றியூர்ச் சிவபெருமானே. 6

உடையாயுன் அடியவர்க்கும் அவர்மேற் பூண்ட
ஒண்மணியாங் கண்மணிக்கும் ஓங்கு சைவ
அடையாள மென்னவொளிர் வெண்ணீற் றுக்கும்
அன்பிலேன் அஞ்சாம லந்தோ வந்தோ
நடையாய வுடல்முழுதும் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்பாவி நாவைச் சற்றும்
இடையாத கொடுந்தீயாற் சுடினு மன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 7

வஞ்சமிலார் நெஞ்சகத்தே மருவு முக்கண்
மாமணியே யுனைநினையேன் வாளா னாளைக்
கஞ்சமலர் முகத்தியர்க்கும் வாதிற் றேன்றுங்
களிப்பினுக்குங் கழிக்கின்றேன் கடைய னேனை

ஜீவகாருண்யம் இல்லாத பக்தி மாயா ஜாலமே

நஞ்சமுணக் கொடுத்து மடித்திடினும் வாளால்
நசிப்புறவே துணித்திடினும் நலியத் தீயால்
எஞ்சலறச் சுடினும்அன்றி யந்தோ வின்னும்
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 8

அருள்பழுக்குங் கற்பகமே யரசே முக்கண்
ஆரமுதே நினைப்புகழே னந்தோ வஞ்ச
மருள் பழக்கும் நெஞ்சகத்தேன் வாளா நாளை
வாதமிட்டுக் கழிக்கின்றேன் மதியிலேனை
வெருள்பழுக்குங் கடுங்காட்டில் விடினும் ஆற்று
வெள்ளத்தி லடித்தேக விடினும் பொல்லா
இருள்பழுக்கும் பிலஞ்சேர விடினு மன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 9

தொழுகின்றோ ருளத்தமர்ந்த சுடரே முக்கட்
சுடர்க்கொழுந்தே,நின்பதத்தைத் துதியேன்வாதில்
விழுகின்றேன் நல்லோர்கள் வெறுப்பப் பேசி
வெறித்துழலும் நாயனையேன் விழல னேனை
உழுகின்ற நுகப்படைகொண் டுலையத் தள்ளி
உழக்கினும் நெட்டுடல்நடுங்க வுறுக்கி மேன்மேல்
எழுகின்ற கடலிடைவீழ்த் திடினு மன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 10

அக்கநுதற் பிறைச்சடையாய் நின்றா ளேத்தேன்
ஆண்பனைபோல் மிகநீண்டே னறிவொன்றில்லேன்
மிக்கவொதி போற்பருத்தேன் கருங் கடாப்போல்
வீண்கருமத் துழல்கின்றேன் விழல னேனைச்
செக்கிடைவைத் துடல்குழம்பிச் சிதைய வந்தோ
திருப்பிடினும் இருப்பறைமுட் சேரச் சேர்த்து
எக்கரிடை யுருட்டுகினும் அன்றி யின்னும்
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 11

அன்புடன்நின் பதம்புகழாப் பாவி நாவை
அரத்துணியேன் நின்னழகை யமர்ந்து காணாத்
துன்புறுகண் இரண்டினையுஞ் சூன்றேன் நின்னைத்
தொழாக்கையை வாளதனாற் றுண்ட மாக்கேன்
வன்பறநின் றனைவணங்காத் தலையை யந்தோ
மடித்திலே னொதியேபோல் வளர்ந்தே னென்னை
இன்பறுவல் லெரியிடைவீழ்த்திடினு மன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 12

தேவேநின் னடிநினையா வஞ்ச நெஞ்சைத்
தீமூட்டிச் சிதைக்கறியேன் செதுக்குகில்லேன்
கோவேநின் னடியர்தமைக் கூடாப் பொய்மைக்
குடிகொண்டேன் புலைகொண்ட கொடியே னந்தோ

நாவேற நினைத்துதியேன் நலமொன் றில்லேன்
நாய்க்கடைக்குங் கடைப்பட்டேன் நண்ணுகின்
றோர்க்கு, ஈவேதும் அறியேனிங் கென்னையுந்தோ
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 13

பொருந்தி யினருட் புகுந்துவீண் காலம்
போக்கி நின்றனை போனது போக
வருந்தியின்னுமிங் குழன்றிடேல் நெஞ்சே
வாழ்க வாழ்கநீ வருதியென்னுடனே
திருந்தி நின்றநம் மூவர்தம் பதிகச்
செய்யதீந் தமிழ்த் தேறலுண் டருளைத்
தருந்தேன் ஒற்றியூர் வாழுநஞ் செல்வத்
தந்தையாரடிச் சரண்புக லாமே. 14

வெறிபி டிக்கினும் மகன்றனைப் பெற்றோர்
விடுத்திடா ரந்த வெறியது தீரும்
நெறிபி டித்துநின் றுய்வரென் னரசே
நீயு மப்படி நீசனேன் றனக்குப்
பொறிபி டித்தநற் போதக மருளிப்
புன்மை யாவையும் போக்கிடல் வேண்டுஞ்
செறிபி டித்தவான் பொழிலொற்றி யமுதே
தில்லை யோங்கிய சிவானந்தத் தேனே. 15

பணிகொள் மார்பினர் பாகன மொழியாள்
பாகர் காலனைப் பாற்றிய பதத்தார்
திணிகொள் வன்மத மலையுரி போர்த்தோர்
தேவ நாயகர் திங்களஞ் சடையார்
அணிகொ ளொற்றியூ ரமர்ந்திடுந் தியாகர்
அழக ரங்கவ ரமைந்துவீற் றிருக்கும்
மணிகொள் கோயிற்குத் திருப்பணி செய்குதும்
வாழ்க நீயுடன் வருதியென் மனனே. 16

மன்னு ருத்திரர் வாழ்வைவேண் டினையோ
மால வன்பெறும் வாழ்வுவேண் டினையோ
அன்ன வூர்திபோ லாகவேண் டினையோ
அமையு மிந்திர னாகவேண் டினையோ
என்ன வேண்டினும் தடையிலை நெஞ்சே
இன்று வாங்கிநான் ஈகுவ னுனக்கே
வன்னி யஞ்சடை யெம்பிரா னொற்றி
வளங்கொ ளூரிடை வருதியென் னுடனே. 17

அமை வறிந்திடா ஆணவப் பயலே
அகில கோடியும் ஆட்டுகின் றவன்காண்
எமை நடத்துவோ னீதுணை ராமல்
இன்று நாம்பர னிணையடி தொழுதோம்

கமைவி னேத்தினேம் அடியரு மானேம்
கனிகின் றேமெனக் கருதிட மயக்கேல்
உமைய னொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 18

கருமை யாம் அகங் கார மர்க் கடவா
கடையனே யுனைக் கலந்தத னாலே
அருமை யாகநாம் பாடினேம் கல்வி
அறவ றிந்தனம் அருளையு மடைந்தோம்
இருமை யின்பமும் பெற்றனம் என்றே
எனை மதித்துநான் இழிவடைந் தனன்காண்
ஒருமை யொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 19

பண்ணுலுன் அருட்புகழைப் பாடுகின்றார்
பணிகின்றார் நின்னழகைப் பார்த்துப்பார்த்துக்
கண்ணார வுளங்குளிரக் களித்தா னந்தக்
கண்ணீர்கொண் டாடுகின்றார் கருணை வாழ்வை
எண்ணுகின்று உனையெந்தாய் எந்தாய் எந்தாய்
என்கின்றார் நின்அன்ப ரெல்லாம் என்றன்
அண்ணு நானொருபாவி வஞ்சநெஞ்சால்
அலைகின்றேனென்செய்கேன் அந்தோவந்தோ.20

தூற்றுவதால் வேற்றுமை ஒழியாது

நம்பி நான் தயவிருக்க இங்கெனக்கோர்
தாழ்வுண்டோவெனத் தருக்கொடுமிருந்தேன்
எம்பிரா னினக் கேழையே னளவில்
இரக்க மொன்றிலை யென்னென்ப தின்னும்
நம்பி நானென நம்பிநிற் கின்றேன்
நம்பு மென்றனை வெம்பிடச் செயினும்
செம்பி ரானரு ளளிக்கினு முனது
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 21

நாடுந் தாயினும் நல்லவன் நமது
நாதன் என்றுனை நாடுமப் பொழுதே
வாடும் நெஞ்சகந் தளிர்க்கின்றேன் மற்றை
வைகற் போதெலாம் வாடுகின் றனன்காண்
பாடுந் தொண்டர்க ளிடர்ப்படிற் றரியாப்
பண்பென் மட்டுநின் பாலிலை போலும்
தேடும் பத்தர்தம் உளத்தமர் வோய்நின்
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 22

ஆண்ட நின் கருணைக் கடலிடை யொருசிற்
றணுத்துணைத் திவலையே யெனினும்
ஈண்டவென் றன்மேற் றெறித்திடே லுய்வேன்
இல்லையே லென்செய்கே னெளியேன்

சன்மார்க்க வித்து சமரசக் கனி

நீண்டவ னயன்மற் றேனைவா னவர்கள்
நினைப்பரு நிலைமையை யன்பர்
வேண்டினும் வேண்டா விடினுமாங் களிக்கும்
விமலனே விடைப் பெரு மானே. 23

என்றுநின் னருள்நீ ருண்டு உவந் திடுநாள்
என்றுநின் னுருவுகண் டிடுநாள்
என்றுநின் னடியர்க் கேவல்செய் திடுநாள்
என்று என தகத்துய ரறுநாள்
மன்றுள்நின் றாடும் பரஞ்சுடர்க் குன்றே
வானவர் கனவினுந் தோன்றா
தொன்றுறு மொன்றே யருண்மய மான
உத்தம வித்தக மணியே. 24

தீது செய்தனன் செய்கின்றேன் செய்வேன்
தீய னேன் கொடுந் தீக்குண இயல்பே
ஏது செய்தன னேனுமென் றன்னை
என்று கொள்வதெம் மிறைவநின் னியல்பே
ஈது செய்தனை யென்னைவிட் டுலகில்
இடர்கொண் டேங்கென இயம்பிட லடியேன்
ஓது செய்வ தொன் றென்னுயிர்த் துணையே
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 25

பிறப்பிறப்பென்பது உயிர் உடல் மாறல்

அன்னை யப்பனும் நீயென மகிழ்ந்தே
அகங் குளிர்ந்துநான் ஆதரித் திருந்தேன்
என்னை யிப்படி யிடர்கொள விடுத்தால்
என்செய் கேனிதை யாரொடு புகல்கேன்
பொன்னை யொத்தநின் னடித்துணை மலரைப்
போற்று வார்க்குநீ புரிகுவ திதுவோ
உன்னை யெப்படி யாயினு மறவேன்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 26

விண்படைத்த புகழ்த்தில்லை அம்பலத்தானெவர்க்கும்
மேலானன் அன்பருள மேவுநட ராஜன்
பண்படைத்த வெனையறியா இளம்பருவந் தனிலே
பரிந்துவந்து மாலையிட்டான் பார்த்தறியான்மீட்டும்
பெண்படைத்த பெண்களெலாம் அவமதித்தே வலது
பேசுகின்றார் கூசுகின்றேன் பிச்சியென லானேன்
கண்படைத்துங்குழியில்விழக்கணக்குமுண்டோஅவன்
றன்,கணக்கறிந்தும்விடுவேனோகண்டாயென்றோழி

சீந்தமணி யம்பலத்தா னென் பிராணநாதன்
சிவபெருமா னெம்பெருமான் செல்வநட ராஜன்
வாய்த்தவென்னை யறியாத விளம்பருவந் தனிலே
மகிழ்ந்துவந்துமாலையிட்டார்மறித்து முகம்பாரார்

சிறுதேவர்களைப் பிதற்றுபவர்பால் சேர்ந்துறையேல்

ஆய்த்தகலை கற்றுணர்ந்த அணங்கனையார்தமக்குள்
ஆர்செய்த போதனையோ ஆனாலு மிதுகேள்
காய்த்தமரம் வளையாத கணக்குமுண்டோ அவன்றன்
கணக்கறிந்தும்விடுவேனோ கண்டாயென்றோழி.

திருவுளந் தெரியேன் திகைப்புறு கின்றேன்
சிறியரிற் சிறியனேன் வஞ்சக்
கருவுளக் கடையேன் பாவியேன் கொடிய
கன்மனக் குரங்கனே னந்தோ
வெருவுறு கின்றே னஞ்சலென் றின்னே
விரும்பியாட் கொள்ளுதல் வேண்டும்
மருவுமா கருணைப் பெருங்கட லமுதே
வள்ளலே யென்பெரு வாழ்வே. 29

புலால் மறுத்தல்

மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்திற் கண் விழித்து வயங்கு மப்பெண், உருவாணை யுருவாக்கி இறந்தவரை யெழுப்புகின்ற வுருவ னேனும், கருவாள் கையுற இரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்தனேல் எங், குருவாணை யெமதுசிவக் கொழுந் தாணை ஞானியெனக் கூறொ ணாதே. 30

மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக் கில்லை யென்றார் மேலோர் நானும், பொய்விளக்கே விளக் கெனவுட்பொங்கிவழி கின்றேனோர் புதுமை யன்றே, செய்விளக்கும் புகழுடைச் சென்னநகர் நண்பர்களே செப்பக் கேளீர், நெய்விளக்கே போன்றொரு தண் ணீர் விளக்கு மெரிந்ததுசந் நிதியின் முன்னே. 31

சீர்தரு வார்புகழ்ப் பேர்தருவாருட் டேன்றருவார்
ஊர்தரு வார்மதி யுந்தரு வார்கதி யுந்தருவார்
ஏர்தரு வார்தரு வாரொற்றி யூரெம் மிறைவரன்றி
யார்தரு வார்நெஞ்ச மேயிக்கு மங்கு மியம்புகவே. 32

நேரா வழுக்குத் துணியாகி லுன்றனை நேரிற்கண்டும்
பாரா தவரென நிற்பார் உடுத்தது பட்டெனிலோ
வாரா திருப்பதேன் வாருமென் பாரிந்த வஞ்சகர்பாற்
சேராதுநன்னெஞ்சமேயொற்றியூரனைச்சேர்விரைந்தே.

நீடுகின்ற மாமறையும் நெடுமாலுந் திசைமுகனும் நிமல வாழ்க்கை, நாடுகின்ற முனிவரரு முருத்திரருந் தேடவரு ணட்டங் கொண்டு, பாடுகின்ற மெய்யடிய ருளம்விரும்பி யானந்தப் படிவ மாகி, ஆடுகின்ற மாமணியை யாரமுதை நினைந்துநினைந் தன்புசெய்வாம். 34

மறைமுடி விளக்கே போற்றி மாணிக்க மலையே
போற்றி, கறைமணி கண்ட போற்றி கண்ணுதற்
கரும்பே போற்றி, பிறைமுடிச் சடைகொண் டோங்கும்
பேரருட் குன்றே போற்றி, சிறைதவிர்த் தெனையாட்
கொண்ட சிவசிவ போற்றி போற்றி. 35

நிதியை நினைந் தனைமறந்த மதியைநினைந் தழு
கேனோ நிமலா னந்தக், கதியையிகழ்ந் திருள்விழைந்த
விதியைநினைந் தழுகேனோ கண்போல் வாய்ந்த,
பதியையுனைப் பாடாத பாட்டை நினைந் தழுகேனோ
படிற்று, நெஞ்சச் சதியைநினைந் தழுகேனோ யாது குறித்
தழுகேனித் தமிய னேனே. 36

தாய்தடை யென்றேன் பின்னர்த் தாரமே தடை
யென்றேனான், சேய்தடை யென்றே னிந்தச் சிறு தடை
யெல்லாந் தீர்ந்துந், தோய்தடைச் சிறியேனின்னுந்
துறந்திலே னெனைத் தடுக்க, ஏய்தடை யாதோ வெந்தா
யென்செய்கே னென்செய் கேனே. 37

கள்ளுருகு மலர்மணம்போற் கலந்தெங்கும் நிறைந்
தோய்நின் கருணைக் கந்தோ, முள்ளுருகும் வலியபராய்
முருடுருகும் உருகாத முறைசேர்கல்லும், வள்ளுருகும்
மலையுருகும் மண்ணுருகும் மரமுருகும் மதியிலேன்

றன், உள்ளுருகும் வகையிலையென் செய்கேனா னேன்
பிறந்தே னொதிய னேனே. 38

மன்னுயிர்க்குந் தாய் தந்தை குரு தெய்வம் உறவு
முதல் மற்று நீயே, பின்னுயிர்க்கோர் துணைவேறு பிறி
திலையென்று யானறிந்தபின் பொய்யான, மின்னுடற்
குத் தாய்தந்தை யாதியரை மதித்தேனோ விரும்பி
னேனோ, என்னுயிர்க்குத் துணைவாநின் னாணை
யொன்று மறியேனான் இரங்கிடாயே. 39

**சீரார் வளஞ்சேர் ஒற்றிநகர்த் தியாகப்பெருமான்
பவனிதனை,** ஊராருடன்சென் றெனதுநெஞ்சம்உவகை
யோங்கப் பார்த்தனன்காண், வாரார் முலைகண் மலைக
ளென வளர்ந்த வளைகள் தளர்ந்தனவால், ஏரார்குழலா
யென்னடிநா ளிச்சை மயமாய் நின்றதுவே. 40

திடனுன் மறையார் திருவொற்றித் தியாக ரவர்
தம் பவனிதனை, மடனா மகன்று காணவந்தால் மலர்க்
கை வளைக ளினைக் கவர்ந்து, படனா கணியார் நமைத்
திரும்பிப் பாராதோடு கின்றார்நாம், உடனா வோடினாலு
மவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. 41

நிறையணிந்த சிவகாமி நேயநிறை யொளியே
நித்தபரி பூரணமாஞ் சுத்தசிவ வெளியே

கறையணிந்த களத்தரசே கண்ணுடைய கரும்பே
கற்கண்டே கனியேயென் கண்ணே கண்மணியே
பிறையணிந்தமுடிமலையேபெருங்கருணைக்கடலே
பெரியவரெல்லாம்வணங்கும்பெரியபரம் பொருளே
குறையணிந்து திரிகின்றேன் குறைகளெல்லாந்தவிர்த்தே
குற்றமெலாங்குணமாகக்கொள்வதுநின்குணமே. 42

துப்பாடு திருமேனிச் சோதிமணிச் சுடரே
துரியவெளிக் குள்ளிருந்த சுத்தசிவ வெளியே
அப்பாடு சடைமுடியெம் ஆனந்த மலையே
அருட்கடலே குருவேயென்னாண்டவனே யரசே
இப்பாடு படவெனக்கு முடியாது துரையே
இரங்கியருள்செயல்வேண்டுமிது தருணங்கண்டாய்
தப்பாடு வேனெனினு மென்னைவிடத் துணியேல்
தனிமன்றுள்நடம்புரியுந் தாண்மலரெந்தாயே. 43

பையார் பாம்பு கொடியதெனப் பகர்வா ரதற்கும்
பரிந்துமுன்னாள், ஐயா கருணையளித்தனையென் னளவி
வின்னு மளித்திலையே, மையார் மிடற்றா யானந்த
மன்றில் நடிப்போய் வல்வினையேன், நையா நின்றேன்
ஐயோநான் பாம்பிற் கொடிய னானேனே. 44

அருட்பெருஞ்சோதி அகவல்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் ஜோதி
ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகநின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி
இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெருஞ் ஜோதி
ஈனமின் றிகபரத் திரண்டின்மேற் பொருளாய்
ஆனலின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி
உரைமனங் கடந்த ஒருபெரு வெளிமேல்
அரைசுசெய் தோங்கும் அருட்பெருஞ் ஜோதி
ஊக்கமு முணர்ச்சியும் ஒளிதரு மாக்கையும்
ஆக்கமு மருளிய அருட்பெருஞ் ஜோதி
எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்தியென்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி
ஏறா நிலைமிசை ஏற்றியென் றனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ் ஜோதி

ஐயமுந் திரிபும் அறுத்தென துடம்பினுள்
ஐயமு நீக்கிய அருட்பெருஞ் ஜோதி
ஒன்றென இரண்டென ஒன்றிரண் டெனவிவை
அன்றென விளங்கிய அருட்பெருஞ் ஜோதி
ஓதாதுணர்ந்திட ஒளியளித் தெனக்கே
ஆதாரமாகிய அருட்பெருஞ் ஜோதி
ஔவிய மாதியோர் ஆறுந் தவித்தபேர்
அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி
திருநிலைத் தனிவெளி சிவவெளி யெனுமோர்
அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ் ஜோதி
சுத்தசன் மார்க்கச் சுகத்தனி வெளியெனும்
அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
சுத்தமெய்ஞ் ஞானச் சுகோதய வெளியெனும்
அத்து விதச்சபை அருட்பெருஞ் ஜோதி
எங்கே கருணை இயற்கை யினுள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே
யாரே யெனினும் இரங்குகின் றூர்க்குச்
சீரே யளிக்குஞ் சிதம்பர சிவமே
எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும்
அஞ்சேல் என்றருள் அருட்பெருஞ் ஜோதி

கொல்லா நெறியே குருவருள் நெறியெனப்
பல்கா லெனக்குப் பகர்ந்தமெய்ச் சிவமே
உயிரெலாம் பொதுவின் உளம்பட நோக்குக
செயிரெலாம் விடுகெனச் செப்பிய சிவமே
அருணெறி யொன்றே தெருணெறி மற்றெலாம்
இருணெறி என எனக்கு இயம்பிய சிவமே
சபையென துளமெனத் தானமர்ந் தெனக்கே
அபய மளித்ததோர் அருட்பெருஞ் ஜோதி
மருளெலாந் தவிர்த்து வரமெலாங் கொடுத்தே
அருளமு தருத்திய அருட்பெருஞ் ஜோதி
வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழியொன் றளித்த அருட்பெருஞ் ஜோதி
என்னையும் பொருளென வெண்ணியென் னுளத்தே
அன்னையு மப்பனு மாகிவீற் றிருந்து
உலகியற் சிறிதும் உளம்பிடி யாவகை
அலகில்பே ரருளா லறிவது விளக்கிச்
சிறுநெறி செல்லாத் திறனளித் தழியா
துறுநெறி யுணர்ச்சிதந் தொளியுறப் புரிந்து
சாகாக் கல்வியின் தரமெலா முணர்த்திச்
சாகா வரத்தையும் தந்துமேன் மேலும்

அன்பையும் விளைவித் தருட்பேரொளியால்
இன்பையு நிறைவித் தென்னையு நின்னையும்

ஒருரு வாக்கியா னுன்னிய படியெலாஞ்
சீருறச் செய்துயிர்த் திறம்பெற வழியா

அருளமு தளித்தனை யருணிலை யேற்றினை
அருளறி வளித்தனை அருட்பெருஞ் ஜோதி

வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
அல்கலின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி

உலகுயிர்த் திரளெலா மொளிநெறி பெற்றிட
இலகுமைந்தொழிலையும் யான்செயத்தந்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலினோங்கிய அருட்பெருஞ் ஜோதி

மூவருந் தேவரு முத்தருஞ் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயலெனக் களித்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி

சித்திக ளனைத்தையுந் தெளிவித் தெனக்கே
சத்திய நிலைதனைத் தயவினிற் றந்தனை

ஏழையின் வயிறு எரியச்செய்யாதே

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி

உலகினி லுயிர்களுக் குறுமிடை யூறெலாம்
விலகநீ யடைந்து விலக்குக மகிழ்க

சுத்தசன் மார்க்கச் சுகநிலை பெறுக
உத்தம னாகுக வோங்குக வென்றனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி.

பதிவிளக்கம்

இயற்கையிலே பாசங்க ளொன்றுமிலார் குணங்கள்
ஏதுமிலார் தத்துவங்க ளேதுமிலார் மற்றோர்
செயற்கையிலார் பிறப்பில்லா சிறப்பில்லார் யாதுந்
திரிபில்லார் களங்கமில்லா தீமையொன்று மில்லார்
வியப்பறவேண்டுத லில்லார் வேண்டாமை யில்லார்
மெய்யேமெய்யாகி யெங்கும் விளங்கியின்ப மயமாம்
உயத்தகுமோர் சுத்தசிவா னந்த சபைதனிலே
ஒங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர் 1

நில்லா உடம்பை நிலையென்று நேசியாதே

அஷ்டகம்

அருட்பெருஞ்ஜோதி விளக்கம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெரு வெளியிலருட்பெரு வுலகத்
தருட்பெருந் தலத்துமே னிலையில்
அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே யமர்ந்த
அருட்பெரும் பதியே யருட்பெரு நிதியே
அருட்பெருஞ் சித்தியென் னமுதே
அருட்பெருங் களிப்பே யருட்பெருஞ்சுகமே
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 1

குலவுபே ரண்டப் பகுதியோ ரனந்த
கோடிகோடிகளுமாங் காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுதும்
நிகழ்ந்தபற் பலபொருள் திரளும்
விலகுறு தகத்தும் புறத்துமே லிடத்தும்
மெய்யறி வானந்தம் விளங்க
அலகுறு தொழியா ததுவதில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 2

கண்முதற் பொறியால் மனமுதற் கரணக்
கருவினாற் பகுதியின் கருவால்
எண்முதற் புருட தாத்தினாற் பரத்தால்
இசைக்குமோர் பரம்பர வுணர்வால்
விண்முதற் பரையால் பராபர வறிவால்
விளங்குவ தரிதென வுணர்ந்தோர்
அண்முதற் றடித்துப் படித்திட வோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 3

நசைத்தமே னிலையீ தெனவுணர்ந்தாங்கே
நண்ணியுங் கண்ணுறா தந்தோ
திசைத்தமா மறைக ளுயங்கின மயங்கித்
திரும்பின வெனிலத னியலை
இசைத்தலெங் ஙன்யோ வையகோ சிறிதும்
இசைத்திடு வேமென நாவை
அசைத்திடற்கரிதென் றுணர்ந்துளோர்வழுத்தும்
அருட்பெருஞ் ஜோதி யென்னரசே. 4

சுத்தவே தாந்த மவுனமோ வலது
சுத்தசித் தாந்தரா சியமோ
நித்தநா தாந்த நிலையனு பவமோ
நிகழ்பிற முடிபின்மேன் முடிபோ

புத்தமு தனைய சமரசத் ததுவோ
பொருளிய லறிந்தில மெனவே
அத்தகை யுணர்ந்தோ ருரைத்துரைத் தேத்தும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 5

ஏகமோ வன்றி யநேகமோ வென்றும்
இயற்கையோ செயற்கையோ சித்தோ
தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ
திகழ்ந்திடு மாணதோ வதுவோ
யோகமோ பிரிவோ வொளியதோ வெளியோ
உரைப்பதெற் றோவென வுணர்ந்தோர்
ஆகமோ டுரைத்து வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 6

தத்துவ மனைத்துந் தனித்தனி கடந்தே
தத்துவா தீதமே னிலையில்
சித்தியல் முழுதுந் தெரிந்தன மவைமேற்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்தவந் நிலைக்கண் யாமுமெம் முணர்வும்
ஒருங்குறக் கரைந்துபோ யினமென்
றத்தகை யுணர்ந்தோர் வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 7

இன்றிருந்தவரை நாளை இருந்திடக் கண்டிலேம்

எங்குமாய் விளங்குஞ் சிற்சபை யிடத்தே
இதுவது வெனவுரைப் பரிதாய்த்
தங்குமோ ரியற்கைத் தனியனு பவத்தைத்
தந்தெனைத் தன்மய மாக்கிப்
பொங்குமா னந்த போகபோக் கியனாய்ப்
புத்தமு தருத்தியென் னுளத்தே
அங்கையிற் கனிபோன் றமர்ந்தருள் புரிந்த
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 8

கலைத்தொழி லறியேன் கள்ளுணுங் கொடியேன்
கறிக்குழல் நாயினுங் கடையேன்
விலைத்தொழி லுடையேன் மெய்யெலாம் வாயாய்
விளம்புறும் வீணனே னசுத்தப்
புலைத்தொழி லுடையேன் பொய்யனேன் சீற்றம்
பொங்கிய மனத்தினேன் பொல்லாக்
கொலைத்தொழில் புரிவே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 1

எழுவினும் வலிய மனத்தினேன் மலஞ்சார்
ஈயினும் நாயினும் இழிந்தேன்
புழுவினுஞ் சிறியேன் பொய்விழைந் துழல்வேன்
புன்மையேன் புலைத்தொழிற் கடையேன்

‘செக்கி விடுவிப்பார் நமனுர் !’ விழித்திரு !

வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன்
மாண்பிலா வஞ்சக நெஞ்சக்
குழுவினும் பெரிய னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 2

குலத்திடையுங் கொடியனொரு குடித்தனத்துங் கொடியேன் குறிகளிலுங் கொடியனன்றிக் குணங்களிலுங் கொடியேன், மலத்திடையே புழுத்தசிறு புழுக்களிலுங் கடையேன் வன்மனத்துப் பெரும்பாவி வஞ்ச நெஞ்சப் புலையேன், நலத்திடையோ ரணுவளவும் நண்ணுகிலேன் பொல்லா நாய்க்குநகை தோன்றநின்றேன் பேய்க்குமிக இழிந்தேன், நிலத்திடைநானேன் பிறந்தே னின்கருத்தை யறியேன் நிற்குணனே நடராஜ நிபுண மணி விளக்கே. 3

விளக்கறியா இருட்டறையிற் கவிழ்ந்துகிடந்தழுது விம்முகின்ற குழவியினு மிகப்பெரிதுஞ் சிறியேன், அளக்கறியாத் துயர்க்கடலில் விழுந்து நெடுங்காலம் அலைந்தலைந்து மெலிந்ததுரும் பதனின்மிகத் துரும்பேன், கிளக்கறியாக் கொடுமையெலாங் கிளைத்தபழு மரத்தேன் கெடுமதியேன் கடுமையினேன் கிறிபேசும் வெறியேன், களக்கறியாப் புவியிடை நானேன்பிறந்தே னந்தோ கருணைநடத் தரசேநின் கருத்தையறி யேனே.

நடாமிசைவரு மக்காலன் வந்திடில் என் செய்வாய் ?

நாவுமானெனக் குதித்துக்கொண் டோடித்
தைய லார்முலைத் தடம்படுங் கடையேன்
கூவு காக்கைக்குச் சோற்றிலோர் பொருக்குங்
கொடுக்கநேர்ந்திடாக் கொடியரிற்கொடியேன்
ஓவு றாதுழ லீயெனப் பலகால்
ஓடி யோடியே தேடுறுந் தொழிலேன்
சாவு றுவகைக் கென்செயக் கடவேன்
தந்தையே யெனைத் தாங்கிக்கொண்டருளே.

விழியைத் தூர்க்கின்ற வஞ்சரை விழைந்தேன்
விருத்தி லேயுண வருந்தியோர் வயிற்றுக்
குழியைத் தூர்க்கின்ற கொடியரிற் கொடியேன்
கோப வெய்யனேன் பாபமே பயின்றேன்
வழியைத் தூர்ப்பவர்க்கு உளவுரைத் திடுவேன்
மாய மேபுரி பேயரிற் பெரியேன்
பழியைத் தூர்ப்பதற் கென்செயக் கடவேன்
பரமனே யெனைப் பரிந்துகொண் :_ருளே. 2

மதத்தி லேயபி மானங்கொண் டுழல்வேன்
வாட்ட மேசெயுங் கூட்டத்திற் பயில்வேன்
இதத்தி லேயொரு வார்த்தையும் புகலேன்
ஈயு மொய்த்திடற் கிசைவுறு துண்பேன்

பொய் யொழுக்கத்தார் பால் பொருந்தியுறேல்

குதத்தி லேயிழி மலத்தினுங் கடையேன்
கோடைவெய்யலின் கொடுமையிற்கொடியேன்
சிதத்தி லேயுறற் கென்செயக் கடவேன்
தெய்வமேயெனைச் சேர்த்துக்கொண்டருளே.

தூங்கு கின்றதே சுகமென வறிந்தேன்
சோற தேபெரும் பேறதென் றுணர்ந்தேன்
ஏங்கு கின்றதே தொழிலெனப் பிடித்தேன்
இரக்கின் றோர்களே யென்னினு மவர்பால்
வாங்கு கின்றதே பொருளென வலித்தேன்
வஞ்ச நெஞ்சினுற் பஞ்செனப் பறந்தேன்
ஓங்கு கின்றதற் கென்செயக் கடவேன்
உடைய வாவெனை யுவந்துகொண் டருளே. 4

கான மேயுழல் விலங்கினிற் கடையேன்
காம மாதிகள் களைகணிற் பிடித்தேன்
மான மேவிடச் சாதியே மதமே
வாழ்க்கையேயென வாரிக்கொண் டலைந்தேன்
ஈன மேபொரு ளெனக்களித் திருந்தேன்
இரக்க மென்பதோ ரெட்டுணை யறியேன்
ஞான மேவுதற் கென்செயக் கடவேன்
நாய காவெனை நயந்துகொண் டருளே. 5

மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்-மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன், திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான் - செய்தறியேன் மனமடங்கும் திறத்தினிலோரிடத்தே, இருந்தறியேன் அறிந்தோரை எத்திடவும் அறியேன் - எந்தைபிரான் மணிமன்றம் எய்தவறிவேனோ, இருந்ததிசை சொலவறியேன் எங்ஙனநான் புகுவேன் - யார்க்குரைப்பே னென்னசெய்வேன் ஏதுமறிந்திலேனே. 6

தீது நினைகதும் பாவிகட்குஞ் செய்தாய் கருணையெனத்தெளிந்து, வாதுநினைக்கு மனக்கடையேன் மகிழ்வுற் றிருந்தே னென்னளவில், சூது நினைப்பாயெனில் யார்க்குச் சொல்வேன் யாரைத் துணைகொள்வேன், ஏது நினைப்பே னையோநான் பாவி யுடம்பே னெடுத்தேனே. 7

நயந்தா லுனது திருவருளை நண்ணுக்கொடியேனுடம்பை, உயத்தான்வையேன் மடித்திடுவேன்மடித்தாற் பின்ன ருலகத்தே, வயத்தா லெந்த வுடம்புறுமோ என்ன வருமோ வென்கின்ற, பயத்தா லையோ இவ்வுடம்பைச் சுமக்கின் றேனெம் பரஞ்சுடரே. 8

எந்நாள் கருணைத் தனிமுதல்நீ யென்பாலிரங்கி
யருளுதலோ,அந்நா ளெந்நா ளெந்நாளென் றெண்ணி
யெண்ணியலமந்தேன், சென்னாள் கழிலோர் நன்னாளுந்
திருநாளான திலையையோ, முன்னா ளென்னை யாட்
கொண்டாயென்ன நாண முடுகுவதே. 9

எந்த வகைசெய் திடிற்கருணை யெந்தாய் நீதான்
இரங்குவையோ, அந்த வகையை நானறியே னறிவிப்
பாரு மெனக்கில்லை, இந்த வகையிங் கையோநா னிருந்
தாற் பின்ன ரென்செய்கேன், பந்தவகையற் றவ
ருளத்தே நடிக்கு முண்மைம் பரம்பொருளே. 10

சோற்றிலே விருப்பம் சூழ்ந்திடி லொருவன்
துன்னுநற் றவமெலாஞ் சுருங்கி
ஆற்றிலே கரைத்த புளியெனப் போமென்
றறிஞர்க ளுரைத்திடல் சிறிதும்
போற்றிலே னுன்னைப் போற்றிலேன் சுவையிற்
பொருந்திய காரசா ரஞ்சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே யாசை
தங்கினே னென்செய்வே னெந்தாய். 11

கீரையே விரும்பேன் பருப்பொடு கலந்த
கீரையே விரும்பினேன் வெறுந்தண்

ணீரையே விரும்பேன் தெங்கிளங் காயின்
நீரையே விரும்பினே னுணவில்
ஆரையே யெனக்கு நிகரெனப் புகல்வேன்
அய்யகோ.அடிச்சிறு நாயேன்
பேரையே யுரைக்கிற் றவமெலா மோட்டம்
பிடிக்குமே யென்செய்வே னெந்தாய். 12

உண்டியே விழைந்தே னெனினுமென் றன்னை
உடையவா அடியனே னுனையே
அண்டியே யிருந்தே னிருக்கின்றே னிருப்பேன்
அப்பநின் னாணைநின் றனக்கே
தொண்டுரு தவர்கைச் சோற்றினை விரும்பேன்
தூயனே துணைநினை யல்லால்
கண்டிலே னென்னைக் காப்பதுன் கடன்காண்
கைவிடேல் கைவிடே லெந்தாய். 13

தந்தையுந் தாயுங் குருவும்யான் போற்றுஞ்
சாமியும் பூமியும் பொருளுஞ்
சொந்தநல் வாழ்வும் நேயமுந் துணையுஞ்
சுற்றமு முற்றுநீ யென்றே
சிந்தையுற் றிங்கே யிருக்கின்றே னிதுநின்
திருவுளந் தெரிந்ததே யெந்தாய்

நிந்தைசெய் யுலகில் யானுளங் கலங்கல்
நீதியோ நின்னருட் கழகோ. 14

தாயுமென் னொருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரியுந்
தூயநின் பாதந் துணையெனப் பிடித்தேன்
தூக்கமுஞ் சோம்பலுந் துயரும்
மாயையும் வினையும் மறைப்புமா ணவமும்
வளைத்தெனைப் பிடித்திடல் வழக்கோ
நாயினே னினியோர் கணந்தரிப் பறியேன்
நல்லருட் ஜோதிதந் தருளே. 15

சோறு வேண்டினுந் துகிலணி முதலாஞ்
சுகங்கள் வேண்டினுஞ் சுகமலாற் சுகமாம்
வேறு வேண்டினும் நினையடைந் தன்றி
மேவொ ணாதெனும் மேலவ ருரைக்கே
மாறு வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
சாறு வேண்டிய பொழில்வட லரசே
சத்தியச் சபைத் தனிப் பெரும் பதியே. 16

தூய நெஞ்சினே னன்றுநின் கருணைச்
சுகம் விழைந்திலே னெனினும்பொய் யுலக

மாயம் வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
ஈய வாய்த்தநற் றகுணமீ தருள்க
எந்தை நின்மலரிணையடி யல்லால்
தாயமொன்றிலேன் தனிவட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 17

சீரிடம் பெறுமோர் திருச்சிற்றம் பலத்தே
திகழ்தனித் தந்தையே நின்பாற்
சேரிட மறிந்தே சேர்ந்தனன் கருணை
செய்தருள் செய்திடத் தாழ்க்கில்
யாரிடம் புகுவேன் யார்துணை யென்பேன்
யார்க்கெடுத் தென்குறை யிசைப்பேன்
போரிட முடியா தினித்துய ரொடுநான்
பொறுக்கலே னருள்கஇப் போதே. 18

யாரினுங் கடையேன் யாரினுஞ் சிறியேன்
என்பிழை பொறுப்பவர் யாரே
பாரினும் பெரிதாம் பொறுமையோய் நீயே
பாவியேன் பிழைபொறுத் திலையேல்
ஊரினும் புகுத வொண்ணுமோ பாவி
யுடம்பைவைத் துலாவவும் படுமோ

சேரினு மெனைத்தான் சேர்த்திடார் பொதுவாந்
தெய்வத்துக் கடாதவ னென்றே. 19

இப்பாரி லுடலாவி பொருளுமுன்பாற் கொடுத்
தேன்மற் றெனக்கென் றிங்கே, எப்பாலுஞ் சுதந்தர
மோ ரிறையுமிலை அருட்சோதி யியற்கை யென்னுந்,
தப்பாய வுடலாதிதருவாயோ இன்னுமெனைச் சோதிப்
பாயோ, அப்பாநின் றிருவுளத்தை யறியேனிவ் வடி
யேனு லாவதென்னே. 20

பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தாற் பணி
கின்றேன் பதியே நின்னைக், கூட்டுவித்தாற் கூடுகின்
றேன் குழைவித்தாற் குழைகின்றேன் குறித்தவுணை,
ஊட்டுவித்தா லுண்கின்றே னுறக்குவித்தா லுறங்கு
கின்றே னுறங்கா தென்றும், ஆட்டுவித்தாலாடுகின்றேன்
அந்தோவிச் சிறியேனு லாவ தென்னே. 21

இசைத்திடவு நினைத்திடவும் பெரிதரிதாந் தனித்
தலைமை யிறைவா வுன்றன், னசைத்திடுபே ரருட்செய
லா லசைவதன்றி யைந்தொழில்செய் நாத ராலுந்,
தசைத்திடுபுன் றுரும்பினையு மசைக்கரித்துத் தங்கள்
சுதந் தரத்தாலிங்கே, அசைத்திடற்கு முடியாதே
லந்தோவிச் சிறியேனு லாவதென்னே. 22

இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்னுதே

தருணமிஞ் ஞான்றே சுத்தசன் மார்க்கத்
தனிநெறி யுலகெலாஞ் சழைப்பக்
கருணையுஞ் சிவமே பொருளெனக் கருதுங்
கருத்து முற் றெம்மனோர் களிப்பப்
பொருணிறை யோங்கத் தெருணிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க
அருணயந் தருள்வாய் திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 23

கரைசேரப் புரிந்தாலுங் கடையேன்செய் குற்ற
மெலாங் கருதி மாயைத், திரைசேரப் புரிந்தாலுந் திரு
வுளமே துணையெனநான் சிந்தித் திங்கே, உரைசேர
இருத்தலன்றி யுடையாயென் னுறவேயென் னுயிரே
யென்றன், அரைசேயென் னம்மேயென் னப்பா இச்
சிறியேனு'லாவ தென்னே. 24

கரணமெலாங் கரைந்ததனிக் கரைகாண்ப துளதோ
கரைகண்ட பொழுதெனையுங் கண்டுதெளி வேனோ
அரணமெலாங் கடந்ததிரு வருள்வெளிநேர் படுமோ
அவ்வெளிக்கு ளானந்த அநுபவந்தா னுறுமோ
மரணமெலாந் தவிர்ந்துசிவ மயமாகி நிறைதல்
வாய்த்திடுமோ மூலமல வாதனையும் போமோ

கற்பழிந்தவளைக் கலந்திருக்காதே

சரணமெலாந் தாமன்றிற் றிருநடஞ்செய் பெருமான்
  தனதுதிரு வுளமெதுவோ சற்றுமறிந் திலனே. 25

களக்கமறப் பொதுநடநான் கண்டுகொண்ட தருணம்
  கடைச்சிறியேனுளம்பூத்துக்காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பியு திர்ந்திடுமோ
  வெம்பாது பழுக்கினுமென் கரத்திலகப் படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ
  குரங்குகவ ராதெனது குறிப்பிலகப் படினுந்
துளக்கமறவுண்ணுவனோதொண்டைவிக்கிக்கொளுமோ
  சோதிதிரு வுளமெதுவோ ஏதுமறிந் திலனே. 26

தாய்கொண்ட திருப்பொதுவி லெங்கள்குரு நாதன்
  சந்நிதிபோய் வரவிடுத்த தனிக்கரணப் பூவை
காய்கொண்டு வந்திடுமோ பழங்கொண்டு வருமோ
  கனிந்தபழங் கொண்டுவருங் காலதனை மதமாம்
பேய்கொண்டுபோய்விடுமோபிலத்திடைவீழ்ந்திடுமோ
  பின்படுமோ முன்படுமோ பிணங்கியொளித்திடுமோ
வாய்கொண்டு வென்றிடுமோ தோற்றிடுமோ வென்னை
  மறந்திடுமோ திருவுளத்தின் வண்ணமறிந் திலனே. 27

ஞானமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டிடவே
  நடக்கின்றே னந்தோமுன் னடந்தவழி யறியேன்

வேலையிட்டுக் கூலி குறைக்காதே

ஊனமிகு மாணவமாம் பாவியெதிர்ப் படுமோ
  உடைமையெலாம்பறித்திடுமோநடைமெலிந்துபோ
மோ, ஈனமுறு மகங்காரப் புலிகுறுக்கே வருமோ
  இச்சையெனுமிராக்கதப்பேயென்னைப்பிடித்துக்கொளு
மோ, ஆனமலத் தடைநீக்க அருட்டுணை தா னுறுமோ
  ஐயர்திரு வுளமெதுவோ யாதுமறிந் திலனே. 26

அடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தால் தாயுட னணைப்பள் தாயடித்தாற், பிடித்தொரு தந்தை யணைப்பனிங் கெனக்குப் பேசியதந்தையுந் தாயும், பொடித்திரு மேனி அம்பலத்தாடும் புனிதநீ ஆதலால் என்னை, அடித்தது போது மணைத்திடல் வேண்டும் 1
அம்மையப்பா வினி யாற்றேன்.

பெற்றநம் பிள்ளைக் குணங்களையெல்லாம் பெற்றவ ரறிவரே யல்லால், மற்றவ ரறியா ரென்றனை யீன்ற வள்ளலே மன்றிலே நடிக்குங், கொற்றவ வோரெண் குணத்தவ நீதான்குறிக்கொண்ட கொடியனேன் குணங் கள், முற்றுநன் கறிவா யறிந்துமென் றனைநீ முனிவ 2
தென் முனிவுதீர்ந் தருளே.

சற்சபைக் குறியார் தம்மொடுங் கூடித் தனித்த போன்புமெய் யறிவும், நற்சபைக் குறிய ஒழுக்கமு மழியா நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே, சிற்சபை நட

மும் பொற்சபை நடமுந்தினந்தொறும் பாடிநின்றாடித் தெற்சபை யுலகத் துயிர்க்கெலா மின்பஞ்செய்வதென் இச்சையா மெந்தாய். 3

உருமலி யுலகி லுன்னைநான் கலந்தே யூழிதோ றூழியும் பிரியா, தொருமையுற் றழியாப்பெருமைபெற் றடியேன் உன்னையே பாடிநின் றாடி, இருநிலத் தோங்கிக் களிக்கவும் பிறருக் கிடுக்கணுற் றலவைதவிர்த்தே திருமணிப்பொதுவி லன்புடை யவராய்ச் செய்யவுமிச் சைகாணெந்தாய். 4

எவ்வுயிர்த் திரளு மென்னுயிரெனவே யெண்ணி நல் லின்புறச் செயவும், அவ்வுயிர் களுக்கு வருமிடை யூற்றை யகற்றியே யச்சநீக் கிடவுஞ், செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச் சிவசிவ வென்றுகூத் தாடி, ஒவ்வுறு களிப்பா லறிவுரு விங்கே யோங்கவு மிச்சைகா ணெந்தாய். 5

தங்கமே யனையார்கூடிய ஞான சமரசசுத்தசன் மார்க்கச் சங்கமே கண்டு களிக்கவுஞ் சங்கஞ் சார் திருக்கோயில் கண்டிடவுந், தங்கமே பெறுஞ்சற்சங்கம் நீடூழி துலங்கவுஞ் சங்கத்தி லடியேன், அங்கமே குளிர நின்றனைப் பாடியாடவு மிச்சைகா ணெந்தாய். 6

கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த கடுந்துயரச்சமாதிகளைத், தருணநின் னருளாற் றவிர்த் தவர்கநின் பந்தாவும்வன் புலைகொலை யிரண்டும், ஒருவிய நெறியி லுலகெலா நடக்கவுஞ்சுற்றவுப் அம்பலந் தனிலே, மருவிய டகனை வழுத்தவும் நின்னை வாழ்த்தவு முச்சைகா ணெந்தாய். 7

மண்ணுல கதிலே யுயிர்கள்தாம் வருந்தும் வருத்தந்தை யொருசிறி தெனினுங் கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும் கணமுநான் சகித்திடமாட்டேன் எண்ணுறு மெனக்கே நின்னருள் வலத்தா லிசைத்தபோ திசைத்தபோ தெல்லாம், நண்ணுமவ் வருத்தந் தவிர்க்கநல் வரந்தான் நல்குதலெனக்கிச்சையெந்தாய்.

புன்புலா லுடம்பி னசுத்தமு மிதனிற் புகுந்துநா னிருக்கின்ற புணர்ப்பும், என்பொலா மணியே யெண்ணிநா னெண்ணி யேங்கிய வேக்கமநீ யறிவாய், வன் புலாலுண்ணு மனிதரைக் கண்டுமயங்கி யுள்நடுங்கி யாற்றாமல், என்பெலாங்கருக இளைத்தனன் அந்த இளைப்பையு மையநீ யறிவாய். 9

பொருளிலே யுலகமிருப்ப தாதலினால் புரிந்துநா னொருவர்பாற் பலகால், மருவினாற் பொருளி னிச்சையாற் பலகால் மருவுகின் றனனெனக் கருதி, வெருவுவ ரெனநா னஞ்சியெவ் விடத்து மேவிலே னெந்தைநீ

யறிவாய், ஒருவுமப் பொருளை நினைத்தபோ தெல்லா
முவட்டினே னிதுவுநீ யறிவாய். 10

கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டி
யே நடந்தேன், மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகி
லால் மெய்யெலா மையகோ மறைத்தேன், வையமேற்
பிறர்தங் கோலமு நடையும் வண்ணமு மண்ணலே
சிறிதும், பையநா னூன்றிப் பார்த்ததே யில்லை
பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன். 11

தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தாற் சிறு
குறு மென்றுளம் பயந்தே, நாட்டிலே சிறிய வூர்ப்புறங்
களிலே நண்ணினே னூர்ப்புற மடுத்த, காட்டிலே
பருக்கைக் கல்லிலே புன்செய்க் களத்திலே திரிந்துற்ற
இளைப்பை, ஏட்டிலே யெழுத முடியுமோ இவைக
ளெந்தைநீ யறிந்தது தானே. 12

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடி
னேன் பசியினா லிளைத்தே, வீடுதோ றிரந்தும் பசியறா
தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன், நீடிய
பிணியால் வருந்துகின் றோரென் னேருறக் கண்டுளந்
துடித்தேன், ஈடின்மா னிகளா யேழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன். 13

நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டி
லே பலபெயர் நாட்டிப், பலிதர ஆடு பன்றிதக் குடங

கள் பலிக்கடா முதலிய வுயிரைப், பொலிவுறக்
கொண்டே போகவுங் கண்டே புந்திநொந் துளநடுக்
குற்றேன், கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன். 14

துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன், கண்ணினா
லையோ பிறவுயிர் பதைக்கக் கண்டகா லத்திலும்
பதைத்தேன், மண்ணினில் வலையுந் தூண்டிலுங்
கண்ணி வகைகளுங் கண்டபோதெல்லாம், எண்ணி
யென் னுள்ளம் நடுங்கிய நடுக்க மெந்தைநின் திருவு
ளறியும். 15

காட்டிய மணைமே லிருக்கவும் பயந்தேன் காலின்
மேற் கால்வைக்கப் பயந்தேன், பாட்டயல்கேட்கப்
பாடவும் பயந்தேன் பஞ்சணை படுக்கவும் பயந்தேன்,
நாட்டிய வுயர்ந்த திண்ணைமேலிருந்து நன்குறக் களித்
துக்கால் கீழே, நீட்டவும் பயந்தே னீட்டிப் பேசுதலை
நினைக்கவும் பயந்தன னெந்தாய். 16

கருணையுஞ் சிவமே பொருளெனக் காணுங்காட்
சியும் பெறுகமற் றெல்லாம், மருணெறியெனநீயெனக்
கறிவித்த வண்ணமே பெற்றிருக்கின்றேன், இரு
ணெறி மாயை வினைகளாற் கலக்க மெய்தியதென்

செய்வே னெந்தாய், தெருணிலை யின்றிக் கலங்கினே
னெனினுஞ் சிறநெறி பிடித்ததொன் றிலையே. 17

வருமுயி ரிரக்கம் பற்றியே யுலக வழக்கிலென்
மனஞ்சென்ற தோறும், வெருவினின் னடிக்கே விண்
ணப்பித் திருந்தேன் விண்ணப்பஞ் செய்கின்றேனின்
றும், உருவவென் னுயிர்தா னுயிரிரக் கந்தா னென்
றதே யிரண்டிலை இரக்கம், ஒருவிலேன் னுயிரு
மொருவும் என்னுள்ளத்தொருவனே நின்பதத்தானே.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நானன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல்வேண்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும் [டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே. 19

அருளாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையுஞ் சினங்காமம் அடையாமை வேண்
மருளாய வுலகமெலா மருணீங்கி ஞான [டும்
மன்றிடத்தே வள்ளலுனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமை யுறல்வேண்டும் எனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டு மெவ்வுயிரு மின்படைதல் வேண்டும்

பொருளாமோர் திருவடிவி லுடையாயும் நானும் [னே.
புணர்ந்து கலந்தொன்றாகிப்பொருந்துகல் வேண்டுவ

அந்நாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோதியைப் பெற்றே அகங்களித்தல்
வேண்டும், செத்தாரை மீட்டுமிங்கே எழுப்பியிடல்
வேண்டும், திருச்சபைக்கே அடிமைகளாச் செய்வித்
தல் வேண்டும், ஒந்நாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும்
எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்
டும், எத்தாலும் அழியாத வடிவதிலே நானும் எந்தாயும்
ஒன்றாகி இனிதுறல் வேண்டுவனே. 21

திருவுடையாய் சிற்சபைவாழ் சிவபதியே யெல்லாஞ்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தசிகாமணியே
உருவுடையென்னுயிர்க் குயிராய் ஒளிர்கின்ற ஒளியே
உன்னுதொறும் என்னுளத்தே யூறுகின்ற அமுதே
அருவுடைய பெருவெளியாய் அதுவிளங்கு வெளியாய்
அப்பாலுமாய் நிறைந்த அருட்பெருஞ்ஜோதியனே
மருவுடையாள் சிவகாம வல்லிமண வாளா
வந்தருள்க அருட்ஜோதி தந்தருள்க விரைந்தே. 1

பாவிமனக்குரங்காட்டம் பார்க்க முடியாதே பதிவெறுத்
தேன் நிதிவெறுத்தேன் பற்றனைத்துந் தவிர்த்தேன்
ஆவியுடல் பொருளையுன்பாற் கொடுத்தேன் உன்னருட்
பேர், ஆசைமய மாகியுனை யடுத்தூமுயல் கின்றேன்

கூவியென்னை யாட்கொளநீ நினையாயோ நினது
குறிப்பறியேன் பற்பலகால் கூவியிளைக்கின்றேன்
தேவிசிவ காமவல்லி மகிழுமண வாளா
தெருணிறைவான முதளிக்குந் தருணமிது தானே. 2

காட்டை யெலாங் கடந்துவிட்டே னாட்டை
யடைந்தனது - கடிநகர்ப்பொன் மதிற்காட்சி கண்
குளிரக் கண்டேன், கோட்டையெலாங் கொடிநாட்டிக்
கோலமிடப் பார்த்தேன் - கோயிலின்மேல் வாயிலிலே
குறைகளெல்லாந் தவிர்ந்தேன், சேட்டையற்றுக் கருவி
யெலா மென்வசநின்றிடவே - சித்தியெலாம் பெற்றே
னென் திருச்சிற்றம்பலமேல், பாட்டையெலாம் பாடுகின்
றேன் இதுதருணம் பதியே - பலந்தருமென் னுளந்
தனிலே கலந்து நிறைந்தருளே. 3

வட்டவான் சுடரே வளரொளிவிளக்கே வயங்கு
சித் ஜோதியே யடியேன், இட்டமே யிட்டத்து இயைந்
துளே கலந்த இன்பமே யென்பெரும் பொருளே, கட்
டமே தவிர்த்திங் கென்னைவாழ் வித்த கடவுளே னக
மன் றகத்தே, நட்டமே புரியும் பேரரு ளரசே நம்பி
னேன் கைவிடே லெனையே. 4

புண்படா வுடம்பும் புரைபடா மனமும் பொய்
படா வொழுக்கமும் பொருந்திக், கண்படா திரவும்
பகலுநின் றனையே கருத்தில்வைத் தேத்துதற் கிசைந்

தேன், உண்பனே யெனினும் உடுப்பனே யெனினும்
உலகரை நம்பிலே னெனது, நண்பனே நலஞ்சார் பண்
பனே யுனையே நம்பினேன் கைவிடே லெனையே. 5

கோலைபல புரிந்தே டலைநுகர்ந் திருந்தேன் கோ
டுறு குரங்கினிற் குதித்தே, அலைதரு மனத்தே னறி
விலே னெல்லாம் அறிந்தவன் போற்பிறர்க் குரைத்
தேன், மலைவுறு சமய வலையகப் பட்டே மயங்கிய
மதியினேன் நல்லோர், நலையல வெனவே திரிந்தன்
எனினும் நம்பினேன் கைவிடே லெனையே. 6

தொடுக்கவோநல்ல சொன்மலரில்லை நான்துதிக்
கவோபத்தி சுத்தமுமில்லையுள், ஒடுக்கவோமன மென்
வசமில்லையூழ் உற்ற ஆணவ மாதிமலங்களைத், தடுக்க
வோதிட மில்லையென் மட்டிலே தயவுதானினக் கில்லை
உயிரையும், விடுக்கவோமன மில்லையென்செய்வேன்
விளங்குமன்றில் விளங்கிய வள்ளலே. 7

அப்பாநான் பற்பலகா லறைவதென்னே யடி
யேன் அச்சமெலாந் துன்பமெலா மறத்துவிரைந்து
வந்தே, இப்பாரி விதுதருண மென்னையடைந் தருளி -
எண்ணமெலா முடித்தென்னை யேன்று கொளா
யெனிலோ, தப்பாம லுயிர்விடுவேன் சத்தியஞ் சத்தியம்
நின் - தாளிணைக ளறிகவிது தயவுடையோ யெவர்க்குந்,

துப்பாகித் துணையாகித் துலங்கியமெய்த் துணையே -
சுத்த சிவானந்த அருட் ஜோதிநடத் தரசே. 8

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே -
பட்டதெலாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப் பொழு
தென், உடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்
டுன்-உடலுயிரா தியவெல்லாம் உவந்தெனக்கே யளிப்
பாய், வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாயென் கண்
ணுண்-மணியேயென் குருமணியே மாணிக்கமணியே,
நடனசிகா மணியேயென் நவமணியே ஞான-நன்
மணியே பொன்மணியே நடராஜ மணியே. 9

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட-மர
பினில்யா னொருவனன்றோ வகையறியே னிந்த,
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ - இது
தகுமோ இதுமுறையோ இதுதருமந்தானோ, மாழை
மணிப் பொதுநடஞ்செய் வள்ளால் யானுனக்கு மக
னலனோ நீயெனக்குவாய்த்த தந்தையலையோ, கோழை
யுல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன் கொடுத்
தருள்நின்னருளொளியைக்கொடுத்தருளிப்பொழுதே.10

உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்
தால்-உயிர்விடுவேன் கணந்தரியேன் உன்னாணை யிதுநீ,
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவா யெனில்யான்-
என்னசெய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பேன்

எந்தாய், அன்னையினுந் தயவுடையாய் நீமறந்தா
யெனினும்-அகிலமெலா மளித்திடும்நின் னருள்மறவா
தென்றே, இன்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன்
மறவேல்-இதுதருணம் அருட்ஜோதி யெனக்குவிரைந் 11
தருளே.

நான்மறந்தே னெனினும் எனைத்தான்மறவா
னெனது-நாயகனென் றுடுகின்றேன் எனினும் இது
வரையும், வான்மறந்தேன் வானவரை மறந்தேன் என்
மாலயனை - மறந்தேனம் உருத்திரரை மறந்தேன் என்
னுடைய, ஊன்மறந்தேன் உயிர்மறந்தேன் உணர்ச்சி
யெலாம்மறந்தேன் - உலகமெலாம் மறந்தேனிங்குன்னை
மறந்தறியேன், பால்மறந்த குழவியைப்போல் பாரே
லிங்கெனையே - பரிந்துநின தருட்ஜோதி புரிந்து 12
மகிழ்ந்தருளே.

பெட்டியிறி லுலவாத பெரும்பொருளுண்டுஇது நீ
பெறுகவென அதுதிறக்கும் பெருந்திறவு கோலும், எட்
டிரண்டுந் தெரியாதேன் என்கையிலே கொடுத்தீர்-இது
தருணந் திறந்ததனை யெடுக்க முயல்கின்றேன், அட்டி
செய நினையாதீர் அரைக்கணமுந் தரியேன்-அரைக்
கணத்துக் காயிரமா யிரங்கோடியாக வட்டியிட்டு நம்
மிடத்தே வாங்குவனும் மாணை-மணிமன்றில் நடம்புரி 13
வீர் வந்தருள்வீர் விரைந்தே.

பரிகலந்தே திருவமுதம் படைத்தணவே பணித்தீர்-பணித்தபின்னே என்னுடைய பக்குவம் பார்க்கின்றீர், இருநிலத்தே பசித்தவர்க்குப் பசிநீக்க வல்லார்-இவர்சிறியர் . இவர்பெரியர் என்னல் வழக்கலவே, உரிமையுற்றேன் உமக்கேயென் னுள்ளமன்றே யறிந்தீர்-உடல்பொருளா விகளையெலாம் உம்மதெனக் கொண்டீர், திரிவகத்தேநான் வருந்தப் பார்த்திருத்தலழகோ சிவகாம வல்லிமகிழ் திருநடநாயகரே. 14

இருளான மலமறுத் திகபரங் கண்டே
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ
மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப்போக
தெருளான சுத்தசன்மார்க்கம தொன்றே
சிறந்து விளககவோர் சிற்சபை காட்டும்
அருளான வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர்நீரே.

இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயி லெருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெல்லாங்குழிக் கொட்டிமண்மூடிப்போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநன் னீதி
சிறந்து விளங்கவோர் சிற்சபை காட்டும்

அருட்ஜோதி வீதியி லாடச் செய்தீரே
அருட்பெருஞ்ஜோதியென் னுண்டவர் நீரே. 16

தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கமொன் றில்லார்
மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழிந் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந்தீரே.

படமாட்டேன் துயர்சிறிதும் படமாட்டே னினிநான்
பயப்படவுமாட்டே னுன்பதத்துணையே பிடித்தேன்
விடமாட்டே னெமாந்து விடமாட்டேன் கண்டீர்
மெய்ம்மையிது நும்மாணைவிளம்பினனும் அடியேன்
கெடமாட்டேன்பிறர்மொழிகள் கேட்டிடவுமாட்டேன்
கிளரொளியம்பலத்தாடல் வளரொளிநும்மல்லால்
நடமாட்டே னென்னுளத்தே நான்சாகமாட்டேன்
நல்லதிரு வருளாலே நான்றுணை னேனே. 18

அருள் விளக்க மாலை

அருள்விளக்கே யருட்சுடரே யருட்ஜோதிச் சிவமே
அருளமுதேயருணிறைவே யருள்வடிவப்பொருளே
இருள்கடிந்தென்னுளமுழுதும் இடங்கொண்டபதியே
என்னறிவே யென்னுயிரே யெனக்கினிய வுறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா வெனக்கே
தெருளளித்த திருவாளா ஞானவுரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழியேற் றருளே.

கோடையிலேயிளைப்பாற்றிக்கொள்ளும்வகைகிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்த மண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற வரசேயென் அலங்கலணிந் தருளே. 2

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்
தனிப்பாலுஞ்சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி

இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி
எடுத்தசுவைக்கட்டியினு மினித்திடுந் தெள்ளமுதே
அனித்தமறத்திருப்பொதுவில் விளங்குநடத்தரசே
அடிமலர்க்கென்சொல்லணியாம்அலங்கலணிந்தருளே

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துஉள் உணர்ந்தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலுங் கட்டியணைத் தாலும்
இத்தனைக்குந் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே
மெய்ம்மையறி வானந்தம் விளக்குமரு ளமுதே
தீர்த்தாவென்றன்பரெலாந்தொழப்பொதுவில்நடிக்கும்
தெய்வநடத் தரசேயென் சிறுமொழியேற்றருளே. 4

கல்லார்க்கும் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங்கண்டவர்க்கும்கண்ணளிக்குங்கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலும் இசையுமணிந் தருளே. 5

கொலைபுரிவார் தவிரமற்றை யெல்லாரும் நினது
குலத்தாரே நீயெனது குலத்துமுதன் மகனே

மலைவறவே சுத்தசிவ சமரசசன் மார்க்கம்
வளரவளர்ந்திருக்கவென வாழ்த்திய வென்குருவே
நிலைவிழைவார் தமைக்காக்கு நித்தியனேயெல்லா
நிலையும்விளங் குறவருளில் நிறுத்திய சிற்குணனே
புலையறியாப் பெருந்தவர்கள் போற்றமணிப் பொதுவில்
புனிதநடத் தரசேயென் புகலுமணிந் தருளே. 6

உயிர்க்கொலையும் புலைப்புசிப்பு முடையவர்க ளெல்லாம்
உறவினத்தாரல்லரவர் புறவினத்தாரவர்க்குப்
பயிர்ப்புறமோர் பசிதவிர்த்தன் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப்பண்புரையேல் நண்புதவேலிங்கே
நயப்புறுசன் மார்க்கம் அவ ரடையளவு மிதுதான்
நம்மாணை யென்றெனக்கு நவின்றஅரு ளிறையே
மயர்ப்பறுமெய்த்தவர்போற்றப் பொதுவில்நடம்புரியும்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந்தருளே. 7

கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வா ரெனினுங்
குறித்திடுமோ ராபத்தில் வருந்துகின்ற போது
படியிலதைப் பார்த்துகவேல் அவர்வருத்தந் துன்பம்
பயந்தீர்த்து விடுகவெனப் பரிந்துரைத்த குருவே
நெடியவரே நான்முகரே நித்தியரே பிறரே
நின்மலரே யென்கின்றோ ரெல்லாருங் காண
அடியுமுயர் முடியுமெனக் களித்தபெரும்பொருளே
அம்பலத்தென் னரசேயென் அலங்கலணிந்தருளே. 8

கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல்சமயக்
கூட்டமும் அக்கூட்டத்தே கூவுகின்ற கலையுங்
கள்ளமுறு மக்கலைகள் காட்டியபல் கதியுங்
காட்சிகளுங் காட்சிதரு கடவுளரு மெல்லாம்
பிள்ளைவிளை யாட்டெனநன் கறிவித்திங் கெனையே
பிள்ளையெனக் கொண்டுபிள்ளைப் பெயரிட்டபதியே
தள்ளரிய மெய்யடியார் போற்றமணி மன்றில்
தனிநடஞ்செய் யரசேயென் சாற்றுமணிந் தருளே.

காலையிலேயென்றனக்கேகிடைத்தபெரும்பொருளே
களிப்பேயென் கருத்தகத்தே கனிந்தநறுங் கனியே
மேலையிலே யிம்மையிலே வொருமையிலே தவத்தால்
மேவுகின்ற பெரும்பயனும் விளைவையெலாந்தருமச்,
சாலையிலே யொருபகலிற் றந்ததனிப் பதியே
சமரசசன் மார்க்கசங்கத் தலையமர்ந்த நிதியே
மாலையிலே சிறந்தமொழி மாலையணிந் தாடும்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே. 10

பரசிவ நிலை

அருட்ஜோதித்தெய்வமெனை யாண்டுகொண்டதெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற வானந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்

இருட்பாடு நீக்கியொளி யீந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணியவா றெனக்கருளுந்தெய்வம்
தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம் 1

எல்லாஞ்செய் வல்லதெய்வம் எங்குநிறை தெய்வம்
என்னுயிரிற் கலந்தெனக்கே யின்பநல்குந் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையி லாடுகின்ற நடராஜத் தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வம்
காரணமாந் தெய்வமருட் பூரணமாந் தெய்வம்
செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 12

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்து கின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசைவைத்தபெருந் தெய்வம்
காயாது கனியாகிக் கலந்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வமுற்றுங்காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக வெனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 3

தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்
துரியதெய்வ மரியதெய்வம் பெரியபெருந்தெய்வம்

மாண்டாரை யெழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மாணிக்க வல்லியையோர் வலத்தில்வைத்ததெய்வம்
ஆண்டாரை யாண்டதெய்வம் அருட்ஜோதித்தெய்வம்
ஆகமவே தாதியெலா மறிவரிதாந் தெய்வம்
தீண்டாத வெளியில்வளர் தீண்டாத தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 4

பதியேயெம் பரனேயெம் பாம்பரனே யெமது
பராபரனே யானந்தப் பதந்தரு மெய்ஞ் ஞான
நிதியேமெய்ந் நிறைவேமெய்ந் நிலையேமெய் யின்ப
நிருத்தமிடுந் தனித்தலைமை நிபுணமணி விளக்கே
கதியேயென் கண்ணேயென் கண்மணியே யெனது
கருத்தேயென் கருத்திலுற்ற கனிவேசெங் கனியே
துதியேயென் துரையேயென் தோழாவென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 1

படிப்படக்கிக் கேள்வியெலாம் பற்றறவிட் டடக்கிப்
பார்த்திடலு மடக்கியுறும் பரிசமெலா மடக்கித்
தடிப்புறுமூண் சுவையடக்கிக் கந்தமெலா மடக்கிச்
சாதிமதஞ் சமயமெனுஞ் சழக்கையும் விட் டடக்கி
மடிப்படக்கி நின்றாலும் நில்லேனா னெனவே
வனக்குரங்கும் வியப்பவென்றன் மனக்குரங்குகுதித்த
துடிப்படக்கி யாட்கொண்ட துரையேயென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்த சிகாமணியே

பணிந்தறியே னன்புடனே பாடுதலு மறியேன்
படித்தறியேன் கேட்டறியேன் பத்தியிற்பூ மாலை
அணிந்தறியேன் மனமுருகக் கண்களில்நீர் பெருக
அழுதறியேன் தொழுதறியேன் அகங்காரஞ்சிறிதுந்
தணிந்தறியேன் தயவறியேன் சத்தியவா சகமுந்
தானறியே னுழுந்தடித்த தடியதுபோ லிருந்தேன்
துணிந்தெனக்குங் கருணைசெய்த துரையே யென்னு
ளத்தே சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 3

அன்புடைய வென்னறிவே யருளுடைய பொருளே
அம்மேயென் னப்பாவென் னையா வென் னரசே
துன்புடைய வுலகரெலாஞ் சுகமுடைய ராகத்
துன்மார்க்கந் தவிர்த்தருளிச் சன்மார்க்கம் வழங்க
இன்புடைய பேருளிங் கெனைப்பொருள்செய் தளித்த
என்னமுதேயென்னுறவே யெனக்கினிய துணையே
என்புடைநீ யிருக்கின்று யுன்புடைநான் மகிழ்ந்தே
இருக்கின்றேனிவ்வொருமை யார்பெறுவாரீண்டே. 4

கண்ணே கண்மணியே—கருத்—தேகருத் தின் கனிவே, விண்ணே விண்ணிறைவே—சிவ—மேதனி மெய்ப் பொருளே, தண்ணே ரொண்மதியே—யெனைத்—தந்த தயாநிதியே, உண்ணே ருள்ளொளியே யெனக்—குண்மை யுரைத்தருளே. 1

நன்று லுங்கடந்தே—யொளிர்—ஞான சபாபதியே, பொன்னா ருஞ்சபையாய்—அருட்—பூரண புண்ணியனே, என்னா லாவதொன்றும்—உனக்—கில்லையெனினு மெந்தாய், உன்னால் வாழுகின்றேன்—எனக்குண்மை யுரைத்தருளே. 2

கருவிற் கலந்த துணையேயென் கனிவிற்கலந்த வமுதேயென்-கண்ணிற் கலந்த வொளியேயென்கருத்திற் கலந்தகளிப்பேயென், உருவிற்கலந்த வழகேயென் உயிரிற் கலந்த உறவே யென் உணர்விற் கலந்த சுகமே யென்னுடைய வொருமைப் பெருமானே, தெருவிற் கலந்து விளையாடுஞ் சிறியேன் றனக்கே மெய்ஞ்ஞான-சித்தி யளித்த பெருங்கருணைத் தேவே யுலகத்திரளெல்லாம், மருவிக் கலந்து வாழ்வதற்கு வாய்த்த தருண மிது வென்றே வாயே பறையா யறைகின்றே னெந்தாய் கருணை [illegible]தாலே. 1

ஓயா துண்டு படுத்துறங்கி யுணர்ந்து விழித்துக் கதைபேசி-உடம்பு நோவா துளமடக்கா தோகோ நோன்பு கும்பிட்டே, சாவாவரமுஞ் சித்தியெலாந் தழைத்த நிலையுஞ் சன்மார்க்க சங்கமதிப்பும் பெற்றே னென் சதுர்தான் பெரிதென் சரித்திரத்தை, ஆவா நினைக்கி லதிசயமென் அப்பா வரசே யமுதேயென் ஆவிக்கினிய துணையேயென் அன்பே யறிவே யருட்

ஜோதித், தேவா இதுநின் செயலேயிச் செயலை நினைக்குந்தோறு மெனது சிந்தை கனிந்து கனிந்துருகித் தெள்ளாரமுத மானதுவே. 2

எம்மத நிலையும் நின்னருள் நிலையி லிலங்குத லறிந்தன னெல்லாஞ் **சம்மத மாக்கிக்** கொள்கின்றே னல்லாற் றனித்துவே றெண்ணியதுண்டோ, செம்மலுன் பாதமறியா னறியேன் சிறிதுமிங் கினித்துய ராற்றேன், இம்மதிக் கடியேன் குறித்தவா றுள்ள தியற்றுவதுன் கடனெந்தாய். 3

கற்பூரங் கொணர்ந்திடுக தனித்தோழி எனது
கணவர்வரு தருணமிது கண்ணேறு கழிப்பாம்
எற்பூத நிலையவர்தந் திருவடித்தா மரைக்கீழ்
இருப்பதடிக் கீழிருப்ப தென்றுநினை யேல்காண்
பற்பூத நிலைகடந்து நாதநிலைக் கப்பால்
பரநாத நிலையதன்மேல் விளங்குகின்ற தறிநீ
இற்பூவை யவ்வடிக்குக் கண்ணேறு கழித்தால்
எவ்வுலகத் தெவ்வுயிர்க்கு மினிதுநலந் தருமே.

பனம்பழமே யெனினுமிந்தப் பசிதவிர்த்தாற்போதும்
பாருமெனப் பகர்கின்ற பாவையர்போற் பகராள்
இனம்பழமோ கங்கலந்தாள் சிவானுபவத் தல்லால்
எந்தவனு பவங்களிலு மிச்சையில் லாளவர்தம்

மனம்பழமோ காயோவென் றறிந்துவர விடுத்தாள்
மற்றவர்போற்காசுபணத்தாசைவைத்து வருந்தாள்
தனம்பழமோ தேவர்திரு வாய்மலர வேண்டுஞ்
சபையில்நடம் புரிகின்ற தனிப்பெரிய துரையே. 1
புல்லவரே பொய்யுலக போகமுற விழைவார்
புண்ணியரே சிவபோகம் பொருந்துதற்கு விழைவார்
கல்லவரே மணியிவரே யென்றறிந்தா ளதனாற்
கனவிடையும் பொய்புறவு கருதுகிலாள் சிறிதும்
நல்லவரே யெனினுமுறை நாடாரே லவரை
நன்குமதியாளிவளை நண்ணவெண்ண முளதோ
வல்லவரே நுமது திரு வாய்மலர வேண்டும்
வயங்குதிரு மணிமன்றில் வாழ்பெரிய துரையே. 2
கள்ளுண்டா ளெனப்புகன்றீர் கனகசபை நடுவே
கண்டதலா லுண்டதிலை யென்றவத னாலோ
எள்ளுண்ட மற்றவர்போ லென்னைநினை யாதீர்
என்றுரைத் தேனிதனாலோ வேதனாலோ வறியேன்
உள்ளுண்டமகிழ்ச்சியெலா முவட்டி[illegible]ங்கி
உவந்துவளர்த்தவளுமென்பாற்சிவந்த கண்ணளானாள்
துள்ளுண்டு பெண்களெலாஞ் சூழ்ந்துநொடிக் கின்றார்
சுத்தர்நட ராயர்திருச் சித்தமறிந் திலனே. 3

பொதுநடஞ்செய் துரைமுகத்தே தளதளவென் றொளிரும்-புன்னகையே யொருகோடிப் பொன்பெறு

மென்றுரைப்பார், இதுவரையோ பலகோடி யென்னி
னுமோ ரளவோ-எண்ணிறந்த அண்டவகை எத்தனை
கோடிகளுஞ், சதுமறைசொல் அண்டவகை தனித்
தனியே நடத்துஞ் சித்தர்களுஞ் சத்திகளுஞ் சிறிது
பெறுகுவரோ, திதிபெறுமத் திருவாளர் புன்னகையை
நினைக்குந் -தோறுமனமூறுகின்றசுகவமுதம்பெறுமே. 4

கள்ளுண்டா ளெனப்புகன்றார் கனகசபை நடுவே
கண்டதுண்டு சிற்சபையிலுண்டதுமுண்டடிநான்
எள்ளுண்ட பலவிடயத் திறக்குங்கள் ளன்றே
என்றுமிற வாநிலையி லிருத்துங்கள் உலகர்
உள்ளுண்ட போதமயக் குற்றிடுங்கள் ளலவே
உள்ளமயக்கனைத்தினையுமொழித்திடுங்கள் மடவாய்
அள்ளுண்ட பிறருமெனை யடுத்தடுத்துக் கண்டால்
அறிவுதரு மவர்க்குமிங்கே யானுண்ட கள்ளே. 5

திரு வண்ணப் பதிகம்

எண்ணுறு விருப்பாதி வல்விலங் கினமெல்லாம்
இடைவிடா துழல வொளியோர்
எள்ளளவு மின்றியஞ் ஞானஇருள் மூடிட
இருண்டுயிர் மருண்டு மாழ்க

நண்ணுமன மாயையாங் காட்டைக்கடந்துநின்
ஞானஅருள் நாட்டை யடையும்
நாள் எந்த நாள்அந்த நாளிந்த நாளென்று
நாயினேற் கருள்செய் கண்டாய்
விண்ணுறு சுடர்க்கெலாஞ் சுடரளித் தொருபெரு
வெளிக்குள் வளர் கின்றசுடரே
வித்தொன்று மின்றியே விளைவெலாந் தருகின்ற
விஞ்ஞான மழைசெய் முகிலே
கண்ணுறு நுதற்பெருங் கடவுளே மன்றினிற்
கருணை நடமிடு தெய்வமே
சனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 1

எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி யெய்துகினும்
எய்துக பிறப்பி லினிநான்
எய்தாமை யெய்துகினு மெய்திடுக இருமையினும்
இன்ப மெய்தினு மெய்துக
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும் வருக
வறுமைவருகினும்வருக மதிவரினும் வருக அவ
மதிவரினும் வருக உயர்வோடு
இழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருக அல
தெது போகினும் போகநின்

இணையடிகள் மறவாத மனமொன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டு மரசே
கழிவகைப் பவரோக நீக்குநல் அருளெனுங்
கதிமருந் துதவு நிதியே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 2

பற்றுவது பந்தமப் பற்றறுதல் வீடிஃது
பரம வேதார்த்த மெனவே
பண்புளோர் நண்பினொடு பகருவது கேட்டுமென்
பாவிமனம் விடய நடையே
எற்றுவது செய்யாம லெழுவதொடு விழுவதும்
இறங்குவதும் ஏறு வதும்வீண்
எண்ணுவதும்நண்ணுவதும் இப்புவன போகங்கள்
யாவினுஞ் சென்று சென்றே
சுற்றுவது மாகியோர் சற்றுமறி வில்லாது
சுழல்கின்ற தென்செய் குவேன்
தூயநின் றிருவருளி னன்றியிவ் வேழையச்
சுழன்மன மடக்க வருமோ
கற்றுவழு வற்றவர் கருத்தமர் கருத்தனே
கண்ணுதற் கடவுண் மணியே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 3

சந்ததம் எனக்குமகிழ் தந்தைநீ யுண்டுநின்
றன்னிடத் தேம வல்லி
தாயுண்டு நின்னடிய ரென்னும்நற் றமருண்டு
சாந்தமெனும் நேய ருண்டு
புந்திகொள் நிராசையாம் மனைவியுண் டறிவெனும்
புதல்வனுண்டு இரவு பகலும்
போனவிட முண்டு அருட் பொருளுமுண்டு
ஆனந்த போகபோக் கியமும் உண்டு
வந்தனைசெய் நீறெனுங் கவசமுண்டு அக்கமா
மணியுமுண்டு அஞ்செழுத்தாம்
மந்திரப் படையுண்டு சிவகதியெ னும்பெரிய
வாழ்வுண்டு தாழ்வும் உண்டோ
கந்தமிகு கொன்றையொடு கங்கைவளர் செஞ்சடைக்
கடவுளே கருணை மலையே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 4

நடராஜபதி மாலை

நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த
நண்ணுறு கலாந்த முடனே
நவில்கின்ற சித்தாந்த மென்னுமா றந்தத்தின்
ஞானமெய்க் கொடி நாட்டியே

மூதாண்ட கோடிக ளொடுஞ்சரா சரமெலாம்
முன்னிப் படைத்தன் முதலாம்
முத்தொழிலு மிருதொழிலு முன்னின்றி யற்றி
யைம், மூர்த்திகளும் ஏவல் கேட்ப
வாதாந்த முற்றபல சத்திகளொ டுஞ்சத்தர்
வாய்ந்துபணி செய்ய இன்ப
மாராச்சி யத்திலே திருவருட் செங்கோல்
வளத்தொடு செலுத்து மரசே
சூதாண்ட நெஞ்சினிற் றோயாத நேயமே
தூரியநடு நின்ற சிவமே.
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 1

ஒருபிரம னண்டங்க ளடிமுடிப் பெருமையே
உன்ன முடியா அவற்றின்
ஓராயிரங்கோடி மாலண்டம் அரனண்டம்
உற்றகோ டாகோ டியே
திருகலறு பலகோடி யீசனண் டம்சதா
சிவஅண்டம் எண்ணி றந்த
திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர்தஞ்
சீரண்டம் என்புக லுவேன்
உறுவுறுமிவ்வண்டங்களத்தனையும்அருள்வெளியில்
உறுசிறு அணுக்க ளாக

ஊடசைய அவ்வெளியில் நடுநின்று நடனமிடும்
ஒரு பெருங் கருணையரசே
மருவியெனை யாட்கொண்டு மகனாக்கி அழியா
வரந்தந்த மெய்த்தந் தையே
மணிமன்றில் நடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 2

பேருற்ற வுலகிலுறு சமயமத நெறியெலாம்
பேய்பிடிப் புற்ற பிச்சுப்
பிள்ளைவிளை யாட்டென உணர்ந்திடா துயிர்கள்பல
பேதமுற் றங்கு மிங்கும்
போருற் றிறந்துவீண் போயின ரின்னும்வீண்
போகாத படிவி ரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை யுணர்த்தி யெல்லாம்
ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதிநீ
யென்பிள்ளை யாத லாலே
இவ்வேலை புரிகவென் றிட்டன மனத்தில்வே
றெண்ணற்க வென்ற குருவே
நீருற்ற வொள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திரு ளகற்று மொளியே
நிர்க்குண னந்தபர நாதாந்த வரையோங்கு
நீதிநட ராஜ பதியே. 3

காயெலாங் கனியெனக் கனிவிக்கு மொருபெருங்
கருணை யமுதே யெனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட வற்புதக்
காட்சியே கனக மலையே
தாயெலாமனையவென் றந்தையே யொருதனித்
தலைவனே நின் பெருமையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
சார்கின்றதோறு மந்தோ
வாயெலாந் தித்திக்கும் மனமெலாந் தித்திக்கும்
மதியெலாந் தித்திக்கும் என்
மன்னியமெய் யறிவெலாந் தித்திக்கும் என்னில்
அதில், வருமின்பம் என்புகலுவேன்
தூயெலாம் பெற்றநிலை மேலருட் சுகமெலாந்
தோன்றிட விளங்கு சுடரே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேயருட்
ஜோதிநட ராஜ குருவே. 4

எய்ப்பற எனக்குக் கிடைத்தபெரு நிதியமே
எல்லாஞ்செய் வல்ல சித்தாய்
என்கையி லகப்பட்ட ஞானமணி யேயென்னை
எழுமையும் விடாத நட்பே
கைப்பற எனுள்ளே இனிக்கின்ற சர்க்கரைக
கட்டியே கருணை யமுதே

கற்பக வனத்தே கனிந்தகனி யேயெனது
கண்காண வந்த கதியே
மெய்ப்பய னளிக்கின்ற தந்தையே தாயேயென்
வினையெலாந் தீர்த்த பதியே
மெய்யான தெய்வமே மெய்யான சிவபோக
விளைவேயென் மெய்மை யுறவே
துய்ப்புறுமெ னன்பான துணையேயென் இன்பமே
சுத்தசன் மார்க்க நிலையே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேயருட்
ஜோதிநட ராஜ குருவே. 5

வயித்திய நாதர் பதிகம்

கல்லையு முருக்கலாம் நாருரித் திடலாம்
கனிந்தகனி யாச்செய் யலாம்
கடுவிட்மு முண்ணலாம் அமுதாக்க லாங்கொடுங்
கரடி புலி சிங்க முதலா
வெல்லுமிரு கங்களையும் வசமாக்கலா மன்றி
வித்தை யுங்கற் பிக்கலாம்
மிக்கவா ளைத்தண்டை விறகாக்க லாமணலை
மேவுதேர் வடமாக் கலாம்
இல்லையொரு தெய்வமவே றில்லையெம் பாலின்பம்
ஈகின்ற பெண்கள் குறியே

எங்கள்குலதெய்வமெனு மூடரைத்தேற்றவெனில்
எத்துணையும் அரிதரிது காண்
வல்லையவ ருணர்வற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 1

பெண்கொண்ட சுகமதே கண்கண்ட பலனிது
பிடிக்கவறி யாது சிலர்தாம்
பேரூரி லாதவொரு வெறுவெளியிலே சுகம்
பெறவே விரும்பி வீணிற்
பண்கொண்ட வுடல்வெளுத் துள்ளேநரம்பெலாம்
பசையற்று மேலெ ழும்பப்
பட்டினி கிடந்து சாகின்றார்க ளீதென்ன
பாவமிவ ருண்மை யறியார்
கண்கொண்ட குருடரே யென்றுவாய்ப்பல்லெல்லாங்
காட்டிச் சிரித்து நீண்ட
கழுமரக் கட்டைபோல் நிற்பார்க ளையஇக்
கயவர்வாய் மநமு முதுமே
மண்கொண்டு போகவோர் மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 2

இளவேனின் மாலையாய்க் குளிர்சோலை யாய்மலர்
இலஞ்சிபூம் பொய்கை யருகாய்
எற்றசந் திரகாந்த மேடையாய் அதன்மேல்
இலங்கும் அரமிய அணையுமாய்
தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போற்
றழைத்திடு நிலாக் காலமாய்த்
தனியிளந் தென்றலாய் நிரைநரம் புளவீணை
தன்னிசைப் பாட லிடமாய்
களவே கலந்தகற் புடையமட வர் அல்புடைக்
கலந்தநய வார்த்தை யுடனாய்க்
களிகொள இருந்தவர்கள் கண்டசுகம் இன்னடிக்
கழனிழற்சுக நிகருமே
வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 3

—o—

கருணையிலா ஆட்சி கடுகி யொழிக
அருணயந்த நன்மார்க்க ராள்க—தெருணயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து.

விண்ணப்பக் கலிவெண்பா

விடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம்!

பேயினையொத் திவ்வுலகிற் பித்தாகி நின்றஇந்த
நாயினைநீ யாண்டிடுதல் நன்கன்றே—ஆயினுமுன் 1
மண்ணா ருயிர்களுக்கும் வானவர்க்குந் நாவிரங்கி
உண்ணாக்கொடுவிடமு முண்டனையே—என்னாமல் 2
வேய்த்தவள வெற்பெடுத்த வெய்யஅரக்கன் றனக்கும்
வாய்த்தவர மெல்லாம் வழங்கினையே—சாய்த்தமன 3
வீம்புடைய வன்முனிவர்வேள்விசெய்து விட்டகொடும்
பாம்பையெல்லாந்தோளிற்பரித்தனையே நாம் பெரியர் 4
எஞ்சேமென் றுணவத்தா லேற்ற இருவரையும்
அஞ்சேலென் றுட்கொண் டருளினையே-துஞ்சுபன்றித் 5
தோயாக் குருளைகளின் துன்பம் பொறாதன்று
தாயாய் முலைப்பாலுந் தந்தனையே—வாயிசைக்குப் 6
பாண்டியன்முன் சொல்லிவந்த பாணன் பொருட்டடிமை
வேண்டி விறகெடுத்து விற்றனையே ஆண்டொருநாள்
வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித்
தூய்முடிமேல் மண்ணுஞ் சுமந்தனையே—ஆய்துயர
மாவகஞ்சேர் மாணிக்க வாசகருக் காய்க் குதிரைச்
சேவகன்போல் வீதிதனிற் சென்றனையே-மாவிசயன் 9
வில்லடிக்கு நெஞ்சம் விரும்பியதல்லா லெறிந்த
கல்லடிக்கு முள்ளங் களித்தனையே—மல்லலுறும் 10

வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே-சொல்லகலின் 11
நீளுகின்ற நெய்யருந்த நேர் எலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனா யாக்கினையே—கோளகல 12
வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னையுயர்
கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே-எச்சுறநல்
ஆறடுத்த வாகீசர்க் காம்பசியைக் கண்டுகட்டுச்
சோறெடுத்துப்பின்னே சுமந்தனையே-கூறுகின்ற 14
தொன்மைபெறுஞ் சுந்தரர்க்குத் தோழனென்றுபெண்
பரவை, நன்மனைக்குத் தூது நடந்தனையே நன்மைபெற
இற்றென்றவிற்றென்று எத்தனையோபேர்கள்செய்த
குற்றங் குணமாகக் கொண்டனையே—பற்றலகில் 16
அன்புடைய தாயர்களோ ராயிரம்பே ரானாலும்
அன்புடையாய் நின்னைப் போலாவாரோ-இன்பமுடன்
ஈண்டவருந் தந்தையர்களெண்ணிலரே யாயினுமென்
ஆண்டவனே நின்னைப்போலாவாரோ-பூண்டகைகொள்
என்னுடைய நின்னையன்றி யெந்தை பிரானேயுன்
ஆணையெனக் குற்றதுணை யாருமில்லை-நாணமுளன் 19
ஆனேன் பிழைகளனைத்தினையு மையாநீ
தானேபொறுக்கத் தகுங்கண்டாய்—மேனோற்ற 20
மால்தனக்கு மெட்டா மலர்க்கழலோய் நீயென்னைக்
கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க— * * * 21

நெஞ்சறி வுறுத்தல்

உபதேசம்

பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டும் அது
பற்றற்றா லன்றிப் பலியாதால்—பற்றற்றல் 1
வேதனையா லீங்கு விரியுஞ் சகப்பழக்க
வாதனைபோய் நீங்கிலன்றி வாராதால்-வாதனையும் 2
ஈனமந்தோ இவ்வுலகமென்று அருளை நாடுகின்ற
ஞானம் வந்தாலன்றி நலியாதால்—ஞானமது 3
போகமுற்றும் பொய்யெனவே போதும் அநித்தியவி
வேகமுற்றா லன்றி விளங்காதால்—ஆகவஃது 4
உண்ணவந்தாற்போலுமிவண் உற்று விசாரித்திடுமோர்
எண்ணம்வந்தாலன்றி யிசையாதால்—எண்ணமது 5
பங்கமடைந் தாரவையைப் பாராத சாதுக்கள்
சங்கமடைந்தாலன்றிச் சாராதால் * * *

மாற்றறி யாத செழும்பசும் பொன்னே மாணிக்கமே
சுடர் வண்ணக்கொழுந்தே, கூற்றறி யாதப் பெருந்தவ
ருள்ளக்-கோயிலிருந்த குணப்பெருங்குன்றே, வேற்றறி
யாதசிற் றம்பலக் கனியே விச்சையில் வல்லவர் மெச்
சும் விருந்தே, சாற்றறி யாதவென் சாற்றுங் களித்தாய்-
தனி நடராஜவென் சற்குரு மணியே. 1

மனமெனுமோர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்
மற்றவர்போலெனை நினைத்து மருட்டாதேகண்டாய்
இனமுறவென் சொல்வழியே யிருத்தியெனிற் சுகமாய்
இருந்திடுநீயென் சொல்வழி யேற்றிலையானாலோ
தினையளவுன் அதிகாரஞ் செல்லவொட்டே னுலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் திருவருளால் கணத்தே
நனவிலெனை யறியாயோ யாரெனவிங் கிருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே. 2

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந் தன்பே நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண்ணீர
தனா லுடம்பு, நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே
ஞான-நடத்தரசே யென்னுரிமை நாயகனே யென்று,
வனைந்து வனைந்தேத்துதும் நாம் வம்மி னுலகிய
லீர்-மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்
டீர், புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல்
கின்றேன்-பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண
மிதுவே. 3

கண்டதெலா மநித்தியமே கேட்டதெலாம் பழுதே-
கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே,
உண்டதெலாம் மலமேயுட்கொண்டதெலாங் குறையே-
உலகியலீ ரிதுவரையும் உண்மையறிந் திலீரே, விண்ட
தனாலென்இனிநீர் சமரசசன் மார்க்க-மெய்ந்நெறியைக்

கடைப்பிடித்து மெய்ப்பொருள் நன் குணர்ந்தே,
எண்டகுசிற் றம்பலத்தே யெந்தையரு ளடைமின் -
இறவாத வரம்பெறலாம் இன்பமுற லாமே. 4

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்றன்
வார்த்தை-நம்புமினோ நமரங்காள் நற்றருணமிதுவே,
வானுரைத்த மணிமன்றில் நடம்புரியெம் பெருமான்
வரவெதிர்கொண்டவனருளால்வரங்களெலாம் பெறவே,
தேனுரைக்கும் உளமினிக்க எழுகின்றே னீவிர்-
தெரிந்தடைந்தென் னுடனெழுமின்சித்திபெறலாகும்,
ஏனுரைத்தே னிரக்கத்தா லெடுத்துரைத்தேன் கண்
டீர் யானடையுஞ் சுகத்தினைநீர் தானடைதல்குறித்தே.

குறிந்துரைக்கின் றேனிதனைக் கேண்மினிங்கே
வம்மின்-கோணுமனக் குரங்காலே நாணுகின்ற வுலகீர்,
வெறித்தவும்மா லொருபயனும் வேண்டுகிலேனெனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறுநினையாதீர்,
பொறித்த மதஞ் சமயமெல்லாம் பொய் பொய்யே அவற்
றில் புகுதாதீர் சிவமொன்றே பொருளெனக் கண்
டறிமின், செறித்திடுசிற் சபைநடத்தைத் தெரிந்து
துதித்திடுமின் சித்தியெலாம் இத்தினமே சத்தியஞ்
சேர்ந்திடுமே. 6

செய்நாலுந் தீமையெலாம் பொறுத்தருள்வான்
பொதுவில் திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தா

னங் கவனை, மெய்தாவ நினைத்திடுக சமரசசன் மார்க்
கம் மேவுகவென் றுரைக்கின்றேன் மேதினியீரெனைத்
தான், வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக்கொண்
டிடுவேன் மனங்கோணேன் மானமெலாம் போனவழி
விடுத்தேன், பொய்தானோர் சிறிதெனினும் புகலேன்
சத்தியமே புகல்கின்றேன் நீவிரெலாம் புனிதமுறும்
பொருட்டே. 7

மற்றறிவோ மெனச்சிறிது தாழ்ந்திருப்பீ ரானால்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே யந்தோ
சற்றுமதை நும்மாலே தடுக்கமுடி யாதே
சமரச சன்மார்க்க சங்கத்தவர்களல்லா லதனை
எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகி லெவரும்
இல்லை நண்டீர் சத்தியமீதென்மொழி கொண்டுலகீர்
பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டருளம்
பலப்பற்றே பற்றுமினோ வென்றுமிற வீரே. 8

உற்றமொழி யுரைக்கின்றே னொருமையினாலுமக்கே
உறவனன்றிப் பகைவனென வுன்னுதீ ருலகீர்
கற்றவருங் கல்லாரு மழிந்திடக்காண் கின்றீர்
கரணமெலாங் கலங்கவரு மரணமுஞ்சம் மதமோ
சற்றுமிதைச் சம்மதியா தென்மனந்தா னுமது
தன்மனந்தான்நன்மனமோவன்மனமோ அறிம்பன்

இற்றிதனைத் தடுத்திடலா மென்னொடு சேர்ந்திடுமின்
என்மார்க்க மிறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே.

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோ மென்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவு நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங் காண்கின் றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக்குறியீர்
எட்டோடே யிரண்டுசேர்த் தெண்ணவு மறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே. 10

பண்ணாத தீமைகள் பண்ணுகின் றீரே பகராதவன்
மொழி பகருகின்றீரே, நண்ணாத தீயினம் நண்ணு
கின் றீரே நடவாத நடத்தைகள் நடக்கவந் தீரே,
கண்ணாகக் காக்கின்ற கருத்தனை நினைந்தே கண்ணார
நீர்விட்டுக் கருதறி யீரே, எண்ணாத தெண்ணவும்
நேருமோர்காலம் எத்துணைகொள்கின்றீர் பித்துலகீரே.

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந்தடிகளிலே கோத்திரச்சண்டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணேநீ ரழிதலழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடுந் தனித்தலைவ ரொருத்த ரவர்தாமே

வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேனுமையே. 12

காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டுக்
கரும்பைவிட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற வுலகீர்
கூடுவிட்டுப் போயினபின் எதுபுரிவீ ரெங்கே
குடியிருப்பீ ரையோநீர் குறித்தறியீ ரிங்கே
பாடுபட்டீர் பயனறியீர் பாழ்க்கிறைத்துக் கழித்தீர்
பட்டதெலாம் போதுமிது பரமர்வரு தருணம்
ஈடுகட்டி வருவீரேல் இன்பமிகப் பெறுவீர்
எண்மையுரைத்தேனல நான் உண்மையுரைத்தனனே

ஆற்றுவெள்ளம் வருவதன்முன் அணைபோட வறியீர்
அகங்காரப் பேய்பிடித்தீ ராடுதற்கே யறிவீர்
கூற்றுவருங் காலதனுக் கெதுபுரிவீ ரையோ
கூற்றுதைத்த சேவடியைப் போற்றவிரும் பீரோ
வேற்றுரைத்து வினைபெருக்கி மெலிகின்ற வுலகீர்
வீணுலகக் கொடுவழக்கை விட்டுவிட்டு வம்மின்
சாற்றுவக்க வெனதுதனித் தந்தைவரு கின்ற
தருணமிது சத்தியஞ்சிற் சத்தியைச் சார்வதற்கே.

பொய்விளக்கப் புகுகின்றீர் போதுகழிக்கின்றீர்
புலைகொலைகள் புரிகின்றீர் கலகலவென் கின்றீர்
கைவிளக்குப் பிடித்தொருபாழ்ங் கிணற்றில்விழுகின்ற
களியரெனக் களிக்கின்றீர் கருத்திருந்துங்கருதீர்

ஐவிளக்கு மூப்புமர ணாதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முருக்காதோ கொடியமுயற் றுலகீர்
மெய்விளக்க வெனது தந்தை வருகின்ற தருணம்
மேவியதிண் டடைவீரே லாவிபெறு வீரே. 15

எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச் சாத்தி
ரங்கள் எடுத்துரைத்தே யெமது தெய்வ மெமது தெய்வ
மென்று, கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்
றென் றறியீர் கரிபிடித்துக் கலகமிட்டப் பெரியரினும்
பெரியீர், ஐவகைய பூதவுடம் பழிந்திடிலென் புரிவீர்
அழியுடம்பை யழியாமை யாக்கும்வகை யறியீர், உய்
வகையென் றனித்தந்தை வருகின்ற தருணம் உற்ற
திவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே. 16

உறக்கறியீர் அளப்பதற்கோ ருளவறியீர், உலகீர் ஊர
றியீர் பேரறியீர் உண்மையொன்று மறியீர் கிழக்கறியீர்
மேற்கறியீர் அம்பலத்தே மாயைக் கேதமற நடிக்கின்ற
பாதமறிவீரோ, வழக்கறிவீர் சண்டையிட்டே வம்ப
ளக்க அறிவீர் வடிக்குமுன்னே சோறெடுத்து வயிற்
றடைக்க அறிவீர், குழைக்கறியே பழக்கறியேகூட்டுவர்க்
கக கறியே குழம்பே சாறே யெனவுங் கூறஅறி வீரே. 17

ஆயுரைந்த அருட்ஜோதி வருகின்ற தருணமிதே
யறிமி னென்றே, வாயுரைத்த வார்த்தையென்றன்
வார்த்தைகளென் கின்றாரிம் மனிதரந்தோ, தாயுரைத்த
திருப்பொதுவி னடம்புரிந்தென் னுளங்கலந்த தலைவா
விங்கே, நீயுரைத்த திருவார்த்தை யெனவறியா ரிவ
ரறிவின் இகழ்ச்சி யென்னே. 1

இறந்தவர்கள் பலருமிங்கே யெழுகின்ற தருண
மிதே யென்று வாய்மை, அறந்தழைய வுரைக்கின்ற
வார்த்தைகளென் றறைகின்றாரால், மறந்தசிறி யேனு
ரைக்க வல்லேனோ யெல்லாஞ்செய் வல்லோ யுன்றன்,
சிறந்ததிரு வார்த்தையெனத் தெரிந்திலரிம் மனிதர்
மதித்திறமை யென்னே. 2

சோற்றாசை யொடுகாமச் சேற்றாசைப் படுவாரைத்
துணிந்து கொல்லக், கூற்றாசைப் படுமெனநான் கூறு
கின்ற தன்மையினிற் கொண்டு நீவிர், நேற்றாசைப்
பட்டவருக் கின்றருள்வார் போலுமன்றி நினைத்த
வாங்கே, பேற்றாசைக் கருள்புரியும் ஞானசபா பதிபுக
ழைப் பேசு வீரே. 3

தொண்டாளப் பணந்தேடுந் துரையாள உலகா
ளச் சூழ்ந்தகாமப், பெண்டாளத் திரிகின்ற பேய்மனத்
தீர் நும்முயிரைப் பிடிக்க நாளைச், சண்டாளக் கூற்று

வரில் என்புகல்வீர் ஞானசபைத் தலைவ னும்மைக், கொண்டாளக் கருதுமினே ஆண்டபின்னர் இவ்வுலகிற் குலாவு வீரே. 4

பிறந்தவரை சீராட்டிப் பெருகவளர்த் திடுகின்றீர் பேயரே நீர், இறந்தவரைச் சுடுகின்றீர் எவ்வணஞ்சம் மதித்தீரோ இரவிற் றூங்கி, மறந்தவரைத் தீமூட்ட வல்லீரால் நும்மனத்தை வயிரமான, சிறந்தவரை யெனப்புகழச் செய்துகொண்டீர் என்பிறந்து திரிகின்றீரே. 5

அணங்கெழுபே ரோசையொடும் பறையோசை பொங்கக் கோரணிகொண் டந்தோ, பிணங்கழுவியெடுத்துப்போய்ச் சுடுகின்றீர் இனிச்சாரும் பிணங்களே நீர், கணங்கழுகுன் டாலும்ஒரு பயனுண்டே என்ன பயன் கண்டீர் சுட்ட, எணங்கெழுஞ்சாம் பலைக்கண்டீர் அது புன்செய் எருவுக்கும் இயலாதன்றே. 6

குணம்புதைக்க உயிரடக்கங் கொண்டது சுட்டாலதுதான் கொலையாமென்றே, வணம்புதைக்க வேண்டுமென வாய்தடிக்கச் சொல்கின்றேன் வார்த்தை கேட்டும், பிணம்புதைக்கச் சம்மதியீர் பணம்புதைக்கச் சம்மதிக்கும் பேய ரேநீர், எணம்புதைக்கத் துயில்வார் நும்பாற் றுயிலற்கு அஞ்சுவரோ இழுதையீரே. 7

சுட்டாலும் கனத்தாலும் களிக்கின்ற பேயுலகீர் கலைசோர்ந் தாரைப், பொட்டாலும் துகிலாலும் புனைவித்துச் சுடுகின்றீர் புதைக்க நேரீர், சுட்டாலுஞ் சுடுமதுகண்டுமதுடம்பு துடியாதென்சொல்லீர் நம்மைத், தொட்டாலும் தோடமுறும் விட்டாலுங் கதியிலைமேற் சூழ்வீ ரன்றே. 8

பரனளிக்குந் தேகமிது சுடுவது அபராதமெனப் பகர்கின்றேன் நீர், சிரம்நெளிக்கச் சுடுகின்றீர் செத்தவர்கள் பற்பலருஞ் சித்த சாமி, உரனளிக்க எழுகின்ற திருநாள்வந் தடுத்தன ஈதுணர்ந்து நல்லோர், வரனளிக்கப் புதைத்தலை காணீரோ கண்கெட்டமாட்டினீரே. 9

புலைத்தொழிலே புரிகின்றீர் புண்ணியத்தைக் கருங்கடலிற் போக விட்டீர், கொலைத்தொழிலிற் கொடியீர் நீர் செத்தாரைச் சுடுகின்ற கொடுமை நோக்கிக், கலைத்தொழிலிற் பெரியருளங் கலங்கினர் அக்கலக்கமெலாங் கடவுள் நீக்கித், தலைத்தொழில்செய் சன்மார்க்கந் தலையெடுக்கப் புரிகுவது இத் தருணந்தானே. 10

சிரிப்பிலே பொழுது கழிக்குமிவ் வாழ்க்கைச் சிறியவர் சிந்தைமாத் திரமோ, பொருப்பிலே தவஞ்செய் பெரியர்தம் மனமும் புளிப்பிலே துவர்ப்பிலே

யவர்ப்புக், கரிப்பிலே கொடிய கயப்பிலே கடிய கார்ப்பிலே கார்ப்பொடு கலந்த, வெரிப்பிலே புகுவ தன்றி யெள்ளளவும் இனிப்பிலே புகுகின்ற திலையே.

பராபரன் உண்மை நிலையம்

எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கியுப கரிக்கின்றார் யாவ ரந்தச், செவ்வியர்தஞ் செயலனைத்துந் திருவருளின் செயலெனவே தெரிந்தே னிங்கே, கவ்வையிலாத் திருநெறியத் திருவாளர் தமக்கேவல் களிப்பாற் செய்ய, ஒவ்வியதென் கருத்தவர்சீ ரோதிட வென்வாய்மிகவும் ஊர்வ தாலோ. 1

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிருந் தம்முயிர் போல் எண்ணியுள்ளே, ஒத்து உரிமையுடையவராய் உவக்கின்றார் யாவர் அவருளந்தான் சுத்த, சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமெனநான் தேர்ந்தேன் அந்த, வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என் சிந்தைமிக விழைந்த தாலோ. 2

கருணையொன்றே வடிவாகி எவ்வுயிருந் தம்முயிர் போற் கண்டு ஞானத், தெருள்நெறியிற் சுத்தசிவ சன்மார்க்கப் பெருநீதி செலுத்தா நின்ற, பொருள்நெறி சற்குணசாந்தப் புண்ணியர் நம் திருவாயாற் புகன்ற வார்த்தை, அருள்நெறிவே தாகமத்தின் அடிமுடிசொல் வார்த்தைகளென் றறைவ ராலோ. 3

சன்மார்க்க துன்மார்க்க இயல்பு

சேய்போல் உலகத் துயிரையெல்லாம் எண்ணிச் சேர்ந்துபெற்ற, தாய்போல் உரைப்பர் சன்மார்க்க சங்கத்தவர் சாற்றுமெட்டிக், காய்போற் பிறர்தமைக் கண்டாற் கசந்துஉட் கடுகடுத்தே, நாய்போற் குரைப்பர் துன்மார்க்க சங்கத்தவர் நானிலத்தே.

உருவ ராகியும் அருவின ராகியும் உருவரு வினராயும், ஒருவ ரேயுளார் கடவுள்கண் டறிமினோ உலகுளீர் உணர்வின்றி, இருவ ராமென்றும் மூவரேயாமென்றும் இயலும் ஐவர்களென்றும் எருவ ராயுரைத் துழல்வதென் உடற்கு உயிரிரண்டுமூன் றெனலாமே. 1

உடுக்க வோவொரு கந்தைக்கு மேலிலை உண்ணவோஉண வுக்கும் வழியிலை, படுக்கவோ பழம்பாய்க்குங் கதியிலை பாரில் நல்லவர் பாற்சென்று பிச்சைதான் எடுக்க வோதிட மில்லை யென் பாலுனக் கிரக்க மென்பது மில்லை உயிரைத்தான், விடுக்கவோ மன மில்லை யென் செய்குவேன் வெண்பி றைச்சடை வித்தக வள்ளலே. 2

இறகெடுத்த அமணர்குலம் வேரறுத்த சொக்கே ஈதென்ன ஞாயம், அறுகெடுத்த சடைமுடிமேல் மண்ணெடுக்க மாட்டாமல் அடிபட்டு ஐயோ, பிறகெடுத்தீர்

வளையல் விற்றீர் சொற்கேளாப் பிள்ளைகளைப் பெற்ற தோஷம், விறகெடுத்தீர் என்செய்வீர் விதிவசந்தான் யாவரையும் விடாது தானே. 3

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியே னுமது தாள் வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங்கேட்பீர், என் மார்க்கத் தெனை நமக்குள் ஒருவனெனக் கொள்வீர் எல்லாஞ்செய் வல்லநம திறைவனையே தொழுவீர், புன் மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த், தன்மார்க்கமாய் விளங்குஞ் சுத்தசிவ மொன்றே தன்னுணை யென்னுணைச் சார்ந்தறிமி னீண்டே. 4

காற்றாலே புவியாலே ககனமத னாலே கனலாலே புனலாலே கதிராதி யாலே, கூற்றாலே பிணியாலே கொலைக்கருவியாலே கோளாலே பிறவியற்றாங் கொடுஞ் செயல்களாலே, வேற்றாலே யெஞ்ஞான்றும் அழியாதே விளங்கும் மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந் தளித்தா னெனக்கே, எற்றாலே யிழிவெனநீர் நினையாதீர் உலகீர் எந்தையருட் பெருஞ் ஜோதி இறைவனைச் சார் வீரே.

கடுகுஆட்டுக் கறிக்கிடுக தாளிக்க வெனக்கழறிக் களிக்கானின்ற, சுடுகாட்டுப் பிணங்காள் இச்சுகமனைத் திங் கணச்சுகமே சொல்லக் கேண்மின், முடுகாட்டுக் கூற்றுவருஞ் சாவீரால் சாவதற்கு முன்னே நீவிர், இடு காட்டுப் பிணங்கண்டால் எத்துமினோ எமையும் இவ் வாறிடுக வென்றே. 6

வாது பேசிய மனிதர்காள் ஒருவார்த்தை கேண் மின்கள் வந்து நம். பேசது போவதன் முன்னரே யருட் பொதுவி லேநடம் போற்றுவீர், தீது பேசினீர் என்றிடா துமைத் திருவு ளங்கொளுங் காண்மினோ, சூது பேசிலேன் நன்மை சொல்கின்றேன் சுற்ற மென் பது பற்றியே. 7

புண்ணைக் கட்டிக்கொண் டேயதன் மேலொரு, புடவை கட்டிப் புதுமைகள் காட்டிடும், பெண்ணைக் கட்டிக்கொள்வாரிவர் கொள்ளிவாய்ப் பேயைக் கட்டிக் கொண்டாலும் பிழைப்பர்காண் மண்ணைக் கட்டிக் கொண்டேயழு கின்றஇம் மடையப் பிள்ளைகள் வாழ் வினை நோக்குங்கால், கண்ணைக் கட்டிக்கொண்டு ஊர் வழிபோங் கிழக்கழுதை வாழ்விற் கடையெனலாகுமே.

உணிக்கும் மூட்டுக்கும் கொதுகுக்கும் பேனுக்கும் உவப்புறப் புசிக்கின்றீர், துணிக்குங் காசுக்குஞ் சோற் றுக்கும் ஊர்தொறுஞ் சுற்றிப்போய் அலைகின்றீர், பிணிக்கும் பீடைக்கும் உடலுளங் கொடுக்கின்றீர் பேதையீர் நல்லோர்கள், பணிக்கும் வேலைசெய் துண் டுடுத்து அம்பலம் பரவுதற் கிசையீரோ. 9

உயிரெலாம் ஒருநீ திருநடம் புரியும் - ஒருதிருப்
பொதுவென அறிந்தேன், செயிரெலாந் தவிர்ந்தேன்
திருவெலா மடைந்தேன் சித்தெலாம் வல்லதொன்
றறிந்தேன், மயிரெலாம் புளகித் துளமெலாங் கனிந்து
மலர்ந்தனன் சுத்தசன் மார்க்கப், பயிரெலாந் தழைக்
கப் பதியெலாங் களிக்கப் பாடுகின்றேன் பொதுப் 10
பாட்டே.

ஆக மாந்தரும் வேதந்தின் அந்தரும் அறையும்
பாக மாம்பர வெளிநடம் பரவுவீர் உலகீர்
மோக மாந்தருக்கு உரைத்திலேன் இதுசுக முன்னும்
யோக மாந்தருக்குக் காலமுண்டாகவே யுரைத்தேன்

ஆறு கோடியாஞ் சமயங்கள் அகத்தினும் அவைமேல்
வீறு சேர்ந்தசித் தாந்தவே தாந்தநா தாந்தந்
தேறும் மற்றைய அந்தத்துஞ் சிவம் ஒன்றேயன்றி
வேறு கண்டிலேன் கண்டிரேற் பெரியர்காள் விளம்பீர்

வேதா கமங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர்—சூதாகச்
சொன்னவலால் உண்மைவெளி தோன்றவுரைத்தலில
என்ன பயனோ இவை.

செத்தாரை யெல்லாந் திரும்ப எழுப்புதலிங்கு
எத்தால் முடியுமெனில் எம்மவரே—சித்தாம்

அருட் பெருஞ் ஜோதி யதனால் முடியும்
தெருட்பெருஞ் சத்தியம் ஈதே.

ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர் - வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்து இனியிங்கு
என்மார்க் கமும் ஒன்றுமே.

நோவாது நோன் பெனைப்போல் நோற்றவரு மெஞ்
ஞான்றும், சாவாவர மெனைப்போற் சார்ந்தவருந்—
தேவா, நின் பேரருளை யென்போலப் பெற்றவரும்
எவ்வுலகில், யாருளர் நீ சற்றே யறை.

அம்மை திருப்பதிகம்

பொய்யாத மொழியு மயல் செய்யாத செயலும் வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமும்உட் பிரியாத சாந்தமும்
புந்தி தளராத நிலையும்
எய்யாத வாழ்வும்வே றெண்ணாத நிறைவும்·நினை
என்றும் மறவாத நெறியும்
இறவாத தகவும் மேற் பிறவாத கதியும்இவ்
ஏழையேற் கருள்செய் கண்டாய்

கொய்யாது குவியாது குமையாது மணம்வீசும்
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணி விளக்கே
ஐயாநங்கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட முப்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. 1

தூரிட்ட நடையில் என் போரிட்ட மனதைநான்
சொல்லிட்ட முடன் அணைத்துத்
துன்றிட்ட மோனமெனும் நன்றிட்ட அமுதுண்டு
சும்மா இருத்தி யென்றால்
காரிட்டி தற்குமுன் யாரிட்ட சாபமோ
கண்டிலேன் அம்மம்ம ஓர்
கணமேனும் நில்லாது பொல்லாது புவியிற்
கறங்கெனச் சுழல்கின் றதே
தாரிட்ட நீ அருள் சீரிட்டி டாயெனில்
தாழ்பிறவி தன்னில் அதுதான்
தன்னைவீழ்த்துவதன்றி என்னையும் வீழ்த்தும் இத்
தமியனேன் என்செய் குவேன்
ஆறிட்ட சடையாளர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே

அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பாசி
வானந்த வல்லி உமையே. 2

மாயையெனும் இரவில்என் மனையகத்தே விடய
வாதனையெனுங்கள் வர்தாம்
வந்துமன அடிமையையெழுப்பி அவனைத் தமது
வசமாக உளவு கண்டு
மேயமதி யெனும்ஒரு விளக்கினை அவித்துஎனது
மெய்ந்நிலைச் சாளிகை யெலாம்
வேருற உடைத்துள்ள பொருளெலாங் கொள்ளை
கொள, மிகநடுக் குற்று நினையே
நேயமுற ஓவாது கூவுகின் றேன் சற்றும்
நின்செவிக் கேற விலையோ
நீதியிலையோ தருமநெறியுமிலையோ அருளின்
நிறைவுமிலையோ என் செய்கேன்
ஆயமறை முடிநின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பாசி
வானந்த வல்லி உமையே. 3

வெவ்வினைக் கீடான காயமிது மாயமென
வேதமுதல் ஆகமமெலாம்
மிகுபறையறைந்தும்இது வெயின்மஞ்சள்நிறமெ
னும், விவேகர் சொல் கேட்டறிந்தும்

கவ்வைபெறு கடலுலகில் வைரமலை யொத்தவர்
கணத்திடை இறத்தல் பலகால்
கண்ணுறக் கண்டும்இப் புலையுடலின் மானம்ஓர்
கடுவளவும் விடுவ தறியேன்
எவ்வமுறு சிறியனேன் ஏழைமதி என்னமதி
இன்னமதி யென்றுணர் கிலேன்
இந்தமதி கொண்டு நான் எந்தவகை அழியாத
இன்பநிலை கண்டு மகிழ்வேன்
அவ்வியம் அகற்றியருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. 4

நீறணிந்து ஒளிர்அக்க மணிதரித்து உயர்சைவ
நெறிநின்று உனக்குரிய வோர்
நிமலமுறும் ஐந்தெழுத் துள்நிலையு றக்கொண்டு
நின்னடிப் பூசை செய்து
வீறணிந்து என்றும்ஒரு தன்மைபெறும் சிவஞான
வித்தகர் பதம்பரவும் ஓர்
மெய்ச்செல்வ வாழ்க்கையில் விருப்பமுடை யேன்
இது, விரைந்தருள வேண்டும் அமுதே
பேறணிந்து அயன்மாலும் இந்திரனும் அறிவரிய
பெருமையை அணிந்த அமுதே

பிரசமலர் மகள்கலைசொல் மகள்விசய மகள்முதல்
பெண்கள் சிரமேவும் மணியே
ஆறணிந் திடுசடையர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. 5

வடிவுடை மாணிக்க மாலை

சீர்கொண்டவொற்றிப்பதியுடையானிடஞ்சேர்ந்தமணி
வார்கொண்டகொங்கைவடிவாம்பிகைதன்மலரடிக்குத்
தார்கொண்டசெந்தமிழ்ப்பாமாலைசாத்தத்தமியனுக்கே
ஏர்கொண்ட நல்லரு ளீயுங் குணாலய வேரம்பனே. 1

கடலமு தேசெங் கரும்பே யருள்கற்ப கக்கனியே
உடலுயி ரேஉயிர்க்குள் உணர்வே உணர்வுள் ஒளியே
அடல்விடையார் ஒற்றியாரிடங்கொண்ட அருமருந்தே
மடலவிழ் ஞான மலரே வடிவுடை மாணிக்கமே. 2

அணியே அணிபெறும் ஒற்றித் தியாகர்தம் அன்
புறசற், குணியேயெம் வாழ்க்கைக் குலதெய்வமே மலைக்
கோன்தவமே, பணியேன் பிழைபொறுத் தாட்கொண்ட
தெய்வப் பதிகொள்சிந்தா, மணியேயென் கண்ணுண்
மணியே வடிவுடை மாணிக்கமே. 3

திருமாலும்நான்முகத்தேவுமுன்னாள்மிகத் தேடிமனத்த
ருமாலுழக்க அனலுருவாகியமர்ந்தருளும் பெருமானெம்
மானேற்றிப் பெம்மான் கைம்மான்கொளும் பித்தன்மலை
மருமானிடங்கொள்பெண்மானேவடிவுடை மாணிக்கமே

கண்ணே அக் கண்ணின் மணியே மணியிற் கலந்
தொளிசெய், விண்ணே வியனொற்றி யூரண்ணல் வாமத்
தில் வீற்றிருக்கும், பெண்ணே மலைபெறும் பெண்மணி
யே தெய்வப் பெண்ணமுதே, மண்ணேயம் நீத்தவர்
வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 5

நீயே யெனது பிழை குறிப்பா யெனில் நின்னடி
மைப், பேயேன் செயும்வண்ண மெவ்வண்ணமோ
எனைப் பெற்றளிக்குந், தாயே கருணைத் தடங் கடலே
ஒற்றிச்சார் குமுத, வாயேர் சவுந்தர மானே வடிவுடை
மாணிக்கமே. 6

வான்தேட நான்குமறைதேட மாலுடன் வாரி
சமே, லான்தேட மற்றை அருந்தவர்தேட என் அன்பின்
மையால், யான்தேட என்னுளஞ் சேர்ஒற்றியூர் எம்
இருநிதியே, மான்தேடும் வாட்கண் மயிலே வடிவுடை
மாணிக்கமே. 7

திருநாள் நினைந்தொழும் நன்னாள் தொழாமற்
செலுத்தியநாள், கருநாள் எனமறை யெல்லாம் புகலுங்
கருத்தறிந்தே, ஒருநாளினும்நின் றனைமறவார் அன்பர்
மற்றியில்வாழ், மருநாண் மலர்க்குழன் மானே வடிவுடை
மாணிக்கமே.

வானு ளடைவர் வறுமை யுறார்நன் மனைமக்கள்
பொன், பூண் ஆள் இடம்புகழ் போதம் பெறுவர் பின்
புன்மையொன் றுங், காணார் நின் நாமங் கருதுகின்றோர்
ஒற்றிக் கண்ணுதல்பால், மானேர்வ முற்ற மயிலே வடி
வுடை மாணிக்கமே. 9

தீதுசெய்தாலும்நின் அன்பர்கள் தம்முன் செருக்கி
நின்று, வாதுசெய் தாலும்நின் தாள்மறந் தாலும் மதி
யிலியேன், எதுசெய்தாலும் பொருத்தருள்வாய் ஒற்றி
இன்னிடைப்பூ, மாதுசெய் தாழ்குழன் மானேவடிவுடை
மாணிக்கமே. 10

தாயே மிகவுந் தயவுடையாளெனச் சாற்றுவர் இச்
சேயேன் படுந்துயர் நீக்க என்னே உளஞ்செய்திலையே
நாயேன் பிழைஇனி நாடாது நல்லருள் நல்க வருவாயே
எம் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. 11

நேயானு கூல மனமுடையாய் இனி நீயுமென்றன்
தாயாகில் யானுன் தனையனுமாகில் என்றன் உளத்தில்
ஓயா துறுந்துயரெல்லாந் தவிர்த்தருள் ஒற்றியிற் செவ்
வாயாரமுத வடிவே வடிவுடை மாணிக்கமே. 12

வாழிநின் சேவடி போற்றி நின்பூம்பத வாரிசங்கள்
வாழிநின் றுண்மலர் போற்றிநின் றண்ணளிவாழிநின்சீர்
வாழியென் னுள்ளத்தில் நீயும் நின் ஒற்றி மகிழ்நரும் நீ
வாழியென் ஆருயிர்வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

தவள மலர்க் கமலமிசை வீற்றிருக்கு மம்மனையைச் சாத்தம் பூத்த, குவளைமலர்க் கண்ணுளைப் பெண்ணுளும் பெண்ணமுதைக் கோதிலாத, பவளவிதழ்ப் பசுங்கொடியை நான்முகனுர் நாவோங்கும் பாவைதனைக், கவளமத கயக்கொம்பின் முலையாளைக் **கலைமானைக்** கருதவோமே. 1

கலை பயின்ற உளத்து இனிக்குங் கரும்பினை முக்கனியை அருட் கடலை யோங்கும், நிலைபயின்ற முனிவரருந் தொழுதேத்த நான்முகனுர் நீண்ட நாவிற் றலைபயின்ற மறைபயின்று மூவுலகுங் காக்கின்ற தாயை வாகைச் சிலைபயின்ற நுதலாளைக் **கலைவாணி** யம்மையை நாம் சிந்திப்போமே. 2

இலக்குமி தோத்திரம்

உலகம் புரக்கும் பெருமான்றன் உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி-உவகையளிக்கும் பேரின்ப வுருவேயெல்லாம் உடையாளே, திலகஞ் செறிவா ணுதற்கரும்பே தேனே கனிந்த செழுங்கனியே-தெவிட்டா தன்பர் உளத்துள்ளே தித்தித் தெழுமோர் தெள்ளமுதே மலகஞ் சுகத்தேற் கருளளித்த வாழ்வே யென்கண் மணியேயென் - வருத்தந் தவிர்க்க வருங்குருவாம் வடிவே ஞான மணிவிளக்கே, சலகந்தரம்போற் கருணை பொழி தடங்கண் திருவே கண்ணமங்கைத் - தாயே சரணஞ் சரணமிது தருணங் கருணை தருவாயே. 7

ஸ்ரீ ராம நாமத் திருப்பதிகம்

காராயவண்ணமணிவண்ண கண்ணகன சங்குசக்ரதரனே, சீராய தூய மலர்வாய நேய ஸ்ரீராமராமனெனவே தாராயவாழ்வுதருநெஞ்சுசூழ்கதாமோதராய நமவோம் நாராய ணாய நமவாமனாய நமகேச வாய நமவே. 1

திருமகளெம் பெருமாட்டி மகிழும் வண்ணச்
 செழுங்கனியே கொழும்பாகே தேனே தெய்வத்
தருமகனைக் காத்தருளக் கரத்தே வென்றித்
 தனுவெடுத்த வொருமுதலே தருமப் பேறே
இருமையுமென் னுளத்தமர்ந்த ராம நாமத்
 தென்னரசே யென்னமுதே யென்றுயே நின்
மருமலர்ப்பொன் அடிவழுத்துஞ் சிறியேன் அந்தோ
 மனந்தளர்ந்தேன் அறிந்தும்அருள் வழங்கிலாயே.

மண்ணுளா நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
 மற்றவர்போற் பற்றடைந்து மாளவேண்டேன்
விண்ணுளா நின்றவொரு மேன்மை வேண்டேன்
 வித்தகநின் றிருவருளே வேண்டி நின்றேன்
புண்ணுளா நின்றமன முடையேன் செய்த
 பொய்யனைத்துந் திருவுளத்தே பொருப்பாயன்றிக்
கண்ணுளா சுடர்க்கமலக் கண்ணு என்னைக்
 கைவிடிலென் செய்வேனே கடைய னேனே. 3

அறம்பழுக்குந் தருவேயென் குருவே யென்றன்
ஆருயிருக் கொருதுணையே யரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம்பழுக்கும் இலங்கைஇராவணனைப் பண்டோர்
வாளியினாற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம்பழுக்கும் ஸ்ரீராம வள்ள லேநின்
திருவருளே யன்றிமற்றோர் செயலி லேனே. 4

கூறுவதோர் குணமில்லாக் கொடிதாஞ் செல்வக்
குருட்டறிவோர் இடைப்படுமென் குறைகளெல்லாம்
ஆறுவதோர் வழிகாணேன் அந்தோ அந்தோ
அவலமெனுங் கருங்கடலில் அழுந்துகின்றேன்
எறுவதோர் வகையறியேன் எந்தாய் எந்தாய்
எற்றுகின்றோர் நின்னையன்றி இல்லேன் என்னைச்
சீறுவதோ இரங்குவதோ யாதோ வுன்றன்
திருவுளத்தைத் தெரியேனே சிறியனேனே. 5

பாண்டவர் தூத னாகப் பலித்தருள் பரனேபோற்றி
நீண்டவ னென்ன வேதம் நிகழ்த்துமா நிதியேபோற்றி
தாண்டவில்லாமலோங்குஞ்ஜோதிநல்விளக்கேபோற்றி
வேண்டவ ரெவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. 6

உ

அருட்பெருஞ்ஜோதி

நாமாவளி

அம்பலத் தரசே அரு மருந்தே
ஆனந்தத் தேனே அருள் விருந்தே. 1
பொதுநடத் தரசே புண்ணி யனே
புலவரெலாம் புகழ் கண்ணி யனே. 2
மலைதரு மகளே மட மயிலே
மதிமுக அமுதே இளங் குயிலே. 3
ஆனந்தக் கொடியே இளம் பிடியே
அற்புதத் தேனே மலை மானே. 4
சிவசிவ சிவசிவ சின்மய தேஜா
சிவசுந் தரகுஞ் சிதநட ராஜா. 5
நடன விவேக பரம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா. 6
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா. 7
அந்தண வங்கண அம்பர போகா
அம்பல நம்பர அம்பிகை பாகா. 8
அம்பர விம்ப சிதம்பர நாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா. 9

தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா. 10
கனக சிதம்பர கங்கர புரஹர
அனக பரம்பர சங்கர ஹரஹர. 11
சகல கலாண்ட சராசர காரண
சகுண சிவாண்ட பராபர பூரண. 12

இக்கரை கடந்திடில் அக்கரை யே
இருப்பது சிதம்பர சர்க்கரை யே. 13
என்னுயி ருடம்பொடு சித்தமதே
இனிப்பது நடராஜ புத்தமு தே. 14
ஐயர் திருச்சபை யாடக மே
ஆடுத லானந்த நாடக மே. 15
உத்தர ஞான சிதம்பர மே
சித்தியெ லாந்தரும் அம்பர மே. 16
அம்பல வாசிவ மாதே வா
வம்பல வாஇங்கு வாவா வா. 17
நடராஜன் எல்லார்க்கும் நல்லவ னே
நல்லவெல் லாஞ்செய வல்லவனே. 18
ஆனந்த நாடகங் கண்டோ மே பர
மானந்த போனகங் கொண்டோ மே. 19
சகள உபகள நிட்கள நாதா
உகள சததள மங்கள பாதா. 20

சந்தத முஞ்சிவ சங்கர பஜனம்
சங்கித மென்பது சற்சன வசனம் 21
சங்கர சிவசிவ மாதே வா
எங்களை யாட்கொள வாவா வா. 22
அரகர சிவசிவ மாதே வா
அருளமு தந்தர வாவா வா. 23
நடன சிகாமணி நவமணி யே
திடனக மாமணி சிவமணி யே. 24
நடமிடு மம்பல நன்மணி யே
புடமிடு செம்பல பொன்மணியே. 25
உவட்டாது சித்திக்கும் உள்ளம தே
தெவிட்டாது தித்திக்குந் தெள்ளமு தே. 26
நடராஜ வள்ளலை நாடுத லே
நற்றொழி லாம்விளை யாடுத லே. 27
அருட்போது நடமிடு தாண்டவ னே
அருட்பெருஞ் ஜோதியென் ஆண்டவ னே. 28
நடராஜ மாணிக்கம் ஒன்றது வே
நண்ணுத லாணிப்பொன் மன்றது வே. 29
நடராஜ பலமது நம் பல மே
நடமாடு வதுதிரு அம்பல மே. 30
நடராஜர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பாட்டு. 31

சிதம்பரப் பாட்டே திருப் பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாந் தெருப் பாட்டு. 32
அம்பலப் பாட்டே அருட் பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட் பாட்டு. 33
அம்பல வாணனை நாடின னே
அவனடி யாரொடுங் கூடின னே. 34
தம்பத மாம்புகழ் பாடின னே
தந்தன வென்றுகூத் தாடின னே. 35
நான்சொன்ன பாடலுங் கேட்டா ரே
ஞான சிதம்பர நாட்டா ரே. 36
இனித்துயர் படமாட்டேன் விட்டே னே
என்குரு மேலாணை யிட்டே னே. 37
இனிப்பாடு படமாட்டேன் விட்டே னே
என்னப்பன் மேலாணை யிட்டே னே. 38
சன்மார்க்கம் நன்மார்க்கம் நன் மார்க்கம்
சகமார்க்கர் துன்மார்க்கந் துன் மார்க்கம். 39
நாதாந்த நாட்டுக்கு நாயக ரே
நடராஜ ரேசபா நாயக ரே. 40
நான் சொல்லும் இதுகேளீர் சத்தியமே
நடராஜ வெனில் வரும் சித்தியமே. 41
நல்லோ ரெல்லார்க்குஞ் சபா பதியே
நல்வர மீயுந் தயா நிதியே. 42

நடராஜர் தன்னடம் நன்னட மே
நடம்புரி கின்றதும் என்னிட மே. 43
சிவகாம வல்லியைச் சேர்ந்தவ னே
திருவாள னானவன் சீர்ப்பிள்ளை யே. 44
சிவகாம வல்லியைச் சேர்ந்தவ னே
சித்தெலாஞ் செய்திடத் தேர்ந்தவ னே. 45
இறவா வரந்தரும் நற்சபை யே
எனமறை புகழ்வது சிற்சபை யே. 46
என்னிரு கண்ணுள் இருந்தவ னே
இறவா தருளும் மருந்தவ னே. 47
சிற்சபை யப்பனை யுற்றே னே
சித்தி யெலாஞ் செயப் பெற்றேனே. 48
அம்பல வாணர்தம் அடியவ ரே
அருளர சாள்மணி முடியவ ரே 49
அருட்பெருஞ் ஜோதியைக் கண்டே னே
ஆனந்தத் தெள்ளமு துண்டே னே. 50
இருட்பெரு மாயையை விண்டே னே
எல்லாஞ்செய் சித்தியைக் கொண்டே னே. 51
புத்தந்தரும் போதா வித்தந்தருந் தாதா
நித்தந்தரும் பாதா சித்தந்திரும் பாதா 52
போகஞ் சுகபோகஞ் சிவபோகம் அதுநித்யம்
ஏகஞ் சிவமேகஞ் சிவமேகம் இதுசத்யம். 53

நலமங்கல முறுமம்பல நடனம்அது நடனம்
பலநன்கருள் சிவசங்கர படனம் அது படனம். 54
சூதுமன்னு மிந்தையே சூடலென்ன விந்தையே
கோதுவிண்ட சிந்தையே கோயில்கொண்ட தந்தையே.
அன்புமுந்து சிந்தையே அம்பலங்கொள் விந்தையே
இன்பமென்புன் எந்தையே எந்தைதந்தை தந்தையே.
ஞானசித்தி புரத்தனே நாதசத்தி பரத்தனே
வானமுத்த தரத்தனே வாதவித்தை வரத்தனே. 57
நீயென் அப்பனல்லவா நினக்கும்இன்னஞ் சொல்லவா
தாயின்மிக்க நல்லவா சர்வசித்தி வல்லவா. 58
அஞ்சலஞ்ச லென்றுவந்தென் நெஞ்சமர்ந்த குழகனே
வஞ்சநஞ்ச முண்டகண்ட மன்றுள்நின்ற அழகனே. 59
தொண்டர்கண்டு கண்டுமொண்டு கொண்டுளுண்ட இன்பனே, அண்டரண்டம் உண்டவிண்டு தொண்டு மண்டும் அன்பனே. 60
உரியதுரிய பெரியவெளியில் ஒளியிலொளிசெய் நடன
பிரியவரிய பிரியமுடைய பெரியரிதய படனனே. [னே
அகிலபுவன வுயிர்கள் தழைய அபயமுதவும் அமலனே
அயனுமரியும் அரனுமகிழ அருளும்நடன விமலனே 62
நினைக்கில்நெஞ்சம் இனிக்குமென்ற நிருத்தமன்றில் ஒருத்தனே, நினைக்குமன்பர் நிலைக்கநின்று பொருத்து கின்ற கருத்தனே. 63

மயங்கிநெஞ்சு கலங்கிநின்று மலங்கினேனை ஆண்டவா
வயங்கிநின்று துலங்குமன்றில் இலங்குஞான தாண்டவா
நடுந்நமலந்தைக் கெடுத்துநலத்தைக் கொடுத்தகருணைத் தந்தையே, தனித்தநிலத்தில் இனித்தருலத்திற் குனித்த வடிசொன் எந்தையே. 65

நடுநாடி நடுநாடி நடமாடு பதியே
நடராஜ நடராஜ நடராஜ நிதியே. 66
நடுநாடி யிடைநாடி நடமாடு நலமே
நடராஜ நடராஜ நடராஜ பலமே. 67
நடுநாடி யொடுகூடி நடமாடு முருவே
நடராஜ நடராஜ நடராஜ குருவே. 68

கண்ணிகள்

கற்றதென்றுஞ் சாகாத கல்வியென்று கண்டுகொண்டேன்
அற்புதசிற் றம்பலத்தில் அன்புவைத்தேன் ஐயாவே. 1
ஈடணைகள் நீக்கிஎமக் கின்பளிக்கும் என்றுமன்றில்
ஆடுந் திருவடிக்கே ஆசைவைத்தேன் ஐயாவே.
நானந்த மெய்தா நலம்பெறவே எண்ணிமன்றில்
ஆனந்த நாடகத்துக் கன்புவைத்தேன் ஐயாவே. 3
வாடலறச் சாகா வரங்கொடுக்கும் என்றுமன்றில்
ஆடலடிப் பொன்மலர்க்கே அன்புவைத்தேன் ஐயாவே 4

பொற்புறவேபொன்ருப்பொருளளிக்கும்என்றுமன்றில்
அற்புதப்பொற்சேவடிக்கே அன்புவைத்தேன்ஐயாவே

ஈனமறுத் தென்றும் இறவாமை நல்குமென்றே
ஞானமணி மன்றிடத்தே நண்புவைத்தேன் ஐயாவே.

ஓர்துணை நின்பொன்னடியென் றுன்னுகின்றேனுன்னை
யன்றியார்துணையும்வேண்டேனென் அன்புடையஐயாவே

இச்சைநின்மே லன்றியெனக் கெள்ளளவும்வேறுமொ
ன்றில், இச்சையிலை நின்னாணை யென்னருமை ஐயாவே

எப்படி நின்னுள்ளம் இருக்கின்றதென்னளவில்
அப்படிநீசெய்கவெனக் கன்புடைய ஐயாவே. 9

எவ்வண்ணம் நின்கருத்திங் கென்னளவில் எண்ணிய
தோ, அவ்வண்ணஞ்செய்கவெனக்கன்புடைய ஐயாவே

தேசுறுநின் றண்ணருளாந்தெள்ளமுதம்கொள்ளவுள்ளே,
ஆசைபொங்குகின்றதெனக்கன்புடைய ஐயாவே. 11

நாசமிலா நின்னருளாம் ஞானமருந் துண்ணவுள்ளே
ஆசைபொங்குகின்றதெனக் கன்புடைய ஐயாவே. 12

கீர்த்தனை

எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்னபொ
ருத்தமோ, இந்தப் பொருத்தம் உலகில் பிறருக்
கெய்தும் பொருத்தமோ. 1

தனக்கு நிகரிங் கில்லா துயர்ந்த தம்ப மொன்றதே
தாவிப் போகப் போக நூலின் தரத்தில் நின்றதே
கனக்கத் திகைப்புற் றங்கே நானுங் கலங்கி வருந்தவே
கலக்க நீக்கித் தூக்கி வைத்தாய் நிலைபொருந்தவே. 2

அப்பா நின்னை யன்றி யெங்கும் அணைப்பா ரில்லையே
அந்தோ நின்னை யன்றி யெங்கும் அருள்வா ரில்லையே
எப்பா லவர்க்கு நின்னை யன்றி யிறைமை யில்லையே
எனக்கு நின்மே லன்றியுலகில் இச்சை யில்லையே. 3

நினைக்கநினைக்கத்தித்திப்பெனது நினைவிற்கொடுக்குதே
நின்பாலன்றிப்பிறர்பாற்செல்லநெஞ்சநடுக்குதே, எனைத்
தான்பொழித்தாட்கொண்டநின்னையன்னையென்பனோ
எந்தா யன்பி லேனின் னடிக்குமுன்னை யன்பனோ. 4

கடைய நாயிற் கடைய நாய்க்குங் கடையனாயினேன்
கருணை யமுதுண் டின்ப நாட்டிற் குடையனாயினேன்
விடயக் காட்டி லோடித் திரிந்த வெள்ளைநாயினேன்
விமலா நினக்கு மிகவும் சொந்தப்பிள்ளையாயினேன். 5

அடிய னாக்கிப் பிள்ளை யாக்கி நேய னாக்கியே
அடிக ளாக்கிக் கொண்டா யென்னை யவலநீக்கியே

படியு ளோரும் வானு ளோரும் இதனை நோக்கியே
பதியுமோர வார னென்பர் பரிவு தேக்கியே. 6

பாட்டா லுனது பதத்தை நாடிப் பாடும் வாயரே
பதியே யிந்த வுலகி லெனக்கு மிகவு நேயரே
நாட்டா ரெனினு நின்னை யுளத்து நாட்டா ராயிலோ
நயவேன்சிறிதும் நயத்கல் கயக்குமெட்டிக் காயிலோ.
ஜோதி யெவையும் விளங்க விளக்குஞ் ஜோதிவாழியே
திரிய வெளியில் நடுநின் றோங்குஞ் ஜோதிவாழியே
சூதி லாமெய்ச் சிற்றம் பலத்து ஜோதிவெல்கவே
திலங்கப் பொன்னம்பலத்தி லாடுஞ் ஜோதிவெல்கவே
சுத்த சிவ‌சன் மார்க்க நீதி ஜோதி போற்றியே
சுகவாழ் வளித்த சிற்றம் பலத்து ஜோதி போற்றியே
சுத்த சுடர்ப்பொற் சபையிலாடுஞ் ஜோதி போற்றியே
ஜோதி முழுதும்விளங்க விளக்குஞ் ஜோதிபோற்றியே.

---

1. வாரீர் சிதம்பர வல்லி சிவகாம
வல்லி மணாளரே வாரீர்—மணிமன்ற வாணரே வாரீர்.
2. அருட்பெருஞ் ஜோதி யென் ஆண்டவ ரேதிரு
அம்பலவாணரே வாரீர்—அன்புடை யாளரே வாரீர்
3. அச்சந் தவிர்த்தென்னை ஆட்கொண் டருளிய
அந்தணரேயிங்குவாரீர்—அம்பலத்தையரேவாரீர்

4. அன்புரு வானவர் இஃபுற வுள்ளே
அறிவுரு வாயினீர் வாரீர்.அருட்பெருஞ் ஜோதியீர்வாரீர்
5. அண்டங்க ளெல்லாம் அணுவி லடக்கும்
அரும்பெருஞ்சித்தரேவாரீர்—அற்புதரேயிங்குவாரீர்.
6. அம்மையு மாயெனக் கப்பனு மாகியென்
அன்பனு மாயினீர் வாரீர்—அங்கண ரேயிங்கு வாரீர்.
7. அல்ல லறுத்தென் அறிவை விளக்கிய
அம்பலவாணரே வாரீர்—செம்பொருளாயினீர்வாரீர்
8. அப்பணி பொன்முடி அப்பனென் றேத்துமெய்
அன்பருக்கன்பரே வாரீர்—இன்பந் தரவிங்கு வாரீர்.
9. அச்சுதர் நான்முகர் உச்சியில் மெச்சும்
அடிக்கம லத்திரே வாரீர்—நடிக்கவல் லீரிங்கு வாரீர்.
10. அண்டர்க் கரும்பதந் தொண்டர்க் கெளிதில் [வாரீர்
அளித்திடவல்லீரே வாரீர்—களித்தென்னை யாண்டீரே
11. அம்பர மான சிதம்பர நாடகம்
ஆடவல்லீ ரிங்கு வாரீர்—பாடவல்லீ ரிங்கு வாரீர்.
12. கண்ணனை யீ ரும்மைக் காணவென் னாசைக்
கடல்பொங்குகின்றதுவாரீர்-உடல்தங்குகின்றதுவாரீர்.
13. கண்டனந் தாலன்றிக் காதலடங்காதென்
கண்மணியீ ரிங்கு வாரீர்—உண்மணியீ ரிங்கு வாரீர்.
14. கட்டிக்கொண் டும்மைக் கலந்துகொளல் வேண்டும்
காரணரே யிங்கு வாரீர்—பூரணரே யிங்கு வாரீர்.

ஜோதியுட் ஜோதியட் ஜோதி—சுத்த
ஜோதி சிவஜோதி ஜோதியுட் ஜோதி. ஜோதி

1. சிவமே பொருளென்று தேற்றி—என்னைச்
சிவவெளிக் கேறஞ் சிகரத்தி லேற்றி
சிவமாக்கிக் கொண்டது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

2. விந்தெல்லா மொன்றென்று நாட்டி—அதில்
விளைவு பலபல வேறென்று காட்டி
சித்தெல்லாந் தந்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

3. சொல்வந்த அந்தங்க ளாறும்—ஒரு
சொல்லாலே ஆமென்றச் சொல்லாலே வீறும்
செல்வம் கொடுத்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

4. தங்கோ லளவெனக் கோதிச்—சுத்த
சமரச சத்திய சன்மார்க்க நீதிச்
செங்கோ லளித்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

5. ஆபத்தை நீக்கி வளர்த்தே—சற்றும்
அசையாமல் அவியாம லடியே னுளத்தே
தீபத்தை வைத்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

6. என்பால் வருபவர்க்கின்றே—அருள்
ஈகின்றேன் ஈகின்றேன் ஈகின்றே னென்றே
தென்பா லிருந்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

7. எம்பொரு ளெம்பொரு ளென்றே—சொல்லும்
எல்லாச் சமயத்துள் எல்லார்க்கும் ஒன்றே
செம்பொரு ளென்பது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

8. சைவம் முதலாக நாட்டும்—பல
சமயங்க ளெல்லாந் தனித்தனிக் காட்டுந்
தெய்வ மிதுவந்து பாரீர்—திருச
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

9. பேருல கெல்லா மதிக்கத்—தன்
பிள்ளையென் றென்னைப் பெயரிட் டழைத்தே
சீருறச் செய்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

அஞ்சாதே நெஞ்சே—அஞ்சாதே அஞ்

1. வஞ்சமி லார்நாம் வருந்திடி லப்போதே
அஞ்சலென் பாரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்

2. துய்ய ருட்பெருஞ் ஜோதியார் நம்முடை
அய்ய ரிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்

3. மண்ணில் நமையாண்ட வள்ளலார் நம்முடை
அண்ண லிதோதிரு அப்பலத் திருக்கின்றார். அஞ்

4. இப்புவி யில்நம்மை யேன்றுகொண் டாண்டநம்
அப்ப ரிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்

5. சித்த ரெலாம் வல்ல தேவர் நமையாண்ட
அத்த ரிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்

6. ஜோதி அருட்பெருஞ் ஜோதியார் நம்முடை
ஆதி யிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்

7. தாண்டவ னாரெனைத் தான்தடுத் தாட்கொண்ட
ஆண்டவ னாரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்

8. வன்பர் மனத்தை மதியா தவர்நம
தன்ப ரிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்

9. நம்மையாட் கொள்ள நடம்புரி வார்நம
தம்மையி னோடிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்

10. பாடுகின் றார்க்கருள் பண்பினர் ஞானக்கூத்
தாடுகின்றா ரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்

11. நீளவல் லார்க்குமேல் நீளவல்லார் நம்மை
ஆளவல்லா ரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்

நல்ல மருந்திம் மருந்து—சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து. நல்ல

1. அருள்வடி வான மருந்து—நம்முரு
அற்புத மாக அமர்ந்த மருந்து
இருளற வோங்கும் மருந்து—அன்பர்க்
கின்புரு வாக இருந்த மருந்து. நல்ல

2. சஞ்சலந் தீர்க்கும் மருந்து—எங்குந்
தானேதா னாகித் தழைக்கும் மருந்து
அஞ்சலென் றாளும் மருந்து—சச்சி
தானந்த மாக அமர்ந்த மருந்து. நல்ல

3. வித்தக மான மருந்து—சதுர்
வேத முடிவில் விளங்கும் மருந்து
தத்துவா தீத மருந்து—என்னைத்
தானாக்கிக் கொண்ட தயாள மருந்து. நல்ல

4. பிறப்பை யொழிக்கும் மருந்து—யார்க்கும்
பேசப் படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கும் மருந்து—என்னுள்
என்றும் மதுரித் தினிக்கும் மருந்து. நல்ல

5. நானது வாகும் மருந்து—பர
ஞான வெளியில் நடிக்கும் மருந்து
மோனவடி வாம் மருந்து—ஜீவன்
முத்த ருளத்தே முடிக்கும் மருந்து நல்ல

6. புத்தமு தாகும் மருந்து—பார்த்த
போதே பிணிகளைப் போக்கும் மருந்து
பத்த ரருந்தும் மருந்து—அனு
பானமுந் தானும் பரம மருந்து. நல்ல

7. மாலயன் தேடும் மருந்து—முன்னம்
மார்க்கண்ட ரைக்காக்க வந்த மருந்து
காலனைச் சாய்த்த மருந்து தேவர்
காணுங் கனவினுங் காண மருந்து நல்ல

8. புண்ணியர்க் கான மருந்து—பரி
பூரண மாகப் பொருந்தும் மருந்து
எண்ணிய இன்ப மருந்து—எம
தெண்ணமெல் லாமுடித் திட்ட மருந்து. நல்ல

9. செல்வந் தழைக்கும் மருந்து—என்றுந்
தீரா வினையெலாந் தீர்த்த மருந்து
நல்வந் தனைகொள் மருந்து—பர
நாதாந்த வீட்டினும் நண்ணு மருந்து. நல்ல

10. வாய்பிடி யாத மருந்து—மத
வாதமும் பித்தமும் மாய்க்கும் மருந்து
நோய்பொடி யாக்கும் மருந்து—அன்பர்
நோக்கிய நோக்கினுள் நோக்கும் மருந்து. நல்ல

11. பெண்ணாசை தீர்க்கும் மருந்து—பொருள்
பேராசை யெல்லாம் பிளக்கும் மருந்து
மண்ணாசை தீர்க்கும் மருந்து—எல்லாம்
வல்ல மருந்தென்று வாழ்த்தும் மருந்து. நல்ல

12. என்றுங் கெடாத மருந்து—வரும்
எல்லாப் பிணிக்கும் இதுவே மருந்து
துன்றுஞ் சிவோக மருந்து நம்மைச்
சூழ்ந்திரு மைக்குந் துணையா மருந்து. நல்ல

13. மறந்தா லொளிக்கும் மருந்து—தன்னை
மறவா தவருள் வழங்கும் மருந்து
இறந்தா லெழுப்பும் மருந்து—எனக்
கென்றுந் துணையா யிருக்கும் மருந்து. நல்ல

14. கரும்பி னினிக்கும் மருந்து—கடுங்
கண்டகர்க் கெல்லாங் கசக்கும் மருந்து
இரும்பைக் குழைக்கும் மருந்து—பே
ரின்ப வெள்ளத்தே யிழுக்கும் மருந்து. நல்ல

15. மூவர்க் கரிய மருந்து—செல்வ
முத்துக் குமாரனை யீன்ற மருந்து
நாவிற்கினிய மருந்து—ஐய
னுயகி கண்டு தழுவு மருந்து. நல்ல

—:o:—

கண்ணிகள்

1. அம்பலத்தி லாடுகின்றார் பாங்கிமாரே—அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கிமாரே.
2. ஆடுகின்ற சேவடிமேற் பாங்கிமாரே—மிக
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமாரே.
3. இன்பவடி வாய்ச்சபையிற் பாங்கிமாரே—நடம்
இட்டவர்மே லிட்டம் வைத்தேன் பாங்கிமாரே.
4. ஈனவுடற் கிச்சைவையேன் பாங்கிமாரே—நட
னேசர்நமை யெய்தும்வண்ணம் பாங்கிமாரே.
5. உத்தமர்போ னம்பலத்தே பாங்கிமாரே—இன்ப
உருவாகி ஓங்குகின்றார் பாங்கிமாரே.
6. ஊனவுல கைக்கருதேன் பாங்கிமாரே—மன்றில்
உத்தமருக் குறவாவேன் பாங்கிமாரே.
7. கற்பனையெல் லாங்கடந்தார் பாங்கிமாரே—என்றன்
கற்பனைக்குட் படுவாரோ பாங்கிமாரே.
8. கண்டிலர்நான் படும்பாடு பாங்கிமாரே—மூன்று
கண்ணுடையா ரென்பாரையோ பாங்கிமாரே.
9. கன்மனமெல் லாங்கரைப்பார் பாங்கிமாரே—மனங்
கரையாரென் னளவிலே பாங்கிமாரே.
10. கள்ளமொன்று மறியேனென் பாங்கிமாரே—என்னைக்
கைவிடவுந் துணிவாரோ பாங்கிமாரே

11. குற்றமொன்றுஞ் செய்தறியேன் பாங்கிமாரே—
என்னைக், கொண்டுகுலம் பேசுவாரோ பாங்கிமாரே.
12. குஞ்சிதப்போற் பாதங்கண்டாற் பாங்கிமாரே—
உள்ள குறையெல்லாந் தீருங்கண்டீர் பாங்கிமாரே.
13. கூற்றுதைத்த பாதங்கண்டீர் பாங்கிமாரே—எங்
கள் குடிக்கெல்லாங் குலதெய்வம் பாங்கிமாரே.
14. கூடல்விழைந் தேனவரைப் பாங்கிமாரே—
அது கூடும்வண்ணங் கூட்டிடுவீர் பாங்கிமாரே.

வெண்ணிலா

தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே—ஒரு
தந்திரஞ் சொல்லவேண்டும் வெண்ணிலாவே. 1
நாதமுடி மேலிருந்த வெண்ணிலாவே—அங்கே
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 2
சச்சிதா னந்தக்கடலில் வெண்ணிலாவே—நானுந்
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 3
இராப்பகலில் லாவிடத்தே வெண்ணிலாவே—நானும்
இருக்க வெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே.
தேசுநிற மாய்நிறைந்த வெண்ணிலாவே—நானுஞ்
சிவமயம தாய்விழைந்தேன் வெண்ணிலாவே. 5
போதநடு வூடிருந்த வெண்ணிலாவே—மலப்
போதமற வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 6

ஆ.நமரி யாமலிங்கே வெண்ணிலாவே—அரு
ளாளர்வரு வாரோ சொல்லாய் வெண்ணிலாவே. 7
அந்தரங்க சேவைசெய்ய வெண்ணிலாவே—எங்கள்
அய்யர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலாவே. 8
வேதமுடி மேலிருந்த வெண்ணிலாவே—மல
வேதைபுள வேதுசொல்லாய் வெண்ணிலாவே. 9
குண்டலிப்பால் நின்றிலங்கும் வெண்ணிலாவே—அந்த
குண்டலிப்பால் வேண்டுகின்றேன் வெண்ணிலாவே.

நடேசர் கொம்மி

கொம்மியடிப் பெண்கள் கொம்மியடி—இரு
கொங்கை குலுங்கவே கொம்மியடி
நம்மை யாளும்பொன்னம்பலவாணனை [யடியுங்கடி
நாடிக் கொம்மி யடியுங்கடி—பதம்—பாடிக்—கொம்மி

1. காம மகற்றிய தூயனடி—சிவ
காம சௌந்தரி நேயனடி
மாமறை யோதுசெவ் வாயனடி—மணி
மன்றெனு ஞானவா காயனடி (கொம்)

2. ஆனந்தத் தாண்டவ ராஜனடி—நம்மை
ஆட்கொண் டருளிய தேஜனடி
வானந்த மாமலை மங்கைமகிழ்—வடி
வாளனடி மணவாளனடி (கொம்)

3. கல்லைக் கனிவிக்குஞ் சுத்தனடி—முடி
கங்கைக் கருளிய கர்த்தனடி
தில்லைச் சிதம்பர சித்தனடி—தேவ
சிங்கமடி உயர் தங்கமடி. (கொம்)

4. பெண்ணொரு பால்வைத்த மத்தனடி—சிறு
பிள்ளைக் கறிகொண்ட பித்தனடி
நண்ணி நமக்கருள் அத்தனடி—மிக
நல்லனடி யெல்லாம் வல்லனடி. (கொம்)

5. அம்பலத் தாடல்செய் ஐயனடி—அன்ப
ரன்புக் கெளிதரும் மெய்யனடி
தும்பை முடிக்கணி தூயனடி—சுயஞ்
ஜோதியடி பாஞ் ஜோதியடி. (கொம்)

நடேசர் கீர்த்தனை

தெண்டலிட்டே னென்று சொல்லடி—சுவாமிகருநான்
தண்டலைவிளங்குந்தில்லைத்தலத்திற்பொன்னம்பலத்தே
கண்டவர் மயங்கவேடம் கட்டியாடு கின்றவர்க்கு (தெ)

1 கற்பூரவாசம்வீசும் பொற்பாந் திருமுகத்தே
கனிந்த புன்னகையாடக் கருணைக் கடைக்கணாட
அற்பார்பொன் னம்பலத்தே ஆனந்தத் தாண்டவம்
ஆடிக்கொண்டே யென்னை ஆட்டங்கண்டாருக்கு

2 இழிந்தாலு நம்மையிங்கே யேற்றுவா ரென்றடைந்தால்
ஏற்றுவார்போலேபின்னும் இழியவைப்பாருக்குப்
பழந்தா னழுவிமெல்லப் பாலில் விழுந்ததென்னப்
பசப்பிப் பசப்பியன்பர்பண்டம்பறிப்பவர்க்கு (தெ)

3 சுட்டதிருநீறுபூசித் தொங்தோமென் றுடுவார்க்குத்
தோன்று, லை மாலையணிதோள்விளங்க வருவார்க்குப்
பிட்டுக்காசைப் பட்டுமாறன் பிரம்படி பட்டவர்க்குப்
பிள்ளைக்கறிக் காசைகொண்ட கள்ளத்தவவேடருக்கு

4 வாழ்ந்தாரை மேன்மேலும் வாழச்செய் பவருக்கு
மாசுபறித் தவர்கையிற் காசுபறிக் கின்றவர்க்குத்
தாழ்ந்தாரை யடிக்கடி தாழக் காண்பவருக்குத்
தாளுகி நாளுகித் தனியேநின் றவருக்கு. தெ

5 ஆதியந்தம் நடுவில்லா ஆனந்த நாடருக்கு
அண்டருயிர் காத்தமணி கண்ட சசி கண்டருக்கு
ஜோதிமய மாய்விளங்குந் தூயவடி வாளருக்கு தொண்
டர்குடி கெடுக்கவே துஜங்கட்டிக் கொண்டவர்க்கு.

6 பாட்டுக்காசைப் பட்டுமுன்னம் பரவைதன் வாயிலிற்
போய்ப், பண்புரைத்துத் தூதனென்றே பட்டங்
கட்டிக் கொண்டவர்க்கு, வீட்டுக்காசைப் படுவாரை
வீட்டைவிட்டுத் துரத்தியே, வேட்டாண்டி யா
யுலகில் ஓட்டாண்டி யாக்குவார்க்கு. (தெ)

7 தாய்வயிற்றில் பிறவாது தானே முளைத்தவர்க்கு
ஜாதிகுல மறியாது தாண்டவஞ்செய் கின்றவர்க்கு
ஏய தொழிலருளும் என்பிராண நாயகர்க்கு
ஏமாந்த வரையெல்லாம் ஏமாத்து மீசருக்கு. தெ

இன்னந் தயவுவர இலையா—உனக்கென்மீதில்
என்ன வர்மம் சொலை யா.

1. அன்னம்பாலிக்குந் தில்லைப்பொன்னம்பலத்திலாடும்
அரசே—அரசே—அரசே யென் றலரவும். இன்

2. சின்னஞ் சிறுவயதி லென்னை யடிமைகொண்ட
சிவமே—சிவமே—சிவமே யென் றலரவும். இன்

3 முன்னம்பிழைபொறுத்தாயின்னம் பொறுதுவிட்டால்
முறையோ-முறையோ-முறையோ வென்றலரவும். இ

4 தன்னை யறியாவென்னை இன்ன லுறச்செய்தாயே
தகுமோ—தகுமோ—தகுமோ—வென்றலரவும். இ

5 பண்டு மகிழ்ந்தென யாட் கொண்டு கருணைசெய்த
பரமே—பரமே—பரமே—யென்றலரவும் இன்

6 கொண்டு குலம்பேசுவா ருண்டோ வுலகிலெங்கள்
குருவே—குருவே—குருவே—வென் றலரவும். இ

சண்முகர் கொம்மி

குறவர் குடிசை நுழைந்தாண்டி—அந்தக்
கோமாட்டி யெச்சில் விழைந்தாண்டி
துறவர் வணங்கும் புகழாண்டி—அவன்
தோற்றத்தைப் பாடி யடியுங்கடி 1
மாமயி லேறி வருவாண்டி—அன்பர்
வாழ்த்த வரங்கள் தருவாண்டி
தீமையி லாத புகழாண்டி—அவன்
சீர்த்தியைப் பாடி யடியுங்கடி 2
பன்னிரு தோள்க ளுடையாண்டி—கொடும்
பாவிகள் தம்மை யடையாண்டி
என்னிரு கண்களனை யாண்டி—அவன்
ஏற்றத்தைப் பாடி யடியுங்கடி 3
வேங்கை மரமாகி நின்றாண்டி—வந்த
வேடர்தமை யெல்லாம் வென்றாண்டி
தீங்குசெய் சூரனைக் கொன்றாண்டி—அந்த
தீரனைப் பாடி யடியுங்கடி 4
சீர்திகழ் தோகை மயின்மேலே—இளஞ்
செஞ்சுடர் தோன்றுந் திறம்போலே
கூர்வடி வேல்கொண்டு நம்பெருமான்—வருங்
கோலத்தைப் பாருங்கள் கோதையர்காள் 5

ஆறு முகங்களிற் புன்சிரிப்பும்—இரண்
டாறு புயந்திக ழற்புதமும்
வீறு பஞ்சுடர் வண்ணமுமோர்—திரு
மேனியும் பாருங்கள் வெள்வளைகாள் 6

ஆனந்த மான வமுதனடி—பர
மானந்த நாட்டுக் கரசனடி
தானந்த மில்லாச் சதுரனடி—சிவ
சண்முக நங்குரு சாமியடி 7

வேதமுடி சொல்லு நாதனடி—சதுர்
வேதமுடி திகழ் பாதனடி
நாதவடிவுகொள் நீதனடி—பர
நாதங் கடந்த நலத்தனடி 8

தத்துவந் துள்ளே யடங்காண்டி—பர
தத்துவமன்றித் தடங்காண்டி
சத்துவ ஞான வடிவாண்டி—சிவ
சண்முக நாதனைப் பாடுங்கடி 9

சச்சிதா னந்த வுருவாண்டி—பர
தற்பர போகந் தருவாண்டி
உச்சிதா ழன்பர்க் குறவாண்டி—அந்த
உத்தம தேவனைப் பாடுங்கடி 10

அற்புத மான அழகனடி—துதி
அன்பர்க் கருள்செய் குழகனடி
சிற்பர யோகத் திறத்தனடி—அந்தச்
சேவகன் கீர்த்தியைப் பாடுங்கடி 11

சைவந் தழைக்கத் தழைத்தாண்டி—ஞான
சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண்டி.
பொய்வந்த வுள்ளத்திற் போகாண்டி—அந்த
புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி 12

வாசி நடத்தித் தருவாண்டி—ஒரு
வாசியி லிங்கே வருவாண்டி
ஆசில் கருணை யுருவாண்டி—அவன்
அற்புதத் தாண்மல ரேத்துங்கடி 13

இராப்பக லில்லா விடத்தாண்டி—அன்பர்
இன்ப வுளங்கொள் நடத்தாண்டி
அராப்பளி யீந்த திடத்தாண்டி—அந்த
அண்ணலைப் பாடி யடியுங்கடி 14

ஒன்றிரண் டான வுளவாண்டி—அந்த
ஒன்றிரண் டாகா வுளவாண்டி
மின்றிரண் டன்ன வடிவாண்டி—அந்த
மேலவன் கீர்த்தியைப் பாடுங்கடி 15

இராகம்-கல்யாணி-அடதாளம்

பல்லவி

இதுநல்ல தருணம்—அருள் செய்ய (இது)

அநுபல்லவி

பொதுநல்ல நடம்வல்ல புண்ணியரே கேளும் (இது)
பொய்யேதுஞ் சொல்கிலேன் மெய்யே புகல்கின்றேன்

சரணங்கள்

மநிந்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது
வருணாச் சிரமமெனு மயக்கமுஞ் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
கொலையுங் களவுமற்றைப் புலையும் அழிந்தது இ

குறிந்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று
கொதித்த மனமுருட்டுக் குரங்கு முடங்கிற்று
வெறித்தவெவ் வினைகளும் வெந்து குலைந்தது
விந்தைசெய் கொடுமாயைச் சந்தையுங் கலைந்தது

கோபமுங் காமமும் குடிகெட்டுப் போயிற்று
கொடியவோ ராங்காரம் பொடிப்பொடி யாயிற்று
தாபமுஞ் சோபமுந் தான்றானே சென்றது
தத்துவ மெல்லாமென் றன்வச நின்றது இது

கரையா வெனதுமனக் கல்லுங் கரைந்தது
கலந்து கொளற்கென் கருத்தும் விரைந்தது
புரையா நிலையிலென் புந்தியுந் தங்கிற்று
பொய்படாக்காதல் ததும்பிமேற் பொங்கிற்று. இது

பல்லவி

வருவா ரழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம் நல்ல வரமே

அனுபல்லவி

திருவார்பொன் னம்பலத்தே செழிக்குங்குஞ்சிதபாதர்.
சிவசிதம் பரபோதர் தெய்வச் சபாநாதர் (வரு)

சரணங்கள்

சிந்தை களிக்கக்கண்டு சிவானந்த மதுவுண்டு
தெளிந்தோரெல்லாருந்தொண்டுசெய்யப்பவுரிகொண்டு
இந்த வெளியில்நடம் இடத்துணிந் தீரேயங்கே
இதைவிட்டப் பெருவெளி இருக்குதென் றலிங்கே (வ)
இடுக்கிலாமலிருக்க இடமுண்டு நடஞ்செய்ய, இங்கம்
பலமொன் றங்கேஎட்டம்பல முண்டைய, ஒடுக்கிலிருப்ப
தென்ன உளவுகண்டு கொள்வீரென்றால், உண்மையிது
வஞ்சமல்ல உன்மேலாணை யென்றுசொன்னால் (வரு)

மெல்லியல் சிவகாம வல்லி யுடன்களித்து
விளையா டவுமெங்கள் வினையோ டவுமொளித்து
எல்லையிலின் பந்தரவும் நல்லசம யந்தானிது
இங்குமங்கும் நடமாடி இருக்கலா மென்றபோது (வரு)

ஆடிய பாத மன்றாடிய பாதம்
ஆடிய பாத நின்றாடிய பாதம் (ஆ)

1 பாடிய வேதங்கள் தேடிய பாதம்
பத்திசெய் பத்தர்க்குத் தித்திக்கும் பாதம்
நாடிய மாதவர் நேடிய பாதம்
நாதாந்த நாட்டுக்கு நாயக பாதம் (ஆ)

2 தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்
தெய்வங்க ளெல்லாந் தெரிசிக்கும் பாதம்
வாராவரவாகி வந்த பொற் பாதம்
வஞ்ச மனத்தில் வசியாத பாதம் (ஆ)

3 ஆரா வமுதாகி அண்ணிக்கும் பாதம்
அன்பருளத்தே அமர்ந்தருள் பாதம்
நாரா யணன்விழி நண்ணியபாதம்
நான்புனை பாடல் நயந்த பொற்பாதம் (ஆ)

4 நல்லவ ரெல்லாம் நயக் கின்ற பாதம்
நாதமுடிவில் நடிக்கின்ற பாதம்

வல்லவர் சொல்லெல்லாம் வல்லபொற் பாதம்
மந்திர யந்திர தந்திர பாதம் (ஆ)

5 எச்சம யத்தும் இலங்கிய பாதம்
என்னுக்குள் எண்ணெய்போல் எங்குமாம் பாதம்
அச்சந் தவிர்த்தென்னை ஆட்கொண்ட பாதம்
ஆனந்த நாட்டுக் கதிபதி பாதம் (ஆ)

6 தேவர்க ளெல்லாருஞ் சிந்திக்கும் பாதம்
தெள்ளமு தாயுளந் தித்திக்கும் பாதம்
மூவருங் காணு முழுமுதற் பாதம்
முப்பாழுக் கப்பால் முளைத்த பொற்பாதம் (ஆ)

7 துரிய வெளிக்கே உரிய பொற்பாதம்
சுகமயமாகிய சுந்தரப் பாதம்
பெரிய பொருளென்று பேசும் பொற்பாதம்
பேறெல்லாந் தந்த பெரும்புகழ்ப் பாதம் (ஆ)

8 சாகா வரந்தந்த தாரக பாதம்
சச்சிதா னந்த சதோதய பாதம்
தேகாதி யெல்லாஞ் சிருட்டிக்கும் பாதம்
திதிமுதல் ஐந்தொழில் செய்கின்ற பாதம் (ஆ

9 ஓங்கார பீடத் தொளிர்கின்ற பாதம்
ஒன்று யிரண்டாகி ஓங்கிய பாதம்
தூங்காத தூக்கத்திற் றூக்கிய பாதம்
துரியத்தி னூன்றித் துலங்கிய பாதம் (ஆ)

10 அருட்பெருஞ்ஜோதியதாகிய பாதம்
அம்மையு மப்பனு மாகிய பாதம்
பொருட்பெரும் போகம் புணர்த்திய பாதம்
பொன்வண்ண மாகிய புண்ணிய பாதம் (ஆ)

பல்லவி

அற்புதம் அற்புதமே—அருள் (அற்)

சரணங்கள்

1 சிற்பதம் பொற்பதஞ் சேரே சிறந்தது
சித்தாடு கின்ற திருநாள் பிறந்தது
கற்பக நெஞ்சக் கரிசு துறந்தது
கற்றபொய்ந் நூல்கள் கணத்தே மறந்தது அற்

2 செந்தா ரெழுகின்ற திருநா ளடுத்தது
சிவநெறி யொன்றே எங்குந் தலை யெடுத்தது
இத்தா ரணிமுதல் வானு முடுத்தது
இறவா வரந்தா னெனக்குக் கொடுத்தது அற்

3 ஆனந்த நாடகம் ஆடுதல் சார்ந்தது
அடுத்த தருணம் இதுவாக நேர்ந்தது
ஈனந்த மாயை இருள்வினை சோர்ந்தது
என்னருட் ஜோதியென் உள்ளத்தி லார்ந்தது அற்

4 சந்திய ஞான சபையென்னுட் கண்டனன்
சன்மார்க்கசித்தியை நான்பெற்றுக்கொண்டனன்
நித்திய ஞான நிறையமு துண்டனன்
நிந்தை யுலகிமற் சந்தையை விண்டனன். அற்

5 வஞ்சக ரஞ்சினர் வாய்மூடிச் சென்றனர்
வந்து திரும்பவும் வாயிலில் நின்றனர்
தஞ்ச மெமமக்கருள் சாமிநீ யென்றனர்
சன்மார்க்க சங்கத் தவர்களே வென்றனர். அற்

6 புறங்கூறி னாரெல்லாம் புல்லெனப் போயினர்
பொற்படிக் கீழ்ப்புற மீளவு மேயினர்
மறங்கூறி னோமென்செய் வோமென்று கூயினர்
வாழிய வென்றசொல் வாயின ராயினர் அற்

7 வெவ்வினைக் காடெலாம் வேரோடு வெந்தது
வெய்ய மாமாயை விரிவற்று நொந்தது
செவ்விய ஞானஞ் சிறப்புற வந்தது
சித்திகள் யாவையுஞ் செய்திடத் தந்தது அற்

8 சாதி சமயச் சழக்கெலா மற்றது
சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது
மேதினி யிற்சாகா வித்தையைக் கற்றது
மெய்யருட்ஜோதி யென் னுள்ளத்தி லுற்றது. அற்

பல்லவி

ஆணிப்பொன் னம்பலத் தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி-அம்மா—அற்புதக்காட்சியடி

சரணங்கள்

1 ஜோதி மலையொன்று தோன்றிற் றதிலொரு
வீதியுண்டாச்சுதடி—அம்மா-வீதியுண்டாச்சுதடி ஆ

2 வீதியிற் சென்றேனவ் வீதி நடுவொரு
மேடை யிருந்ததடி—அம்மா-மேடை யிருந்ததடி ஆ

3 மேடை மேலேறினேன் மேடைமே லங்கொரு
கூடமிருந்ததடி—அம்மா-கூட மிருந்ததடி ஆ

4 கூடத்தை நாடவக் கூடமே லேழ்நிலை
மாடமிருந்ததடி—அம்மா—மாடமிருந்ததடி ஆ

5 ஏழ்நிலைக் குள்ளும் இருந்த அதிசயம் [ல்வனடி
என்னென்று சொல்வனடி-அம்மா-என்னென்று சொ

6 ஓர்நிலை தன்னில் ஒளிர்முத்து வெண்மணி
சீர்நீல மாச்சுதடி—அம்மா-சீர்நீல மாச்சுதடி ஆ

7 பாரோர் நிலையிற் கருநீலஞ் செய்ய
பவளம தாச்சுதடி—அம்மா—பவளம தாச்சுதடி ஆ

8 மற்றோர் நிலையில் மரகதப் பச்சைசெம்
மாணிக்க மாச்சுதடி—அம்மா-மாணிக்கமாச்சுதடி ஆ

9 பின்னோர் நிலையிற் பெருமுத்து வச்சிரப்
பேர்மணி யாச்சுதடி — அம்மா-பேர்மணியாச்சுதடி
10 வேறோர் நிலையில் மிகும்பவளத்திரள் வெண்மணி
யாச்சுதடி — அம்மா-வெண்மணி யாச்சுதடி ஆ
11 புகலோர் நிலையிற் பொருந்திய பன்மணி பொன்
மணியாச்சுதடி — அம்மா-பொன்மணி யாச்சுதடி
12 பதியோர் நிலையிற் பகர்மணி யெல்லாம்
படிகம தாச்சுதடி — அம்மா-படிகம தாச்சுதடி ஆ
13 எழ்நிலைமேலேயிருந்ததோர்தம்பம்இசைந்த பொற்
றம்பமடி — அம்மா-இசைந்த பொற் றம்பமடி ஆ
பொற்றம்பங் கண்டேறும் போதுநான் கண்டபுதுமை
யென், சொல்வனடி — அம்மா-புதுமையென்சொல்வனடி
15 வல்லபந் தாலந்த மா தம்பத் தேறி மணிமுடி
கண்டேனடி — அம்மா-மணிமுடி கண்டேனடி ஆ
16 மணிமுடி மேலோர் கொடிமுடி நின்றது
மற்றது கண்டேனடி — அம்மா-மற்றது கண்டேனடி
17 கொடிமுடி மேலாயி ரத்தெட்டு மாற்றுப்பொற்
கோயி லிருந்ததடி — அம்மா-கோயி லிருந்ததடி ஆ
18 கோயிலைக் கண்டங்கே கோபுர வாயிலில் கூசாது
சென்றேனடி — அம்மா-கூசாது சென்றேனடி ஆ
அம்மை யைக்கண்டேன் அவளருள் கொண்டேன் அமு
தமுமுண்டேனடி-அம்மா-அமுதமுமுண்டேனடி.

20 தாங்கும் அவளருளாலே நடராஜர்
சந்நிதிகண்டேனடி — அம்மா-சந்நிதிகண்டேனடி.
21 சந்நிதி யிற்சென்று நான்பெற்ற பேறது
சாமியறிவாரடி — அம்மா-சாமி யறிவாரடி ஆ

---

1 கைவிட மாட்டானென் றூதூது சங்கே
கனக சபையானென் றூதூது சங்கே
பொய்விடச் செய்தானென் றூதூது சங்கே
பூசை பலித்ததென் றூதூது சங்கே
2 தூக்கந் தொலைத்தானென் றூதூது சங்கே
துன்பந் தவிர்த்தானென் றூதூது சங்கே
எக்கங் கெடுத்தானென் றூதூது சங்கே
ஏம சபையானென் றூதூது சங்கே
3 பொன்னடி தந்தானென் றூதூது சங்கே
பொன்னம் பலத்தானென் றூதூது சங்கே
இன்ன லறுத்தானென் றூதூது சங்கே
என்றுள் அமர்ந்தானென் றூதூது சங்கே
4 அச்சந் தவிர்த்தானென் றூதூது சங்கே
அம்பல வாணனென் றூதூது சங்கே
இச்சையளித்தானென் றூதூது சங்கே
இன்பங் கொடுத்தானென் றூதூது சங்கே
5 என்னுயிர் காத்தானென் றூதூது சங்கே
இன்பம் பலித்ததென் றூதூது சங்கே

பொன்னுரு தந்தானென் றூதூது சங்கே
பொற்சபை யப்பனென் றூதூது சங்கே
6 சிவமாக்கிக் கொண்டானென் றூதூது சங்கே
சிற்றம் பலத்தானென் றூதூது சங்கே
நவநோக் களித்தானென் றூதூது சங்கே
நானவ னானேனென் றூதூது சங்கே
7 நாத முடியானென் றூதூது சங்கே
ஞான சபையானென் றூதூது சங்கே
பாத மளித்தானென் றூதூது சங்கே
பலித்தது பூசையென் றூதூது சங்கே
8 தெள்ளமு தானானென் றூதூது சங்கே
சிற்சபை யப்பனென் றூதூது சங்கே
உள்ளம் உவந்தானென் றூதூது சங்கே
உள்ள துரைத்தானென் றூதூது சங்கே
9 என்னறி வானானென் றூதூது சங்கே
எல்லாஞ்செய் வல்லானென் றூதூது சங்கே
செந்நிலை தந்தானென் றூதூது சங்கே
சிற்சபை யப்பனென் றூதூது சங்கே
10 இறவாமை யீந்தானென் றூதூது சங்கே
எண்ணம் பலித்ததென் றூதூது சங்கே
திறமை யளித்தானென் றூதூது சங்கே
சிற்றம் பலத்தானென் றூதூது சங்கே

4 ஈசனரு ளாற்கடலி லேற்றதொரு வோடம்
ஏறிக்கரை யேறினே னிருந்ததொரு மாடம்
தேசுறுமம் மாடநடுத் தெய்வமணிப் பீடம்
தீபவொளி கண்டவுடன் சேர்ந்தது சந்தோடம்
5 மேருமலை உச்சியில் விளங்குகம்ப நீட்சி
மேவுமதன் மேலுலகில் வீறுமர சாட்சி
சேருமதிற் கண்டபல காட்சிகள்கண் காட்சி
செப்பலரி தாமிதற்கென் அப்பனருள் சாட்சி
6 துரியமலை மேலுளதோர்ஜோதிவள நாடு
தோன்றுமதில் ஐயர்நடஞ் செய்யுமணி வீடு
தெரியுமது கண்டவர்கள் காணிலுயி ரோடு
செத்தாரெழுவாரென்று கைத்தாளம் போடு
7 சொல்லால் அளப்பரிய ஜோதிவரை மீது
தூயதுரி யப்பதியில் நேயமறை யோது
எல்லாஞ்செய் வல்லசித்தர் தம்மையுறும் போது
இறந்தா ரெழுவாரென்று புறந்தாரை யூது
8 சிற்பொதுவும் பொற்பொதுவும் நானறிய லாச்சு
சித்தர்களும் முத்தர்களும் பேசுவதென்பேச்சு
இப்பெரிய இவ்வுலகில் என்னையினி யேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றோடே போச்சு
9 வலதுசொன்னபேர்களுக்குவந்ததுவாய்த்தாழ்வு
மற்றவரைச் சேர்ந்தவர்க்கும்வந்ததலைத்தாழ்வு

[illegible] பெறும் ஆடநம்பால் வந்தருள் வாழ்வு
மற்றநமைச் சூழ்ந்தவர்க்கும் வந்ததுநல்வாழ்வு
10 அம்பலத்தில் எங்களைய னாடியநல் லாட்டம் [ம்
அன்பொடு துதித்தவருச் கானதுசொல்லாட்ட
வம்புசொன்ன பேர்களுக்கு வந்ததுமல் லாட்டம்
வந்ததலை யாட்டமன்றி வந்தது பல்லாட்டம்
11 நாத்திகஞ் சொல்கின்றவர்தம் நாக்குமுடைநாக்கு
நாக்குருசி கொள்ளுவது நாறியபிண் ணாக்கு
சீர்த்திபெறும் அம்பலவர் சீர்புகன்ற வாக்கு
செல்வாக்கு நல்வாக்கு தேவர்திருவாக்கு

—o—

வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில்குயி லாச்சுதடி—அக்கச்சி
மயில்குயி லாச்சுதடி. 1
துள்ளலை விட்டுத் தொடங்கினேன் மன்றாடும்
வள்ளலைக் கண்டேனடி—அக்கச்சி
வள்ளலைக் கண்டேனடி. 2
ஜாதி சமயச் சழக்கைவிட் டேனருட்
ஜோதியைக் கண்டேனடி—அக்கச்சி
ஜோதியைக் கண்டேனடி. 3
[illegible]பட்டேன் மன்றாடும்
ஐயரைக் கண்டேனடி—அக்கச்சி
ஐயரைக் கண்டேனடி. 4

ஆடேடி பந்து ஆடேடி பந்து
ஆடேடி பந்து ஆடேடி பந்து

வாழியென் தோழி யென்வார்த்தை கேளென்றும்
மரண மில்லாவரம் நான்பெற்றுக் கொண்டேன்
சூழியற் செஞ்சுடர் தோற்றுறு கீழ்பாற்
றாய்த்திசை நோக்கினேன் சீர்த்திகை சித்தி
ஊழிதோ றூழிநின் றுடுவன் நீயும்
உன்னுதி யேலிங்கே மன்னரு ளாணை
ஆழி காத்தணிந் தாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆ 1

இசையாமற் போனவ ரெல்லாரு நாண
இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன்
வசையாது மில்லாத மேற்றிசை நோக்கி
வந்தேனென் றோழிநீ வாழிகாண் வேறு
நசையாதே யென்னுடை நண்பது வேண்டில்
நன்மார்க்க மாஞ்சுத்த சன்மார்க்கந் தன்னில்
அசையாமல் நின்றிங்கே ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆ 2

இன்பாலே யுலகத்தா ரெல்லாருங் காண
இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன்
தென்பாலே நோக்கினேன் சித்தாடு கின்ற
திருநா ளிதுதொட்டுச் சேர்ந்தது தோழி

தன்பாலே யசைந்தது நீக்கியென் னோடே
  சுத்தசன் மார்கத்தி லொத்தவ ளாகி
அன்பாலே யறிவாலே ஆடேடி பந்து
  அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து ஆ 3

சதுமறை யாகம சாத்திர மெல்லாஞ்
  சந்தைப் படிப்புநஞ் சொந்தப் படிப்போ
விதுநெறி சுத்தசன் மார்க்கத்திற் சாகா
  வித்தையைக் கற்றன னுத்தர மெனுமோர்
பொதுவளர் திசைநோக்கி வந்தன னென்றும்
  பொன்றாமை வேண்டிடி லென்றோழி நீதான்
அதுவிது வென்னும லாடேடி பந்து
  அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆ 4

தப்பாலே சகத்தவர் சாவே துணிந்தார்
  தாமுள நாணநான் சாதலைத் தவிர்த்தே
எப்பாலு மெக்காலு மிருத்தலே பெற்றேன்
  என்றோழி வாழிநீ யென்னோடு கூடி
துப்பாலே விளங்கிய சுத்தசன் மார்க்க
  ஜோதியென் றோதிய வீதியை விட்டே
அப்பாலே போகாம லாடேடி பந்து
  அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆ 5

வெங்கேந மரணத்தை விடுவித்து விட்டேன்
  விச்சை யெல்லாங்கற்றென் னிச்சையின் வண்ணம்

எங்கேயு மாடுதற் கெய்தினேன் றோழி
  என்மொழி சத்திய மென்னோடுங் கூடி
இங்கே களிப்பது நன்றிந்த வுலகோ
  ஏதக் குழியி விழுக்கு மதனால்
அங்கே பாராதேநீ ஆடேடி பந்து
  அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆ 6

சிவமே பொருளென் றறிவா லறிந்தேன்
  செத்தாரை மீட்கின்ற திண்மையைப் பெற்றேன்
உவமேய மில்லாத வொருநிலை தன்னில்
  ஒன்றிரண் டென்றதை வுண்மையில் நின்றேன்
தவமே புரிகின்றா ரெல்லாருங் காணத்
  தயவா லழைக்கின்றேன் கயவாதே தோழி
அவமே போகாதென்னோ டாடேடி பந்து
  அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆ 7

துஞ்சாத நிலையொன்று சுத்தசன் மார்க்கச்
  சூழலி லுண்டது சொல்லள வன்றே
எஞ்சாத வருளாலே யான்பெற்றுக் கொண்டேன்
  இறந்தாரை யெல்லா மெழுப்புதல் வல்லேன்
விஞ்சாத வறிவாலே தோழிநீ யிங்கே
  வேதசெய் மாணத்துக் கெதுசெய்வோ மென்றே
அஞ்சாம லென்னோடே ஆடேடி பந்து
  அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆ 8

ஈரமு மன்புங்கொண் டின்னருள் பெற்றேன்
என்மார்க்க மிறவாத சன்மார்க்கந் தோழி
காரமு மிகுபுளிச் சாரமுந் துவர்ப்புங்
கைப்போடே உப்போடே கசப்போடே கூட்டி
ஊரமு துண்டுநீ யொழியாதே அந்தோ
ஊழிதோ றூழியு முலவாமை நல்கும்
ஆரமு துண்டெனன்னே டாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆ 9

துதிசெயு முத்தருஞ் சித்தருங் காணச்
சுத்தசன் மார்க்கத்தி லுத்தம ஞானப்
பதிசெயுஞ் சித்திகள் பற்பல வாகப்
பாரிடை வானிடைப் பற்பல காலம்
விதிசெயப் பெற்றன னின்றுதொட் டென்றும்
மெய்யருட் ஜோதியால் விளைவிப்ப னியவ்
அதிசயம் பார்க்கலா மாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆ 10

அடங்குநா ளில்லா தமர்ந்தானைக் காணற்கே
தொடங்கு நாள் நல்லதன்றோ—நெஞ்சே
தொடங்கு நாள் நல்லதன்றோ. 1

வல்லவ ரெல்லாமும் வல்லானைக் காணற்கே
நல்லநா ளெண்ணிய நாள்—நெஞ்சே
நல்லநா ளெண்ணிய நாள். 2

காலங் கடந்த கடவுளைக் காணற்குக்
காலங் கருதுவ தேன்—நெஞ்சே
காலங் கருதுவ தேன். 3

நடையாது மில்லாத் தலைவனைக் காணற்கே
தடையாது மில்லை கண்டாய்—நெஞ்சே
தடையாது மில்லைகண் டாய். 4

ஞான மருந்திம் மருந்து—சுகம்
நல்கிய சிற்சபா நாத மருந்து ஞான

அருட்பெருஞ் ஜோதி மருந்து—என்னை
ஐந்தொழில் செய்தற் களித்த மருந்து
பொருட்பெரும் போக மருந்து—என்னைப்
புறத்தும் அகத்தும் புணர்ந்த மருந்து- ஞான

எல்லாஞ்செய் வல்ல மருந்து—என்னுள்
என்றும் விடாமல் இனிக்கு மருந்து
சொல்லால் அளவா மருந்து—ஞான
ஜோதி அருட்பெருஞ் ஜோதி மருந்து
சுத்தசன் மார்க்க மருந்து—அருட்
ஜோதி மலையில் துலங்கு மருந்து
சித்துரு வான மருந்து—
சித்தெலாம் செய்யச்செய வத்த மருந்து ஞான

அன்பர்க் கெளிய மருந்து—மற்றை
ஐவர்க்குங் காண்டற் கரிய மருந்து
என்பற்றி லோங்கு மருந்து—என்னை
இன்ப நிலையி லிருத்து மருந்து ஞான

சென்னை துலுக்கானத் தம்மை பதிகம்

விருந்தினர் தம்மை உபசரித்திடவும் விரவுறும் உறவினர் மகிழத், திருந்திய மனத்தால் நன்றிசெய்திடவும் சிறியனேற் கருளுதல் வேண்டும், வருந்திவந்தடைந் தோர்க் கருள்செயுங் கருணை வாரியே வடிவுறு மயிலே, இருந்திசை புகழும் இசைதுலுக் கானத்திரேணுகை யெனுமொரு திருவே.

மனுமுறை கண்ட வாசகம்

1 நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ
நட்டாற்றில் கையை நழுவ விட்டேனோ
2 வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ
வரவு போக்கொழிய வழியடைத்தேனோ
3 தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ
4 கலந்த சிநேகிதரைக் கலகஞ் செய்தேனோ
களவு செய்வோருக்கு உளவு சொன்னேனோ
5 மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ
மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ
6 குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ
குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ
7 ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ
இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்றேனோ
8 உயிர்க்கொலைசெய்வோர்க்குஉபகாரம் செய்தேனோ
ஊன்சுவை யுண்டு உடல்வளர்த்தேனோ

9 பொருளை இச்சித்துப் பொய்சொன்னேனோ
பொதுமண்டபத்தைப் போயிடித்தேனோ
10 ஆசைகாட்டி மோசஞ் செய்தேனோ
அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனோ
11 வேலையிட்டுக் கூலி குறைத் தேனோ
வெய்யிலுக்கொதுங்கும்விருக்ஷத்தை அழித்தேனோ
12 பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ
பகைகொண்டு அயலோர்பயிரை அழித்தேனோ
13 கோள்சொல்லிக் குடும்பங் கலைத்தேனோ
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ
14 கலங்கி ஒளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ
கற்பழிந் தவளைக் கலந் திருந்தேனோ
15 கணவன்வழி நிற்போரைக்கற் பழித்தேனோ
காவல்கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ
16 கருப்ப மழித்துக் களித்திருந்தேனோ
கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ
17 கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தேனோ
குருவை வணங்கக் கூசி நின்றேனோ
18 பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ
பெரியோர் பாட்டில் பிழை சொன்னேனோ
19 கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ
தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ

20 ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ
சிவனடியாரைச் சீறி வைதேனோ
21 சுத்தஞானிகளைத் தூஷணம் செய்தேனோ
மாதாபிதாவை வைது நின்றேனோ
22 தந்தைதாய் மொழியைத் தள்ளிநடந்தேனோ
தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனோ
என்ன பாவம் செய்தேனோ?

குடும்ப கோஷம்

ஆனைமுகந் தனையாறு முகத்தனையைம் முகத்த தனைப்பாலவனைப் பூதச், சேனைமுகத் தலைவனைச் சண்டேசுரனைக் கவுணியகோத் திரநங்கோவைச், சோனைமுகத் தருள்திருத்தாண் டகம்புனைந்த அப்பனை வன்றொண்டந் தேவை, வானைமுகத் தவர் வழுத்தும் வாதவூர் அடிகளையாம் வணங்கி வாழ்வாம்.

கருணைநெடுங் கடலென்கோ, கல்லாலின் அடியமர்ந்த கடவுளென்கோ, அருணகிரிக் கருள்புரிந்த ஆறுமுகக் குருவென்கோ அமுத மென்கோ, மருள் நலிய வரும்பிறவி மருந்தென்கோ அடியேன்கண்மணி யென்கோ மெய்த், தெருள்நிறைந்த சிவகுருவே நின்றனையீண் டெவ்வாறு சிந்திக்கேனே.

உச்சியிலே பிச்சையெடுத் துண்பதுவோ பெரிதெளியேற் கோவா தோடிக் கச்சியிலே பிச்சை கொண்டு காசியிலே நீராடிக் கடிது போகிக், கொச்சியிலே செபமுடிந்துக் கொங்கணைத்தி லேபுசித்துக் கொள்ளென்றாலும், மெச்சியுளே மிகமகிழ்ந்து செய்வேனென் றனைபையா விட்டிடேலே.

குரு தோத்திரம்

திரு ஞானசம்பந்த சுவாமிகள்

சீரார் சண்பைக் கவுணியர்தந் தெய்வ மரபிற் றிகழ்விளக்கே- தெவிட்டா துளத்திற் றித்திக்குந் தேனே யறியாச் செல்வமே, காரார் மிடற்றுப் பவள மலைக் கண்ணின்முளைத்த கற்பகமே-கரும்பே கனியே யென்னிரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே, ஏரார் பருவ மூன்றிலுமை யினிய முலைப்பா லெடுத்தூட்டும்- இன்பக் குதலைமொழிக்குருந்தே யென்னு ருயிருக்கொரு துணையே, பேரார் ஞான சம்பந்தப் பெருமானேநின் றிருப்புகழைப்-பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ் செல்வத்திற் பிறங்குவரே.

திரு நாவுக்கரசு சுவாமிகள்

திருந்தருசீ ரதிகையருட் டலத்தி னோங்குஞ்
சிவக்கொழுந்தி னருட்பெருமைத்திறத்தால்வாய்மை

உருத்தகுமெய் யுணர்ச்சிவடி வாகிச் சைவ
ஒளிவிளங்க நாவரசென் றொருபேர்பெற்றப்
பொருத்தமுற உழவாரப் படை கைக்கொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப் புனிதனே யென்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல்கருதக் கருதுவாயே. 1

அருள் வழங்குந் திலகவதி யம்மை யார்பின்
அவதரித்த மணியே சொல் லரசே ஞானத்
தெருள்வழங்குஞ் சிவநெறியை விளக்க வந்த
செழுஞ்சுடர்மா மணிவிளக்கே சிறியனேனை
இருள்வழங்கும் உலகியனின் றெடுத்து ஞான
இன்னருள் தந் தாண்டருள்வா யின்றே லந்தோ
மருள் வழங்கும் பவநெறியிற் சுழல்வே னுய்யும்
வகையறியே னின்னருட்கு மரபன் றீதே.

ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள்

பேருரும் பரவைமனப் பிணக்கறவெம் பெருமானை
ஊரூரும் பலபுகல வோரிரவில் தூதனெனத்
தேரூருந் திருவாரூர்த் தெருவுதோறும் நடப்பித்தாய்
ஆரூர நின்பெருமை யயன்மாலும் அளப்பரிதே.

மாணிக்க வாசக சுவாமிகள்

வான்கலந்தமா ணிக்க வாசகநின் வாசகத்தை தேன்
நான்கலந்து பாடுங்கால்நற்கருப்பசாற்றினிலே,

கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே.

பெண்சுமந்த பாகப் பெருமா னொருமாமேல்
எண்சுமந்த சேவகன்போ லெய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர்மாறன் பிரம்படியாற் [யனே
புண்சுமந்துகொண்டதும்நின் பொருட்டன்றோ புண்ணி

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே.

திரு அருட் பிரகாச வள்ளலார்

பொன்னாலே சூழுலகம் புகழுகின்ற ராமலிங்கப்
புனித ஞான, மன்னாலே வாய்மலர்ந்த மன் அருட்பா
மாமுறையை மகிழ்வி னொடு, சொன்னாலே நாவினிக்
கும் சேட்டாலே வுளமினிக்கும் துதித்த பேர்க்கு, முன்
னாலே செய்கவினை முற்றொழிந்து கை கூடும் மோக்கந்
தானே.

பாலடி சிற்கொண்டு பைம்பொன்கலத்திற் பரிந்தருந்தி,
மேலடி மெத்தையின் மேலிருந் தாலொரு மேன்மை
யில்லை, ஆலடிவீற்றிருந் தோன்புகழாம்அருட்பாவினுள்ள,
நாலடி கற்றுணர்ந் தால்வரு மேமுத்தி நாடதுவே.

உலகந் தழைக்க வந்துதித்த வுருவே வருக
ஓதாதே-உற்றகலைகளனைத்தினையும் உணர்ந்தோய் வருக
ஒன்றிரண்டற், றிலகும் பரமானந்தசுக இயல்பே வருக
இம்பர் தமை-இறவாக் கதியி லேற்றுகின்ற யிறையே
வருக என்போல்வார், கலகந்தவிர்த்துக் கதியளிக்குங்
கண்ணே வருக கண்ணிறைந்த களிப்பே களிப்பிலூறு
கின்ற கனிவே வருக கலைமதித்தோய், வலகஞ் செறிந்த
வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க-வள்ளலெனு
மோர் மாணிக்க மணியே வருக வருகவே. 3

கருணை நிறைந்து வழியுமருட் கடலே வருக கற்
பகத்திற்-காய்ந்து முதிர்ந்து பழுத்தநறுங்கனியே வருக
கருதுகிற்போர், இருணையுறவேயெறிவிளக்கா மிறையே
வருக வெழுமையினும் இம்மை யம்மைப் பயனளிக்கும்
எந்தாய்வருக இடர்செயுமோர், மரணந் தவிர்த்துவாழ்
வளிக்கு மருந்தே வருக என்னிதய-மலரைமலர்த்தும்
வான்சுடரேசெம் மணியேவருக வழுத்தரிதாம், வருண
நிறைந்த வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க-
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே.

பக்திவரும் பழவினைகள் பறந்தோடும் மூலமலப்
பகுதி மாயும், புத்திவரும் புலைகொலைகள் பறம்போகும்
ஆனந்தம் பொங்கும் சாந்த, முத்திவரும் அழியாநன்
மோக்கமுறும் முதிகடல்சூ ழுலகி லெல்லாச், சித்தி

வரும் இராமலிங்க தேசிகன்றன் அருட்பாவைச் சிந்திப்
போர்க்கே.

வாராத வல்வினைநோய் வந்தாலும் வன்மையொடு
சேராத பாவமெலாஞ் சேர்ந்தாலும்—தீராதென்
றூர்சொன்னு ரெங்களருட் பிரகாசப் பெருமான்
பேர்சொன்னாற் போமே பிணி. 6

செழுந்தமலர்க் குழலுடையாள் சிவகாம வல்லி
யொடு திருமன்றூடும், முழுத் தலைமைத் தனிக்கடவுள்
முளரிமலர்ப்பதமதனில் முயன்றநாளும். அழுத்தமுறும்
இராமலிங்க அண்ணல்நீவாய்மலர்ந்த அருட்பாதன்னில்,
எழுத்தெழுத்து மினிக்குமென்று லென்சொல்கேனின்
சீர்த்தி யென்சொல் கேனே. 7

ஒருதரம் படிக்கி லுடற்பொறி கரணமேய்ந்த உயி
ரனுபவங் கூடும், இருதரம் படிக்கி லெண்ணிலாச்சித்தி
யெய்ந்தரு ளனுபவங்கூடும், மறுதாமதையே முத்தரம்
படிக்கில் மண்ணிறை யனுபவங்கூடும், கருதரும் வள்
ளல் கனிவுட னுரைத்த கவினருட் பாவிலோர் கவியே

பத்திக் கடலே சிவஞான பதியே யென்னற்பாக்
கியமே, முத்திக் கரசே இராமலிங்க முனியே மோன
முழுப்பொருளே, பித்திற் கிடந்தே யறிவழிந்த பேயே
னுன்றருள் பெறவென்றோ, சித்திவளாகத் திருமடத்திற்
றிகழுந் தெய்வத் திருவிளக்கே. 9

ஊர்பா டுவார்சிலர் ஓயாமற் செல்வ முதவி செய்வோர், பேர்பா டுவார்சிலர் பிரியாவிடை யெனும் பெண்கள் குணச், சீர்பா டுவார்சிலர் ஸ்ரீராம லிங்கநற் றேசிகர் போல், ஆர்பா டுவார்கேட்ட போதே புலன்க ளடங்கிடவே. 10

அரும்புமலர் காய்கனிபோ லவ்வவருக் கனுபவமாய் பெரும்புகழ்சேரருட்பாவாம்பெயரியவோர் நூலதனைக் கரும்பு கைக்கும்படி யுரைத்திக்காசினியைக்கனிவித்த தரும்புகழ்சே ரிராமலிங்கத் தலைவாநின் சதுமென்னே.

பாலிற் கலந்த பழம்போ லுருசிக்கும் பாடல்செய்து மேலிற் கலந்தவர் மேம்பாட்டைக்கேட்டுவியத்தலின்றி மேலிற்கலந்தவர்தம்பாட்டைக்கேட்டுமகிழ்வதெல்லாந் தாலிற் கலந்த சுவைவிட்டு திப்பிகொள் தன்மையதே.

தந்தையினுந் தயவுடைய தனிராம லிங்கவருட் டலைவா நின்னை, வந்தனைசெய் கின்றவர்கள் வானுலகத் தின்ப மெலாம் வலிய வெய்தி, இந்திரர்போல் நீண்டிருந் திங் கிறுதிதனி லெவராலு மிசைக்கொ ணாத, சுந்தர மாம் பெரும்போகந் தோய்ந்திருப்பா ரெனிலுன்சீர் சொல்லற் பாற்றோ.

அருள்பழுத்த செழுங்கனியே அகம்பழுத்த சிவ ஞான அமுதே முத்திப், பொருள்பழுத்த அருட்பாவை எமக்களித்த தெய்வமணப் பூவே என்றும், மருள் பழுத்த அடியேங்கள் மனஇருளை அகற்றவரு மணியே

மெய்ம்மைத், தெருள்பழுத்த வடலூர்வாழ் இராமலிங்க நின்னருளைச் சிந்திப்பேனே. 14

பிள்ளைத் தமிழ்

அருளுருக் கொண்டொருவடிவு சிவயோகி வடிவான நின்னரிய முடிமேல்-அங்கே வளர்ந்த சிகை மூன்று பிரிவுள்ளே நின்னரிய தாய் சின்னம் மைநான், அருள் சிவனடிச் சேர்ந்தபின்ன ரொருசிகை கொண்டு அரிய வெண்துகில் மேற்கொளீஇ-அருட் பாதமேற்கு நன்கிரு பாதரட்சை தனை யங்ஙன மசற்றியாளும், இரு ளாறு வ்ளாகமது சித்தியெனு மோரிடமிருந்து கற்பூர தீபம்—ஏற்றி யாராதித்து ஆனந்த மேலீட்டு இனிய கூத்தாடி நின்று, வருமுடல் மறைத்து வெளியான அரசே வருக வருக நல்லரிய சித்தி—வண்மையருள் திருவருட் பிரகாசவள்ளலே வருக என்மணி வருகவே.

சீரார் கருணைக் கற்பக நற்றெய்வத் தருவே வருக அருட் செம்மல் வருக மன்பதைக்கோர் தெய்வப்பொரு ளே வருகபவத், தீராப் பிணிக்கட் டவித்து மயல் தீர்த்து கதிதந்தருளு மென்றுந்-தெவிட்டாதென்னுட் டித் திக்குந் தெய்வக்கனியே வருக நல்ல, ஏரார் பிரம வெளிக்குள் வள ரினிய சச்சிதா னந்த இன்பக்கடலே வருக வென்னு ளினிக்கு மெந்தாய் வருகவெழில், தாரார்சோலை புடைவளரக்காக்கும் வடலூரரசேயெங் கண்ணே வருக இராமலிங்கக் கருணாநிதியே வருகவே

சினத்தை யவித்த சித்தரெலாஞ் செப்பு மிராம
லிங்கமெனுங் கனத்த யோக தற்பரனின் கனிவாய்
மலர்ந்த வாசகந்தான், தனத்தி னிடத்துந் தனமுடை
யார் தங்க ளிடத்துந் தாவுகின்ற, மனத்தை யொழித்திங்
கன்பையொரு மலைபோல் வளரச் செய்திடுமே.

கிழக்குவெளுத் ததுகருணை யருட்ஜோதி யுத
யங் கிடைத்ததுஎன துளக்கமலங்கிளர்ந்ததுஎன தகத்
தே, சழக்குவெளுத் ததுசாதி யாச்சிரமா சாரஞ், சமய
மதா சாரமெனச் சண்டையிட்ட கலக, வழக்குவெளுத்
ததுபலவாம் பொய்ந்நூல்கற் றவர்தம் மனம்வெளுத்து
வாய்வெளுத்து வாயுறவா தித்த, முழக்குவெளுத் தது
சிவமே பொருளெனுஞ்சன் மார்க்க முழுநெறியிற்
பரநாத முரசுமுழங் கியதே.

போதெலாம் வீணிற் போக்கி ஏமாந்த புழுத்தலைப்
புலையர்கள் புரைக்குஞ், சூதெலாங் கேட்குந் தொறு
முளைப் பரவுந் துயர்கள் மனமது துளங்கித், தாதெலாங்
கலங்கத் தளருத லழகோ தனியருட் ஜோதியா லிந்த,
வாதெலாந் தவிர்த்துச் சுத்தசன்மார்க்கம் வழங்குவித்த
ருளுக விரைந்தே.

உள்ளலே னுடையா ருண்ணவும் வறியார் உறு
பசி யுழந்துவெந் துயரால், வள்ளலே நெஞ்சம் வருந்த
வும் படுமோ மற்றிதை நினைத்திடுந் தோறும், எள்ளலே

னுள்ள மெரிகின்ற துடம்பும் எரிகின்ற தென்செய்வே
னந்தோ, கொள்ளலே னுணவுந் தரிக்கிலே னிந்தக்
குறையெலாந் தவிர்த்தரு ளெந்தாய்.

பித்தெலா முடைய வுலகர்தங் கலகப் பிதற்
றெலா மென்றொழிந் திடுமோ, சத்தெலா மொன்றென்
றுணர்ந்தசன் மார்க்க சங்கமென் றோங்குமோ தலைமைச்,
சித்தெலாம் வல்ல சித்தனென், றறுமோ தெரிந்திலே
னெனத்துயர்ந் திருந்தேன், ஒத்தெலா முனது திருவுள
மறிந்த துரைப்பதென் னடிக்கடி யுனக்கே.

கள்ளவா தனையைக் களைந்தருள் நெறியைக்
காதலித் தொருமையிற் கலந்தே, உள்ளவா றிந்த வுல
கெலாங் களிப்புற் றோங்குத லென்றுவந் துறுமோ,
வள்ளலே யதுகண்டடியனே னுள்ளம் மகிழ்வதென்றோ
வெனத் துயர்ந்திருந்தேன், ஒள்ளியோய் நினது திரு
வுள மறிந்த துரைப்பதென் னடிக்கடி யுனக்கே.

ஏதாகு மோவெனநா னெண்ணி யிசைத்தவெலாம்
வேதா கமமென்றே மேலணிந்தான் --பாதார
விந்த மெனதுசிர மேலமர்த்தி மெய்யளித்த
எந்தை நடராஜன் இசைந்து.

இன்னுரையன் றென்றுலக மெலாம் அறிந்திருக்க
வென்னுரையும் பொன்னுரையென் றேயணிந்தான் தன்
னுரைக்கு, நேரொன்று னீடுலகில் நின்போ லுரைக்க
வல்லார், ஆரென்று னம்பலவ னுய்ந்து.

மதிமண்ட லத்தமுதம் வாயார வுண்டே
பதிமண்ட லத்தரசு பண்ண—நிதிய
நவனேய மாக்கும் நடராஜ னேயெஞ்
சிவனே கதவைத் திற. 1

இந்நா ளருளமுதம் யானருந்தல் வேண்டுமிங்கே
நந்தா மணிவிளக்கே ஞானசபை—எந்தாயே
கோவே யெனது குருவே யெனையாண்ட
தேவே கதவைத் திற. 2

சாகா அருளமுதந் தானருந்தி நான்களிக்க
நாகா திபர்சூழ் நடராஜா—ஏகா
பவனே பரனே பராபரனே யெங்கள்
சிவனே கதவைத் திற. 3

அருளோங்கு தண்ணமுதம் அன்பா லருந்தி
மருணீங்கி நான்களித்து வாழப்—பொருளாந்
தவநேயர் போற்றுந் தயாநிதியே யெங்கள்
சிவனே கதவைத் திற. 4

வானோர்க் கரிதெனவே மாமறைகள்சாற்றுகின்ற
ஞானோ தயவமுதம் நானருந்த—ஆனாத்
திறப் பாவலர்போற்றுஞ் சிற்றம் பலவா
சிறப்பா கதவைத் திற. 5

எல்லாமும்வல்லசித்தென் றெல்லா மறைகளுஞ்
கல்லா ரமுதமது நானருந்த—நல்லார்க்கு [சொல்

நல்வாழ் வளிக்கும் நடராயா மன்றோங்கு
செல்வா கதவைத் திற 6

ஏழ்நிலைக்கு மேற்பா லிருக்கின்ற தண்ணமுதம்
வாழ்நிலைக்க நானுண்டுமாண்புறவே—கேழ்நிலைக்க
ஆவாவென் றென்னையுவந்தாண்ட திருஅம்பலமா
தேவா கதவைத் திற. 7

ஈன வுலகத் திடர்நீங்கி இன்புறவே
ஞான அமுதமுது நானருந்த—ஞான
உருவே உணர்வே ஒளியே வெளியே
திருவே கதவைத் திற. 8

திரையோ தசத்தே திகழ்கின்ற வென்றே
வரையோது தண்ணமுதம் வாய்ப்ப—உரையோது
வானேயெம் மானேபெம் மானே மணிமன்றிற்
றேனே கதவைத் திற. 9

ஜோதிமலை மேல்வீட்டிற் றூயதிருவமுதம்
மேதினிமேல் நானுண்ண வேண்டினேன்-ஓதரிய
ஏகா அனேகா எழிற்பொதுவில் வாழ்ஞான
தேகா கதவைத் திற. 10

ஜோதி

ஜோதிஜோதி ஜோதிசுயஞ் ஜோதிஜோதி ஜோதிபரம்
ஜோதிஜோதி ஜோதியருள் ஜோதிஜோதிஜோதிசிவம்

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞான ஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாத ஜோதி
ஏமஜோதி வியோமஜோதி யேறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி யேகஜோதி யேகஜோதி யேகஜோதி 2

ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதி ஞான போதனே வாழ்க வாழ்க நாதனே

நிதியே யெனுள்ள நிறைவே பொதுவில் நிறைந்த சிவ, பதியே அருட்பெருஞ் ஜோதியனே அம் பலம் விளங்குங், கதியே யென்கண்ணுங் கருத்துங் களிக்கக் கலந்துகொண்ட, மதியே அமுதமழையேநின் பேரருள் வாழியவே.

வாழியென் னுண்டவன் வாழியெங் கோனருள் வாய்மையென்றும், வாழியெம் மான்புகழ்வாழியென் னைதன் மலர்ப்பதங்கள், வாழிமெய்ச் சந்தசன்மார்க்கப் பெருநெறி மாண்புகொண்டு, வாழிஇவ்வையமும் வானமும் மற்றவும் வாழியவே. 3

வாழி யெனைத்தூக்கி வைத்த கரதலங்கள்
வாழி யெலாம் வல்ல மணிமன்றம்—வாழிநடம்
வாழி அருட்ஜோதி வாழி நடராஜன்
வாழி சிவ ஞான வழி.

குற்றம்புரிதல் எனக்கியல்பே குணமாக்கொள்ளல் உனக்கியல்பே, சிற்றம்பலவா இனிச்சிறியேன் செப்பும் முகமன் யாதுளது, தெற்றென் றடியேன் சிந்தைதனைத் தெளிவித்தச்சந் துயர் தீர்த்தே இற்றைப் பொழுதே அருட்ஜோதி ஈகதருணம் இதுவாமே.

—:o:—

அருட்பெருஞ்ஜோதி

திரு அருட்பிரகாச வள்ளலார் சித்திவளாகத்தில்
திருக்காப்பிட்டுக் கொண்டகாலத்தில்

அருளிய திருப்பாடல்

திருச்சிற்றம்பலம்

பிச்சுலகர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
இச்சையெல்லாம் எய்தஇசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாம் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும் பேரானந்த நித்திரை செய்கின்றேனே.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

அகராதி

அக்கநுதற் 129
அஞ்சாதே 233
அஞ்செழுத் 126
அடங்குநாளி 262
அடிமைசெ 41
அடியனேன் 46
அணியே 215
அண்டங்கள்ப 21
அண்டமெலா 33
அண்ணுவே 66
அண்ணுவோ 86
அத்தாநான் 167
அப்பாநான்பற் 169
அப்பாநான் 166
அமராவதி 64
அமைவறிந்தி 131
அம்பரத்தே 44
அம்பலத்தா 221
அம்பலத்தி 238
அரிதாகி 22
அருட்சோதி 177
அருட்பெருஞ் 141
அருட்பெரு 146
அரும்புமலர் 272
அருளருவிவ 31
அருளா நா 166
அருளாரமு 91
அருளுருக் 273
அருளுடைய 49
அருளோங்கு 276
அருள்பழுக் 128
அருள்பழுத் 272
அருள்வழங் 268
அருள்விளக் 174
அருள்வெளி 41
அலங்கரிக் 54
அல்விலங்கு 39
அவநாள்கழி 83
அவலவயிற் 76
அழியா 79
அழுதபிள் 122
அளவிறந்த 21
அளவையெ 31
அறப்பழுக் 220
அற்புதம்அற் 251
அன்பர்திரு 48
அன்புடைய 180
அன்புடனி 129
அன்பெனும் 4
அன்னேயெ 63
அன்னேமுத 67
அன்னேயப் 135
அன்னேயினு 38
ஆகமாந்தரு 210
ஆடாதீர்சற் 211
ஆடியபாதம் 249
ஆடேடிபந்து 259
ஆணிலேயன் 61
ஆணிப்பொ 253
ஆண்டநின் 133
ஆதிநீதிவே 278
ஆயுரைத்த 203
ஆறடுத்துச் 116
ஆறகோடி 210
ஆறுமுகங் 77
ஆறுமுகப்பெ 74
ஆற்றவெள் 201
ஆனேறம்பெ 37
ஆனேமுகத்த 266
இகவா 78
இசைத்திடவு 158
இதுநல்லதரு 247

இந்தாரருள 276
இந்தியமாய்க் 20
இப்பாரிலுட 158
இப்பாரிலெ 107
இயற்கையி 145
இரவுவிடிந்த 55
இருட்சாதி 172
இருளானம 172
இல்லேயென் 123
இளவேனின் 193
இறகெடுத்த 207
இறந்தவர் 203
இறந்திறந்தே 50
இறையே 83
இன்றுவருமோ 3
இன்றேபக 105
இன்னந்தய 243
இன்னும்பற் 120
இன்னுரை 275
ஈயென்றுநா 98
ஈனவுலகத் 277
உச்சியிலே 267
உடல்குளிர 33
உடுக்கவோ 207
உடையாயுன் 127
உணிக்குழூ 209
உண்டியே 155
உண்ணுடும் 113
உப்பிருந்த 105
உம்பர் 119
உயிரெலாம் 210
உயிர்க்கொ 176
உய்குவித்து 40
உய்வண்ண 82
உருமலியுலகி 162
உருவராகியு 207
உருத்திரர்நா 36
உருவாகிஉரு 23
உருவத்திலே 108
உலகம்பரவு 85
உலகம்புாக் 218
உலகநிலேமுழு 17
உலகந்தழை 270
உலகமெலா 18
உழக்கறியீர் 202
உழலுற்றஉ 101
உளமெனது 103
உள்ளமனக் 70
உள்ளலேன் 274
உற்றமொழி 199
உன்புடைநா 50
உன்னேமறந் 170
ஊராதியிகழ் 71
ஊர்தருவார் 109
ஊர்பாடுவா 272
ஊர்மதிக்க 115
ஊழையகற் 115
எங்குமாய் 149
எண்ணியகம் 47
எண்ணுறவி 184
எத்திக்குமெ 103
எத்துணேயு 206
எந்தவகை 154
எந்தைபிரான் 74
எந்தையே 118
எந்நாள்கரு 154
எந்தைநினே 99
எம்பெருமான் 43
எம்மதநிலேயு 182
எம்மைவாட் 121
எய்தற் 78
எய்ப்பறஎன 190

எய்வகைசார்	202	ஒருதரம்படி.	271	கருணைநெடு	266
எல்லாஞ்செய்	178	ஒருபிரமன	188	கருணையிலா	193
எல்லாமும்வ	276	ஒருமைபுட	97	கருணையுஞ்	165
எவ்வுயிரும்	206	ஓடுகின்றன	121	கருணையே	163
எவ்வுயிர்த்தி	162	ஓயாதுவருமி	68	கருணையொ	206
எழுவகை	185	ஓவாதுண்டு	181	கருதாயோ	111
எழுவினும்	149	கடலமுதே	215	கருதெனவ	123
எனக்குமுன	229	கடுகுஆட்டுக்	203	கருமையாம்	132
எனையறியப்	43	கட்டாலும்க	205	கருவிற்கல	181
எனையா	84	கட்டோடே	200	கரைசேரப்	159
என்னரசே	39	கண்டதெலா	197	கலைபயின்ற	218
என்னிரு	91	கண்ணப்பா	117	கலைத்தொழி	149
என்போன்ம	107	கண்ணனே	127	கலைநிறைகண	62
என்றுகின்ன	134	கண்ணாரமு	118	கலையுரைத்த	51
என்றே	83	கண்ணுடை	44	கல்லாயமன	53
என்னுயிர்நீ	37	கண்ணே	180	கல்லார்க்கித	116
ஏகமோவன்	148	கண்ணேயக்	216	கல்லார்க்கும்	175
எட்டாலும்	108	கண்மயக்கும்	47	கல்லைபுமுரு	191
எதற்குமோ	275	கண்முதற்	147	கல்லென்கோ	106
எழ்நிலைக்கு	277	கண்மூன்று	63	கல்வியெலாங்	74
ஐயநின்சீர்	100	கரணமெலா	159	களக்கமறப்	160
ஒன்றுதலே	110	கருணைநிறை	17	கள்ளநெஞ்சக	61
ஒப்பாருமில்	118	கருணைநி	270	கள்ளவாத	275

கள்ளுண்ட	117	குலத்திடை	150	சகமாகிச்	24
கள்ளுண்டா	183	குலவுபேர	146	சகமாறுடை	88
கள்ளுண்டா	184	குறவர்குடி	244	சகலமாய்க்	23
கள்ளுருகும்	138	குறித்துரை	198	சங்குடையா	114
கறிபிடித்த	77	குற்றம்புரித	279	சத்தசத்தியன்	59
கற்பங்கள்பல	35	கூட்டுவிக்	117	சந்ததம்என	187
கற்பூரங்	182	கூம்பாதமெ	42	சற்சபைக்கு	161
கற்றதென்று	227	கூழுக்கழு	77	சன்மார்க்க	208
கற்றவளை	41	கூறுகின்ற	51	சாகா அருள	276
காசமேகங்	81	கூறுவதோ	220	சாதியிலே	200
காடுவெட்டி	201	கையறவி	256	சார்ந்த	79
காட்சியே	30	கையுறவீசி	164	சிங்கமாமுக	90
காட்டுயரனை	165	கைவிடமா	255	சிந்தைமயங்	112
காட்டையெ	168	கோடியவ	176	சிரிப்பிலே	205
காமவுட்ப	95	கொம்மியடி	240	சிற்பகன்	65
காயெலாங்	190	கொலைபல	169	சினைப்பள்ளி	53
காராயவண்	219	கொலைபுரி	175	சினத்தை	274
காலையிலே	177	கொள்ளைவி	177	சித்தமணி	135
காற்றுலே	208	கொள்ளுண்ட	64	சீரார்கருணை	273
கானமேயுழ	152	கோடாமே	118	சீரார்சண்	267
கானல்நீர்	59	கோடையிலே	174	சீரார்வளஞ்	139
கிழக்குவெளு	274	கோதகன்ற	31	சீரிடம்பெறு	157
கீரையேவிரு	154	கோலக்குற	92	சீர்கொண்ட	63
குணம்பூதை	204	கோவேளண்	27	சீர்கொண்ட	215

சீர்சான்றவே 105
சீர்தருவார் 135
சீர்பூத்த 65
சுத்தவேதாந் 147
சூதுமன்னு 226
சூரிட்டந 212
செஞ்சடை 37
செத்தாரை 210
செய்தாலுந் 193
செழுத்தமல 271
சேய்போல் 207
சேருமுக்கட் 79
சொல்லுகி 106
சோறுவே 156
சோற்ருசை 203
சோற்றிலே 154
ஜோதிஜோதி 277
ஜோதிமலை 277
ஜோதியுட் 232
ஞாலமேலாம் 75
ஞாலமே 29
ஞாலவாழ் 85
ஞானமணி 160
ஞானமரு 263
தங்கமேய 162
தஞ்சமென் 60
தடக்கைமா 59
தடித்தவோ 161
தணிகாசலம் 73
தணிகைமலை 73
தண்ணமுத 32
தத்துவம 148
தத்துவமே 29
தந்தைதாய் 116
தந்தையினு 272
தந்தையுந் 155
தம்பிரான் 133
தம்மைமறந் 46
தருணமிஞ் 159
தவமுண்மை 87
தவராயினு 111
தவளமலர்க் 218
தனித்தனி 174
தன்னையறி 239
தாயாகிந்த 178
தாயாகினு 108
தாயிலாரெ 125
தாயின்மே 124
தாயுமென் 156
தாயேமிகவு 217
தாய்கொண் 160
தாய்க்குமி 115
தாய்தடை 138
தாருகப்பத 90
தாவுமானெ 151
தாவுமா 151
திக்குமா 119
திங்களங் 62
திடனுன் 139
திரப்படுந் 125
திருக்கதவந் 49
திருத்தகுசீ 267
திருத்தகு 52
திருநாள்நினை 216
திருமகளெம் 219
திருமாலும் 215
திருவிளங்க 3
திருவுங்கல் 60
திருவுடை 167
திருவுளந்தெ 136
திருவோங் 93
திரைபடா 125

திரையோ 277
திவசங்கடோ 86
தீதறிவேன் 113
தீதுசெய்த 134
தீதுசெய்தா 217
தீதுநினைக் 153
தீராத துயர் 66
தீவினை நல் 43
துங்கவெ 126
துச்சிலைவி 123
துண்ணெண 165
துப்பாடுதி 140
துப்பாடுதிரு 140
துயிலேறி 87
துற்குணமா 52
துன்னு 79
தூக்கமுமுன் 117
தூங்குகின் 152
தூண்டாத 178
தூயநெஞ்சி 156
தெண்டனி 241
தெய்வங் 173
தேசுலாவி 124
தேசுவிரித்து 26
தேடேனே 81
தேட்டிலே 164
தேருப் 87
தேவரேமுத 86
தேவேசின் 129
தேனென 124
தேனேயுள 82
தொடுக்க 169
தொண்டா 203
தொல்லைக்கு 76
தொழுகின் 128
தோடுடை 110
தோற்றமி 106
தோன்ரு 80
தோன்றுது 19
தோன்றுபர 36
நசைத்தமே 147
நடுநாடிநடு 227
நண்ணுத 83
நண்ணேனே 80
நம்பனை அழி 111
நம்பினேனி 126
நயத்தாலுன 153
நலமேவு 82
நலிதருசிறிய 164
நல்காதசுனர் 64
நல்லமருந்திம் 235
நல்லோர்மன 264
நறைமணக்கு 115
நற்ருயும் 47
நன்றறியேன் 84
நன்னுலுங்க 181
நன்னெறிசே 112
நாதருங்கட 59
நாதாந்தபோ 187
நாடுந்தாயினு 133
நாவினுலுனை 61
நானுரைக்கு 198
நான்கொண் 104
நான்படும்பாடு 107
நான்மறந்தே 171
நிதியேஎன் 278
நிதியைநினை 138
நித்தனைத்தா 111
நிலையுறும்நி 96
நில்லாவுடம் 113
நிறையணிந்த 139
நினைந்துநினை 197

நின்மயமா	20	பத்திவரும்ப	270	புண்ணைக்கட்	209
நின்னிருதாள்	76	பாமேதுவி	94	புண்படாவுட	168
நீடுகின்ற	137	பானளிக்கு	205	புலைத்தொழி	205
நீண்டமாலர	60	பரிகலத்தே	172	புல்லவரே	183
நீயேயெனது	216	பற்றறியா	34	புற்றேருங்கும்	48
நீருண்டு	102	பற்றுவதுப	186	புன்செய்கை	113
நீறணிந்து	214	பனம்பழமே	182	புன்புலாலுட	163
நெஞ்சறி	196	பன்னரும்வன்	67	பூதமே	28
நேயானுகூல	217	பன்னிருகண்	75	பூமாந்தும்வ	114
நோராவழுக்கு	137	பாங்குளநாம்	35	பூவேமணமே	92
நோவாது	211	பாடற்கினிய	110	பெட்டியிதி	171
படமாட்டே	173	பாடுகின்றே	116	பெண்கொண்	192
படமுடியா	170	பாட்டுவித்தா	158	பெண்சுமந்த	269
படிப்படக்கி	179	பாண்டவர்	220	பெண்மணி	116
பட்டிமாடெ	89	பார்கொண்ட	99	பெருமைநிதி	78
பணிகொள்	131	பார்த்தாலும்	175	பெற்றதம்	161
பணிந்தறி	180	பாலடிசிற்	269	பெற்றதாய்	119
பண்ணுதநீ	200	பாவிமனக்குர	167	பேராயஅண்	35
பண்ணுலுன்	132	பாவவினை	70	பேருற்றவுல	189
பண்ணேறு	67	பிச்சுலகர்	279	பேரூரும்பர	268
பண்ணேனி	35	பிட்டுக்கும்வ	109	பையார்பா	140
பதியேயெங்	80	பித்தப்பெரு	89	பொங்குபல	33
பதியேயெம்	179	பித்தெலாமு	275	பொதுநட	183
புத்திக்கட	271	பிறந்தவரை	204	பொய்யாத	211

பொய்விளக்	201	மதம்பிடித்தவ	54	மானெழுந்தா	108
பொருந்தியீ	130	மதிமண்டலத்	276	மான்றுமுலக	106
பொருளி	63	மதியணிந்த	39	மின்போலும்	107
பொழுதுவி	52	மத்தனைவன்	112	மின்போல்வா	114
பொற்குன்	26	மத்தேதறியலை	38	மின்னுளுமி	68
பொன்மலை	45	மந்திரமாய்ப்	25	மின்னைநிகர்	72
பொன்னுகி	22	மருந்தறியே	153	முடியாமுத	91
பொன்னுசை	117	மருவானைப்	136	முதவோ	84
பொன்னுலை	269	மலங்கு	121	முந்தைவினை	72
பொன்னின்	106	மலைமேலும்	25	முருகாவெ	89
பொன்று	45	மறைமுடிக்கு	60	முன்னவனே	58
பொன்னைம	115	மறைமுடிவி	138	மூவரையளி	111
போற்றேனே	65	மற்றறிவோ	199	மெய்யுணாந்	34
போதெலாம்	274	மனமெனு	197	மெய்விளக்	137
மக்கட்பிறவி	81	மன்னுயிர்க்கு	139	மைப்படியு	112
மஞ்சேர்பிணி	87	மன்னுருத்தி	131	யாரினுங்க	157
மணிக்கதவங்	49	மாணிக்கஞா	63	யோகமே	29
மணியேகலா	82	மாணேயத்தவ	28	வஞ்சமிலார்	127
மணியேதினை	64	மாயையெனு	213	வட்டவொன்	168
மண்ணுளாதி	219	மாலுந்துஞ்சு	122	வண்ணப்ப	110
மண்ணினுல்	69	மாலெலந்திய	86	வர்தாள்வா	71
மண்ணுலகதி	163	மாறுதவன்பி	113	வருகணத்து	45
மண்ணேயும்	118	மாற்றறியாத	196	வருமுயிரிரக்	166
மதத்திலேய	151	மானுகிமோகி	25	வருவாரழை	284

வள்ளலுனை	95	வாவென்பாரி	71	விண்படைத்	135
வனமெழுந்	109	வாழாதவண்	69	விதியாகியரி	24
வன்கொடுமை	40	வாழிநின்சே	217	வித்தாகிமுளை	18
வன்புகலந்து	32	வாழியெனைத்	278	விழியைத்து	151
வன்மைசெய்	120	வாழியென்று	278	விளக்கறியா	150
வாசகமாய்	23	வாழையடி	170	வீட்டுக்கடங்	114
வாடியபயிரை	164	வாளேய்கெடு	108	வீறுடையாய்	62
வாட்டமிலா	269	வானத்தின்	258	**வெம்புமுயிர்**	76
வாணுளடை	217	வானேஅவ்	27	வெவ்வினைக்	213
வாதுபேசிய	209	வான்கலந்த	268	வெள்ளம் அ	42
வாயாகிவாயிற	21	வான்தேட	216	வெறிபிடிக்	130
வாராதவல்வி	271	வான்மாறினு	109	**வேதப்போ**	93
வாராவிரு	78	**விடுமாட்டிற்**	73	வேதாகமங்	210
வாரீர்சிதம்	281	விண்ணப்பக்	194	வேதாந்தநிலை	19
வாரும்வாரும்	56	விண்ணே	27	வேல்கொண்	65

பிரபஞ்ச வெற்றி

அருட்ஜோதி யானேனென்ற றையப்பா முரசு
அருளாட்சி பெற்றேனென் றறையப்பா முரசு
மருட்சார்பு தீர்ந்தேனென் றறையப்பா முரசு
மரணந் தவிர்ந்தேனென் றறையப்பா முரசு
அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங் கருணை.

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை. 11-2-1941.

4

வெளியீடு

[illegible]

7-99, [illegible]

[illegible] (S.P.) வெளியீடு